விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii


பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 25 வெள்ளிக்கிழமை (11.11.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 327

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# மீனவர் தாக்கப்படுவதை கண்டித்தார் மன்மோகன்

## தடுக்குமாறு மகிந்தவிடம் கோரிக்கை



(அட்டு)

**இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துரையாடியுள்ளார்.**

மாலைதீவின் அட்டு நகரில் நடைபெறும் 17ஆவது சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள சென்றுள்ள இவ்விரு தலைவர்களும் நேற்று வியாழக்கிழமை சந்தித்த போதே இக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. 45 நிமிட நேரம் நடைபெற்ற இச்சந்திப்பின் போது இடம் பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வு குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஷாங்கிரி லா ஹோட்டலில் இச்சந்திப்பு நடைபெற்றது. இதில் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்து இந்தியப் பிரதமர் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

# ஹெல உறுமய, ஜே.என்.பியை கண்காணிக்கிறது அரசு

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.என்.பி ஆகிய இரண்டு கட்சிகள் தொடர்பிலும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு விசேட கவனம் செலுத்தி வருவதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிங்கள பௌத்த கட்சியான ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி.யிலிருந்து பிளவடைந்த விமல் வீரவன்ச தலைமையிலான ஜே.என்.பி ஆகிய கட்சிகள் சொத்துக்களை தேசிய மயப்படுத்தும் சட்டம் தொடர்பான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

சொத்துக்களை தேசிய மயப்படுத்தும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஜாதிக ஹெல உறுமய கட்சி பகிரங்கமாக எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாக்கெடுப்பில் சட்ட மூலத்திற்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 46 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி, மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் எதிராக வாக்களித்தன. இதே வேளை ஜே.என்.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சி ஆகியன வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. (எ-1)

# எங்கு சென்றாலும் இலங்கை வரவேண்டும்

## கூட்டமைப்புக்கு அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மேற்கொண்ட அமெரிக்க விஜயமானது இலங்கை அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் தாக்கத்தை ஏற்படுத்தாது. அவர்கள் நாடு திரும்பியதும் அவர்களுடன் பேச்சு நடத்த அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எங்கு விஜயம் மேற்கொண்டு யாருடன் பேச்சு நடத்தினாலும் இறுதியில் தீர்வு விடயத்தில் தமது நாட்டு அரசாங்கத்துடனேயே பேச்சு நடத்த வேண்டும் என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவேண்டும்.

அதாவது வடக்கு கிழக்கு மாகாண மக்களும் இலங்கை மக்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு எவ்விதமான அநீதியும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது.

கூட்டமைப்பினர் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டமையானது அரசாங்கத்துடனான (19ஆம் பக்கம் பார்க்க)


# உடைப்பதற்கு தயாராகும் இந்திய உதவித்திட்ட வீடு!

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசினால் வழங்கப்பட்ட 50 ஆயிரம் வீடுகள் திட்டத்தில் அரியாலை நாவலடியில் கட்டப்பட்ட வீடு ஒன்று அமைப்பு பிழை காரணமாக கைவிடப்பட்டு அதன் அருகே வேறொரு வீடு கட்டப்பட்டுகின்றது. அத்துடன் முன்னர் கட்டப்பட்ட வீட்டை உடைப்பதற்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து இந்திய வீட்டுத்திட்டத்தை ஆரம்பித்து வைத்த நிகழ்வு அரியாலை நாவலடியிலேயே இடம் பெற்றுள்ளது.

இந்நிலையில் குறித்த (19ஆம் பக்கம் பார்க்க)



# புத்தளத்தில் ஆயுதங்கள் மீட்பு

(புத்தளம்)

புத்தளம் பிரதேசத்தில் பொலிஸார், இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து நேற்று வியாழக்கிழமை மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது ஒரு தொகை ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சோதனை நடவடிக்கை நேற்று காலை 5 மணி தொடக்கம் 10 மணி வரை புத்தளம் வான் வீதி, மலேரியா அலை வீதி மற்றும் மன்னார் வீதியின் ஒரு பகுதியில் மேற்கொள்ளப் பட்டது. (20ஆம் பக்கம் பார்க்க)

# யாழின் அபிவிருத்திக்கான நிதியை வழங்க உலகவங்கி பின்னடிப்பு!

## உரிய முறையில் கணக்கு சமர்ப்பிக்கவில்லையாம்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியினால் வழங்கப்பட்ட நிதிக்கு புதிய முறையில் கணக்குகள் காட்டப்படாததினால் இரண்டாம் கட்ட நிதியை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக என்றிப் திட்டத்தின் பணிப்பாளர் எஸ்.எஸ்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உலக வங்கியினால் முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு நேற்று வருகைதந்த உலகவங்கி பிரதிநிதிகள் குழு யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை மாவட்டச் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், என்றிக் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதி உதவியுடன்வட மாகாணத்தில்பல்வேறுவேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டங்களுக்காக முதலாம் கட்டமாக 1500 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் வேலைகள் இடம்பெற்றதற்கான கணக்குகள் இதுவரை காட்டப்படாத நிலையில் இரண்டாம் (20ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்றுக்காலை நாடு திரும்பினர்

(கொழும்பு)

அமெரிக்கா, கனடா மற்றும் பிரித்தானியாவுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வரும் நேற்றுக்காலை நாடு திரும்பினர்.

இந்தப் பயணத்தின்போது இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு திட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து பல்வேறு தரப்பினருடனும் ஆராய்ந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இச்சுற்றுப் பயணத்தின்போது முதலில் அமெரிக்கா சென்றிருந்த கூட்டமைப்பினர் அங்கு இராஜாங்க திணைக்கள அதிகாரிகள் கனடாவின் (20ஆம் பக்கம் பார்க்க)

# கிளி.கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் புலனாய்வுப் பிரிவினரால் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலய சங்கீதப்பாட ஆசிரிய ஆலோசகர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சுதுமலையில் உள்ள அவரது வீட்டுக்கு அப்பகுதி கிராம சேவையாளருடன் சென்ற புலனாய்வுப்பிரிவினர் அவரை அழைத்துச் சென்றதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அவரது மனைவி முறையிட்டுள்ளார்.

சுதுமலையைச் சேர்ந்த குணவீரசிங்கம் கோகுலன் (வயது 33) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

கிளிநொச்சியிலுள்ள ஒருவரை அடையாளம் காட்டவென தனது கணவரை அழைத்துச்சென்றதாக (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முல்லைத்தீவு, மன்னார் அரச அதிபர்களின் இடமாற்றம் அநீதியான நடவடிக்கை

## விஜயகலா எம்.பி. கடிதம்

(கொழும்பு)

மன்னார், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் மன்னார் மாவட்டத்திற்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த இடமாற்ற நடவடிக்கையினை இரத்துச் செய்ய வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்பேசும் மக்கள் செறிந்து வாழும் மன்னார் மாவட்டத்திற்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரை அரசாங்க அதிபராக நியமித்தமை தவறான செயற்பாடாகும். இவ்விடயம் தொடர்பிலும் கவனம் செலுத்தி தமிழ் பிரதேசங்களுக்கு தமிழ் பேசும் அரசாங்க அதிபர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகன், முல்லைத்தீவு மவட்டத்திற்கும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் பத்திநாதன் மொனராகலை மாவட்டத்துக்கும் இடமாற்றப்பட்டுள்ளதுடன் மன்னார் மாவட்டத்திற்கு அரசாங்க அதிபராக இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவில் கடமையாற்றிய சரத் ரவீந்திர நியமிக்கப்பட்டுள்ளார். இந்த இடமாற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ண, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே திருமதி விஜயகலா மகேஸ்வரன் எம்.பி மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

இவ்விடயம் குறித்து பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ணவுடன் நேற்று தொலைபேசியிலும் தொடர்பு கொண்ட பாராளுமன்ற உறுப்பினர், இடமாற்றங்களை இரத்துச் செய்ய வேண்டுமெனக் கோரியுள்ளதுடன் மன்னார் மாவட்டத்திற்கு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த ஒருவரை அரசாங்க அதிபராக நியமித்தமைக்கும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்த இடமாற்றங்கள் வழமையான நடைமுறை என்றும் அதற்கிணங்கவே இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் மன்னார் மாவட்டத்தில் பதில் அரசாங்க அதிபராக தமிழர் ஒருவரை நியமிக்க முடியும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச)

## சிகிச்சை பலனின்றி குடும்பஸ்தர் உயிரிழப்பு

மரத்தால் விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

கடந்த 6ஆம் திகதி தனது வீட்டிலுள்ள மரம் ஒன்றில் ஏறி கிளைகளை வெட்டிக் கொண்டிருந்தபோது தவறி விழுந்து படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

நல்லூரைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான பொ.மகேந்திரம்(வயது 36) என்பவரே உயிரிழந்தவராவார். (எ-6)

## நோயால் பாதிக்கப்பட்ட குழந்தை உயிரிழப்பு

மஞ்சள் காமாலை நேயால் பாதிக்கப்பட்ட குழந்தை நேற்று உயிரிழந்துள்ளது.

சிறுப்பிட்டியைச் சேர்ந்த நிமல்ராஜ் றிமியா (வயது 01) என்ற பெண் குழந்தையே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் பிற்பகல் 5.30 மணியளவில் உயிரிழந்துள்ளது. இக்குழந்தை பிறப்பு முதலே மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-6,11)

## விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

விபத்துச் சம்பவம் ஒன்றில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

குருநகர் டேவிட் வீதியைச் சேர்ந்த வஸ்தியம்மா மங்களதாஸ் (வயது 40) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு முன்பாக பேருந்து ஒன்றுடன் சைக்கிள் மோதியதில் சைக்கிளில் சென்ற பிரஸ்தாப குடும்பஸ்தர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று காலை 7.40 மணியளவில் உயிரிழந்தாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-6,11)

## திடீர் பொலிஸ் பதிவு மக்கள் அச்சத்தில்

மலையகப் பகுதிகளில் திடீரென பொலிஸ் பதிவுகள் மேற்கொள்ளுமாறு பொலிஸார் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டு மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையில், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் முன்னர் அமுல்படுத்தப்பட்டிருந்த பொலிஸ் பதிவு முறை தற்போது, மலையகப் பகுதிக்கு விஸ்தரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த திடீர் பதிவு முறையால் மலையகப் பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்த பதிவுக்கான விண்ணப்ப படிவங்களை அந்தந்த பகுதிக்குட்பட்ட பொலிஸ் நிலைய அதிகாரிகள் விநியோகித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-5)

## மீன்பிடி உபகரணம் கையளிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஜே/89,ஜே/90 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மீள்குடியமர்ந்த கடற்றொழிலாளர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் கையளிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நாவலடி உதயநிலா முன்பள்ளியில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன், யாழ். பாசிக் நிறுவன திட்ட அலுவலர் செல்வி மிற்சிக்கோ நிஷிமோறி, நல்லூர்பிரதேசசெயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், யாழ். பாசிக் நிறுவன திட்ட இணைப்பாளர் கு. பிரபாகரன் ஆகியோர்கலந்துகொண்டுசிறப்பிக்கவுள்ளனர். (அ)


**SLAS வகுப்பு**

பொது உளச்சார்பு • பொது அறிவு • முகாமைத்துவ உளச்சார்பு • கட்டுரையும் சுருக்கமும்

ஆகிய விடயங்கள் துறைசார் நிபுணர்கள்ால் ஒவ்வொரு ஞாயிறும் 1.00 தொடக்கம் 5.00 மணிவரை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவில் நடைபெறும்

தொடர்பு: 0754164564

(C-4950)

**லைடன் புடைவை நிலையம்**

இல.410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

வேலைக்கு ஆட்கள் தேவை

- ஆண் (1 பதவி) 30-40 வயதிற்கிடையில்
- பெண் (2 பதவி) முன் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும்

தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும்.

(சி-4947)

**SWISSTEK**

டைல் மோட்டார்

ஃபுளோர் மற்றும் வோல் டைல்களைப் பதிப்பதற்கான நவீன உடனடிக் கலவை

சர்வதேச நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட்டது

சகல லங்காடைல்ஸ் காட்சியறைகளிலும் நாடெங்குமுள்ள விற்பனை முகவர்களிடமும் கிடைக்கும்.

**பிற்போடப்பட்டுள்ளது**

12.11.2011-ம் திகதி சனிக்கிழமை நடைபெற இருந்த ஊர்காவற்றுறை பிரதேச சபையின் புதிய தலைமைச் செயலக கட்டடத் திறப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. புதிய திறப்பு விழா திகதி பின்னர் அறியத் தரப்படும்.

ம. ஜெயகாந்தன்
தவிசாளர்
ஊர்காவற்றுறை பிரதேச சபை

(6771)




சுபிட்சத்தை எதிர் நோக்கியுள்ள முல்லைத்தீவில் மிகச் சிறந்த நிதிச் சேவைகளை வழங்கிட ஆர்பிகோ பினான்ஸ் கிளை அலுவலகம் நகரத்தின் மத்தியில் இன்று 11 நவம்பர் 2011 திகதி மு.ப 9.45 க்கு பிரதான வீதி முல்லைத்தீவு என்ற முகவரியில் திறந்து வைக்கப்படுகின்றது. வாருங்கள், எமது சிநேக பூர்வமான உன்னதமான சேவையை நீங்களும் உணர்வீர்கள். உங்கள் அனைத்து நிதித் தேவைகளையும் பூர்த்தி செய்திட ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி.

• நிலையான வைப்புக்கள் • அடகு பிடித்தல் • லீசிங் • வாடகைக் கொள்வனவு

ஆர்பிகோ பினான்ஸ்
கம்பனி பி. எல். சி.
ஆரம்பம் 1951

பிரதான வீதி, முல்லைத்தீவு, (மின்சார சபை அருகில்)
தொ.பே. 021 5 677661 ஃபக்ஸ் 021 2 290098

வட மாகாணத்தின் சிறந்த அதிபராவும், ஆசிரியராகவும் வலிகாமம் கல்வி வலய சிறந்த ஆசிரியராகவும் தெரிவு செய்யப்பட்டு நேற்று வயாவிளான் கல்விச் சமூகத்தால் பாராட்டப் பெற்ற

(6773)

அதிபர்



திரு.க. கனகராசா

பிரதி அதிபர்



திரு.சி. சோதிலிங்கம்

உப அதிபர்



திரு.வே. புவனேந்திரன்

ஆகியோர் மேன்மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

வயாவிளானில் முன்னர் இணைப்பில் கடமையாற்றிய ஆசிரியர்கள்

# இன்று ஒரு தகவல்

## யாருக்குத் தேவை...?

ஒரு ஊரிலே ஒரு பிச்சைக்காரன் இருந்தான். எப்போதுமே கையிலே ஒரு திருவோடு வைத்திருப்பான். உணவு அருந்தி முடிந்தவுடன் தூங்கிக் கொள்வான். இப்படியாக அவனது வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது.

ஒருநாள் வழக்கம்போல அவன் திருவோட்டைக் கையிலே ஏந்திக் கொண்டு தெருவோரமாக நடந்து சென்று கொண்டிருந்தான்.

அப்போது திருவோட்டிலே "டொஸ்" என்ற ஒரு ஒலி கேட்டது.

என்ன என்று பார்த்தான். யாரோ ஒரு ரூபாய் நாணத்தைப் போட்டிருந்தார்கள். அதைத் தனியாக எடுத்து துணியிலே முடிந்து வைத்து விட்டான். அதன்பின்பு சில வீடுகளிலே அவனுக்கு வேண்டிய உணவு கிடைத்தது.

அதை எல்லாம் தனது கைப்பையினுள் சேகரித்து வைத்துக் கொண்டு வழக்கமாக தங்குகிற மண்டபத்துக்குப் போனான்.

அவனை மாதிரி உள்ள ஏனைய எல்லோருமே அங்கே தான் தங்குவது வழக்கம். எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். இவனுக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. அந்த ஒரு ரூபாய் நாணயத்தை கையிலே வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான். அதைப் புரட்டிப்புரட்டிப் பார்த்தான்.

சிறிது நேரம் கழித்து பக்கத்திலே படுத்திருந்தவனை எழுப்பினான். நடந்தவற்றையெல்லாம் விபரமாகச் சொன்னான்.

இதைக் கேட்டதும் அவன் "இதோ பார்... நமக்கு உணவும் உடையும்தான் தேவை... அது இரண்டும்தான் நமக்குச் சுலபமாக கிடைக்கிறது... அதனாலே அதைத்தவிர ஏனைய எல்லாமே நமக்குச் சுமைதான்!

இந்த நாணயம் நமக்கு வேண்டாத ஒன்றுதான். இருந்தாலும் இது யாருக்கு அதிகமாகத் தேவைப்படுகிறதோ அவர்களிடமே கொடுத்துவிடு! என்று யோசனை சொல்லி விட்டு மீண்டும் தூங்க ஆரம்பித்தான். ஆனால், இவனுக்கு இன்னமும் தூக்கம் வரவில்லை.

விடிய ஆரம்பித்துவிட்டது. அந்த சமயத்திலே லேசான தூக்கம். அவ்வேளையில் போர் முரசு ஒலிக்கிற சத்தம் கேட்டது. எல்லோரும் விழித்து எழுந்து போய்விட்டார்கள்.

இவன் மட்டும் தூங்கிக் கொண்டிருந்தான். அண்மையில் போர் முரசு சத்தம் கேட்க ஆரம்பித்த சமயத்தில் அவன் பரபரப்பாக எழுந்து பார்த்தான்.

தூரத்தில் ராஜா தேரிலே வந்து கொண்டிருந்தார்கள். பின்னாடி வரிசையாக போர் வீரர்கள்.

உடனே இந்தப் பிச்சைக்காரன் என்ன செய்தான் தெரியுமா? தன் கையிலே இருந்த நாணயத்தை அரசனின் தலைக்கு மேலாகத் தூக்கியெறிந்தான்.

ஏதோ வந்து விழுகிறமாதிரி இருந்ததும் மன்னர் குனிந்து பார்த்தார். ஒரு ரூபாய் நாணயம்.

அருகில் நின்ற போர் வீரர்கள் அவனை ஓடிப்போய் பிடித்து வந்தார்கள். விசாரணை ஆரம்பமானது.

"நீ எதற்காக அப்படி செய்தாய்?" என்று கேட்டார் அரசர்.

பிச்சைக்காரன் நடந்தவற்றை எடுத்தியம்பினான். அதன் பின் சொன்னார்;

"மன்னர் எதற்காகப் படையெடுத்துப் போகிறார்? வெற்றியும் பொருளும் தேடித்தான் அவர் வேறு நாட்டுக்குப் படையெடுத்துள்ளார். அதனால்தான் பணத்தின் தேவை அவருக்குத்தான் அதிகம் என்று முடிவு செய்தேன்.

அவருக்கு அண்மையில் நெருங்க யாருமே அனுமதி வழங்கமாட்டார்கள். இந்த சந்தர்ப்பம் தவறினால், மறுபடியும் வாய்ப்புக் கிடையாது. அதனால்தான் அப்டிச் செய்தேன்.

"எனக்கு அதிகமாக சிந்திக்கவும் தெரியாது! நான் செய்தது தவறு என்றால், தண்டனை வழங்கவும்... ஏற்றுக் கொள்கிறேன்" என்ற விபரத்தை மிகவும் பணிவாகச் சொன்னான்.

இதைக் கேட்டதும் மன்னனுக்கு அந்தப் பிச்சைக்காரனையும் புரிந்தது. தன்னைப் பற்றியும் புரிந்தது.

தேவைக்கு அதிகமாக இருக்கிறது எதுவுமே ஒரு சுமைதான். சுமை எது என்று முடிவு செய்து அதை இறக்கி வைக்கத் தெரிந்தால் வாழ்க்கை சுகம்தான்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரசின் உதவிகள் பாதிக்கப்பட்டோரை உரிய வகையில் சென்றடைய வேண்டும்

## அல்லது நடவடிக்கை என்கிறார் யாழ்.அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு சுய தொழில் கடனுதவிகள் வழங்குவதில் சில கிராம சேவையாளர்கள் புறக்கணிப்பு செய்வதாக பாதிக்கப்பட்டவர்கள் தம்மிடம் முறைபாடு செய்கின்றனர் என யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் போராளிகளை சமூகத்தில் இணைக்கும் நடவடிக்கையை அரசாங்கம் விரைவுபடுத்தி வருகின்றது.

ஆனால், அவர்களுக்கான உதவிகளை வழங்குவதில் கிராம சேவையாளர்கள் பின்னடிப்பு காட்டி வருகின்றனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கும் அங்கவீனர்களுக்கும் சிறுவர்களுக்கும் முன்னாள் போராளிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் சுயதொழில் கடன் உதவிகளும் ஏனைய உதவிகளையும் அரசாங்கம் வழங்கி வருகின்றது.

ஆனால், அந்த உதவிகள் உரியவர்களைச் சென்றடைய கிராம சேவையாளர்கள் தடையாகவுள்ளனர்.

குறிப்பாக புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு சுயதொழில் செய்வதற்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் நிதியைப் பெறுவதற்காக கிராம சேவையாளர்களை நாடும் போது இத்தகைய புறக்கணிப்பு இடம் பெறுவதாக பாதிக்கப்பட்டவர்கள் முறையிட்டுள்ளனர்.

எனவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவிகளை கிடைக்க விடாது தடுக்கும் கிராம சேவையாளர்களின் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஊடாக பணி நீக்கம் செய்யவும் பணியிலிருந்து இடை நிறுத்தி வைக்கவும் தன்னால் சிபாரிசு செய்யப்படும் எனவும் யாழ்.அரச அதிபர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

(அ-6)

# பேருந்தில் தொலைபேசி, பணம் என்பன திருட்டு

(யாழ்ப்பாணம்)

பயணித்துக்கொண்டிருந்த பேருந்தில் சன நெரிசலை சாதகமாகப் பயன்படுத்தி கைத்தொலைபேசி மற்றும் மூவாயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணத்திலிருந்து காரை நகரை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்தில் சன நெரிசலைப் பயன்படுத்தி இரு பயணிகள் கைத்தொலைபேசி மற்றும் மூவாயிரம் ரூபா பணம் என்பவற்றை திருடியுள்ளனர்.

யாழ். மத்திய பேருந்து தரிப்பிடத்திலிருந்து குறித்த தனியார் பேருந்தில் ஏறிய ஆனைக்கோட்டையை சேர்ந்த வயோதிபப் பெண்ணிடம் மூவாயிரம் ரூபா பணமும் சங்கானையை சேர்ந்த பெண்ணிடம் கைத்தொலைபேசியும் திருடப்பட்டுள்ளது.

தமது பணம், கைத்தொலைபேசி என்பன திருடப்பட்டு விட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்தும் பேருந்து நடத்துநரும் ஓட்டுநரும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காது அலச்சியப்போக்குடன் செயற்பட்டது பயணிகளிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 90 | 130 |
| உருளைக்கிழங்கு | 75 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 150 |
| தக்காளி | 100 | 120 | 80 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 40 | 30 |
| கோவா | 35 | 50 | 30 |
| கரட் | 80 | 120 | 120 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 140 | 100 | 50 |
| வாழைக்காய் | 30 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 90 | 90 |
| பெரிய வெங்காயம் | 75 | 60 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 25 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | 90 | 60 |
| பயற்றங்காய் | 80 | 100 | 100 |
| லீக்ஸ் | 25 | 50 | 40 |
| பீற்றூட் | 15 | 20 | 30 |
| கறிமிளகாய் | 120 | 130 | 120 |
| முருங்கைக்காய் | 35 | 90 | 50 |
| போஞ்சி | -- | 140 | 100 |
| கத்தரிதம்புள்ள | 90 | 100 | 70 |
| கீரை - 1 பிடி | 15 | 40 | 15 |
| தேசிக்காய் | 220 | 140 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 30 | 30 |

# இராசி பலன்

*11.11.2011*
*(ஐப்பசி 25, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு*
*பிரதமை பின்னிரவு 4.14 மணிவரை*
*பரணி காலை 8.04 மணி வரை*
*இராகுகாலம் 10.36-12.06 மணிவரை*
*சுபநேரம் 6.06-7.36 மணிவரை*
*நான்காம் ஐப்பசி வெள்ளி,*
*கார்த்திகை விரதம்.*

**மேடம்** வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்ற நண்பர்கள் கடைசி நேரத்தில் கை கொடுத்து உதவுவர், கனவு பலிதமுண்டு.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற விநாகரை வழிபட வேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், சேமிப்பில் சிறிது கரையலாம், திடீர் இடமாற்றங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், தொழில் வளர்ச்சியுண்டு.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நல்ல தகவல்கள் வந்து சேரலாம், அந்நியர் உதவியுண்டு, வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்து கொள்வீர்கள்.

**சிங்கம்** தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், கடன்களை தீர்க்கும் எண்ணம் உருவாகும், பேச்சில் இனிமை தென்படும், தொழிலில் போட்டியாக இருந்தவர்கள் விலகுவர்.

**கன்னி** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், வாகனப் பழுதுச் செலவுகள் உருவாகும், கௌரவக் குறைவான நாள்.

**துலாம்** தம்பதியரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், திட்டமிட்ட பயணங்கள் நல்லபடியாக அமையும், எடுத்த காரியங்கள் நல்லபடியாக நடைபெறலாம்.

**விருச்சிகம்** செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், பொதுவாழ்வில் புகழ் கூடும், மனக் குழப்பம் அகலும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பயணங்களால் பலனுண்டு.


**தனுசு** வசதி வாய்ப்புக்கள் அதிகரிக்கும் நாள், நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், புதிய திட்டங்களில் வெற்றி கிடைக்கும், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வீர்கள்.

**மகரம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், தொழிலில் புதிய திருப்பங்கள் ஏற்படலாம், பிறருக்காக எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும், சுப செலவுகள் ஏற்படலாம்.

**கும்பம்** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும், தடைப்பட்ட காரியமொன்றை செய்து முடிப்பீர்கள்.

**மீனம்** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்,இறைவழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கைக்கு அடித்தளமிடுவீர்கள், புத்தி சாதுரியமாக செயற்பட்டு சாதனை படைப்பீர்கள்.

வளவன்





யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பொன்னுத்துரை கமலநாதன் உரைநிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## சேவைக்கு கௌரவிப்பு



அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் தனது சேவையின் 10 வருட பூர்த்தியை தலைநகர் கொழும்பில் கொண்டாடியது.

ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள பிரதேச செயலகங்களில் இயங்கி வரும் இந்நிதியத்தின் யாழ்.மாவட்டத்தில் வலி.தெற்கு (உடுவில்) பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஓய்வூதியர் திருமதி சரோஜினி கல்யாணசுந்தரேசனுக்கு நிதியத்தின் செயலாளராக கடமையாற்றியதற்காக தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டது.

யாழ்.மாவட்டத்திலிருந்து இந் நிதியத்தால் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர் இவர் ஒருவரே என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## கட்டடத் திறப்பு விழா

(புன்னாலைக்கட்டுவன்)

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலய நவோதயா பாடசாலையின் இரண்டு மாடிக் கட்டட திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை அதிபர் க.கனகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-3-78)

## நீதிமன்ற திறப்பு விழா

(கரவெட்டி)

உலக வங்கியின் நிதியுதவியுடன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை நீதிமன்றம் சுமார் 65 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமும் கலந்து கொள்ளவுள்ளார்.

பருத்தித்துறை நீதிமன்றம் யுத்த காலத்தில் பெரும் சேதமடைந்து இருந்ததையிட்டு நீதிமன்ற செயற்பாடுகள் கரவெட்டி வதிரி பகுதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் நடைபெற்று வருகின்றது.

இலங்கையில் பெண்மணி ஒருவர் பிரதம நீதியரசராக பதவியேற்றதன் பின்னர் பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு வருகை தருவது இதுவே முதற்தடவையாகும். (அ-3-24)

## வயோதிபப் பெண் உயிரிழப்பு

(கரவெட்டி)

கிணற்றடியில் தவறி விழுந்த வயோதிப மாது ஒருவர் காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கரணவாய் தெற்கு அம்மன் கோவிலடி பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த பு.ராசலக்சுமி அம்மா (வயது-66) என்ற வயோதிபப்பெண்ணே உயிரிழந்தார்(அ-3-24)

## தபால்மா அதிபருக்கு எதிராக போராட்டம் நடத்த ஏற்பாடு

யாழ். தொலைத்தொடர்பு சேவையாளர் சங்கத்தின் இவ்வாண்டுக்கான 9 ஆவது பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் நேற்று யாழ். அஞ்சல் நிலையத்தில் சங்கத்தின் தலைவர் விஸ்வராசசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தபால் அதிபருக்கெதிரான நடவடிக்கை எடுத்தல் தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதில் தபால்மா அதிபரின் தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கெதிராகவும் தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்தமைக்காகவும் ஆளணிக்குறைப்பு மற்றும் ஊழியருக்கெதிரான பாரபட்சமான நடவடிக்கைகளுக்கெதிராக அவர் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தபால்மா அதிபருக்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கை தாமதித்துச் செல்வதால் உடனடியாக நடவடிக்கைகளை துரிதப்படுத்தக்கோரி இலங்கைத் தபால் தொடர்புச் சங்கம் கொழும்பிலுள்ள மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ளப்போவதாக அறிவித்துள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இப்போராட்டத்தில் இலங்கை தபால் தொலைத் தொடர்பு சேவை சங்கத்தின் யாழ்.கிளையிலுள்ளவர்களும் பங்கெடுக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

மேலும் இக்கூட்டத்தில் மத்திய பரிவர்த்தனை நிலையத்தின் பொருளாளர் பிரவீன் குமார, உபதலைவர் கே.என்.பெரேரா உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தபால்மா அதிபர் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக 5 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-6)




## வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

கொல்பிட்டி தோட்டம் ஊடாக கரம்பகம் செல்லும் வீதியானது குன்றும் குழி[illegible]ாக காணப்படுவதால் பயணிக்க முடி[illegible]த அவல நிலை உள்ளது. இவ்வீதியில் உ[illegible]ள பாலம் ஒன்றும் சேதமாகியுள்ளதால் வாகனப் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது.

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் கரம்பகம் கிராமமும் உள்ளடக்கப்படுகின்றது.

இக்கிராமத்தில் மீள்குடியேறிய மக்கள் தற்பொழுது காணிகளை புனரமைத்தும் தற்காலி கொட்டகைகளை அமைத்தும் வருகின்றனர். எனவே உரிய தரப்பினர் மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் இவ்வீதியை புனரமைத்து போக்குவரத்துக்கு உதவுமாறு மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)

## வீதிக்கு மின்விளக்குகளை பொருத்த கோரிக்கை

(நல்லூர்)


யாழ்ப்பாணம் சுண்டிக்குளி பெந்தகோஸ் லேனில் கடந்த இரு மாதங்களாக மின் விளக்குகள் ஒளிராமையால் அப்பகுதியில் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இரவு வேளைகளில் மக்கள் வீதியால் பயணிக்க முடியாதுள்ளனர். அத்துடன் விபத்துக்கள் ஏற்படக்கூடிய அவல நிலையும் உள்ளது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு மின்விளக்குகளை வீதியில் பொருத்தி போக்குவரத்தை மேற்கொள்வதற்கு உதவுமாறு மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆயினும், குடாநாட்டின் பெரும்பாலான வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை. அவ்வாறு பொருத்தப்பட்டிருப்பினும் அவை செயலிழந்த நிலையிலேயே உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-3-134)

## வடமராட்சி கல்விவலய பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப்போட்டி



(கரவெட்டி)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரி அணியும் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அணியும் தெரிவாகியுள்ளது.

அல்வாய் மனோகரா மைதானத்தில் நேற்[illegible]தினம் பிற்பகல் 2 மணிக்கு இடம் பெற்ற முதலா[illegible] அரை இறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்[illegible]ரி அணியை 3:1 என்ற கோல்கணக்கில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அணியை 4:2 என்ற கோல்கணக்கில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான இறுதிப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அல்வாய் மனோகரா [illegible]ளையாட்டு கழக மைதானத்தில் இட[illegible]பெறவுள்ளது. (அ-3-24)

## மாடுகளை திருடிய நபர் பிடிபட்டார்

(சாவகச்சேரி)

கெருடாவில் பகுதியில் மாடுகளை திருடி வந்த நபர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை கெருடாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கெருடாவில்பகுதியில் உள்ள புல்வெளிகளில் மேய்ச்சலுக்காக கட்டப்பட்ட மாடுகளை மாலை நேரங்களில் சென்ற போது மாடுகளைக் காணாது அயலில் தேடிய போது அவ்வீதியில் நின்ற ஒரு சிறுவன் குறித்த மாட்டை ஒருவர் நடத்தி செல்வதாக கூறினார்.

நேற்று முன்தினம் மாட்டை திருடிச் சென்ற நபர் அதே இடத்தில் நடமாடியதை கண்ணுற்ற மேற்குறித்த சிறுவன் அயலவர்களிடம் கூறியதையடுத்து மாட்டைத் திருடிய நபர் மடக்கிப்பிடிக்கப்பட்டார்.

குறித்த நபரிடம் விசாரித்த போது தான் திருடிச் சென்ற மாட்டை வரணியில் ஓர் இடத்தில் கட்டிவைத்ததாகவும் அங்கு வந்த கொடிகாம பொலிஸார் மாட்டை மீட்டதாகவும் தெரிவித்தார்.

அதையடுத்து பொதுமக்கள் குறித்த நபரை கொடிகாம பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (அ-3-29)

# உத்தேச பறிமுதல் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது

## ஐ.தே.க.எம்.பி. தயாசிறி தெரிவிப்பு

இற்றைவரையில் இந்த பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்ட சட்டமூலங்கள் நன்மை- தீமை ஆகிய இரண்டையும் ஏற்படுத்தியிருக்கின்றன. அந்த வகையில் இன்று கொண்டு வரப்பட்டுள்ள உத்தேச பறிமுதல் சட்டமூலத்தைப்போன்று நாளைய தினத்தில் உயிரைப்பறிப்பதற்கான சட்டமூலமும் கொண்டு வரப்படலாம் என்று ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி.தயாசிறி ஜயசேகர நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

உத்தேச பறிமுதல் சட்டமூலத்துக்கு கை உயர்த்துவோர் அரசியலமைப்புக்கு எதிராகவே கை உயர்த்துகின்றனர் என்று கூறிய தயாசிறி எம்.பி. இலங்கையின் தற்கால நிலைவரத்தை சர்வதேச பாராளுமன்றத்துக்கு கொண்டு செல்வோம் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உத்தேச பறிமுதல் சட்ட மூலம் மீதான விவாதத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் கூறுகையில்,

இந்தப் பாராளுமன்றில் காலா காலத்திற்கு பல்வேறு சட்ட மூலங்கள் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. அவற்றில் நன்மையும் தீமையும் இருந்தன. அந்த வகையில் தற்போது கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சட்ட மூலம் அரசியலமைப்புக்கு முரணாகவே கொண்டு வரப்பட்டுள்ளது.

இன்று வழங்கப்பட்டிருக்கின்ற தீர்ப்பின் பிரகாரம் நீதிமன்ற நடவடிக்கைகள் இருப்பினும் அவை தொடர்பில் இங்கு விவாதிப்பதற்கும் கருத்துக்களை முன்வைப்பதற்கும் சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தொடர்பிலான நீதிமன்ற விசாரணைகள் நிலுவையில் இருக்கின்ற போதிலும் அவர்கள் தொடர்பில் இந்த சபையில் எதிர்காலத்தில் எமது நியாயங்களை முன் வைப்போம்.

இலங்கையில் இடம்பெறுகின்ற நிலைமைகளை சர்வதேச பாராளுமன்றத்துக்கு கொண்டு செல்வதற்கு நாம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்போம். 106 அரச நிறுவனங்களில் 19 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டிருக்கின்றது என்பதையும் இங்கு கூறி வைக்க விரும்புகின்றேன். லங்கா புத்ர வங்கியிலிருந்து பெரும்பாலோருக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதாவது 20 நிறுவனங்கள் கடன் பெற்றுள்ள போதிலும் இந்த நிறுவனங்களில் தாம் பெற்ற கடன்களை லங்கா புத்ர அபிவிருத்தி வங்கிக்கு திருப்பிச் செலுத்தவில்லை.

இவ்வாறான நிறுவனங்களே சுவீகரிக்கப்பட வேண்டுமே தவிர இலாபம் ஈட்டுகின்ற நிறுவனங்களை சுவீகரிக்க முற்படக்கூடாது. (அ-2)

# வவுனியா இளைஞர் விருது வழங்கும் விழா

(வவுனியா)

வவுனியா மாவட்ட இளைஞர் விருது வழங்கும் விழா நாளை சனிக்கிழமை காலை 10. 30 மணிக்கு றோயல் காடின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விருது வழங்கும் விழா இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வவுனியா மாவட்ட காரியாலயத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

பல்வேறு வகைகளிலும் தமது திறமைகளை வெளிக்காட்டிய இளைஞர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வவுனியா மாவட்ட காரியாலய உதவிப் பணிப்பாளர் எம்.பி.சரத் சந்திரபால தெரிவித்தார். (அ-2)

# நாட்டை சுரண்டி பாலைவனமாக்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது

## பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த நாடு பாலைவனமாக மாறக்கூடிய அபாயம் காணப்படுகின்றது என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தற்கொலைத் தாக்குதலில் படுகாயமடைந்த போது சிங்கப்பூரில் உள்ள அரச வைத்தியசாலையில் எனக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அதுமட்டுமன்றி உலகக் குழுக்களை வழி நடத்தும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிங்கப்பூரின் தனியார் வைத்தியசாலை ஒன்றில் பெரும் பொருட் செலவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சட்டங்களை இயற்றி அரசாங்கம் வர்த்தக நிறுவனங்களை கொள்ளையிட முயற்சிக்கின்றது. இதுதான் மெய்யான தேசப்பற்று என்று கூறிய இவர் வெற்றி உண்டாகட்டும் என்றும் இந்த நாட்டு பற்று என்றாவது நாட்டை பாலைவனமாக மாற்றிவிடும் என்று தெரிவித்தார்.

இந்த நாட்டை சுரண்டி ஒன்றுமில்லாமல் ஆக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள அவர் கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுக் கொள்ள சென்றிருந்த போது அவர் செய்தியாளர்களுக்கு இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (அ-2)

# விமர்சனங்களை கண்டு பயப்படுகின்றது அரசு

## ஜனநாயக சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டு

அரசாங்கம் தம் மீதான விமர்சனங்களை கண்டு பயப்படுகிறது. தமது ஜனநாயக விரோத செயற்பாடுகள், ஊழல்கள் வெளிக்கொணரப்படும் போது ஜனநாயக ரீதியான சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும் என்று அரசாங்கம் அஞ்சுவதாக ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாகவே இலங்கையில் செய்தி இணையத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளதாக ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அண்மைக்காலம் வரையில் இலங்கையில் ஊடகங்களுக்கு, ஊடகவியலாளர்களுக்கு அச்சநிலை காணப்பட்டது. ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர். பல ஊடகவியலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறினர். இந்த நிலையில் இன்று பிரபலமான இணையத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளன. தனியார் ஊடகங்களில் சுயதணிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

ஊடக ஒழுங்கு தொடர்பான நிறுவனங்கள் அரசியலாலும் தனிப்பட்டவர்களாலும் பொதியிடப்பட்டுள்ளதாக ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை (Whitney vs California) வழக்கில் நீதிபதி பிராண்டிஸ் இன் தீர்ப்பை ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சுதந்திரத்தை பெற்றுக்கொடுத்தவர்கள் கோழைகள் அல்ல. அவர்கள் அரசியல் மாற்றங்களுக்கு அஞ்சுவதில்லை. பயத்தால் பேச்சு சுதந்திரத்தை நிலைநாட்ட முடியாது என்பதே அந்த தீர்ப்பாகும் என்று ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே, இணையத்தளங்கள் மீது வீதிக்கப்பட்ட முடக்கத்தை அரசாங்கம் தளர்த்த வேண்டும் என்று சட்டத்தரணிகள் கோரியுள்ளனர்.

ஜனநாயக சட்டத்தரணிகள் அமைப்பின் சார்பில் லால் விஜேநாயக்க, சந்திராகுமாரகே, ரட்ணவேல் சுமந்திரன், ஜோதிக்குமார் ஜே.வி. வெலிய முன உட்பட்டோர் அங்கம் வகிக்கின்றன. (அ-2)

# தபால் மா அதிபருக்கு எதிராக 67 குற்றச்சாட்டுக்கள் சமர்ப்பிப்பு

பல்வேறு தனிப்பட்ட காரணங்களின் அடிப்படையில் தபால் மா அதிபருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குறறச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

நான்கு வருடங்களுக்கு முன்னதாக தபால் மா அதிபர் பதவி நீதிமன்ற உத்தரவிற்கு அமைய நிர்வாக சேவைகள் உத்தியோகத்தர் ஒருவரின் கீழ் கொண்டு வரப்பட்டதாக அந்த சங்கத்தின் செயலாளர் சந்திரரத்ன பல்லேகம குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையின் கீழ், தபால் மா அதிபரை நீக்குவதற்காக தொழிற்சங்கங்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து செயற்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இத்தகையசெயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறுமாயின் அதற்கு எதிராக இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுமென சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து இலங்கை தபால் மற்றும் தொலைத் தொடர்பு ஊழியர் சங்கத்தின் செயலாளர் சிந்தேக பண்டார தெரிவிக்கையில், தபால் மா அதிபருக்கு எதிரான 67 குற்றச்சாட்டுக்கள்' தொடர்பில் தபால் சேவைகள் அமைச்சுக்கு விடயங்களை சமர்ப்பித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்சாட்டுக்களில் பெரும்பாலானவை திணைக்களத்தின் நலமேம்பாடு கருதியே முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை, தபால் மா அதிபருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட குழுவின் அறிக்கை ஏற்கனவே அமைச்சரவை உப குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்தார். அமைச்சரவை உப குழுவின் சிபாரிசுக்கு அமைவாக அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# சார்க் உச்சிமாநாட்டுக்கு இலங்கை அதிரடிப் படையினர் பாதுகாப்பு

(கொழும்பு)

மாலைதீவில் நடைபெறும் சார்க் உச்சி மாநாட்டுக்காக மாலைதீவு தேசிய பாதுகாப்பு படையினரும் இலங்கையின் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து மேற்கொள்ளும் பாதுகாப்பு திட்டமொன்று அமுல்படுத்தப்படுகின்றது.

மாலைதீவின் அட்டு நகரில் நடைபெறும் இம்மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரமுகர்களினதும் மாநாடு நடைபெறும் இடத்தினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இரு படையமைப்புக்களும் நெருக்கமாக இணைந்து செயற்படுவதாக மாலைதீவில் பணியாற்றும் இலங்கை விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியொருவர் கூறினார்.

மாநாட்டில் கலந்து கொள்ளும் அனைத்து தூதுக்குழுவினரும் உயர் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியவர்களாக கருதப்படுகின்றனர். தவறில்லாத பாதுகாப்புத் திட்டத்திற்காக மாலைதீவு தேசிய பாதுகாப்பு படையினருடன் இணைந்து அச்சுறுத்தல் மதிப்பாய்வு தொடர்பான பல நடவடிக்கைகளை நாம் நடத்தியுள்ளோம் என அவர் கூறினார்.

மாநாடு இடம்பெறும் இடத்திற்கு வருபவர்களும் வெளியேறுபவர்களும் கண்காணிக்கப்படுகின்றனர். பாதுகாப்புச் சோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இம்மாநாட்டிற்கு முன்னர் துறைமுகம், விமான நிலையம், மாநாட்டு மண்டபம் ஆகியவற்றுக்கு பாதுகாப்பளிப்பது தொடர்பான பல பயிற்சித் திட்டங்களை இலங்கையின் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டதாக ஹவீரு இணையத்தளம் ஏற்கனவே தெரிவித்திருந்தது. (அ-2)


முதலாமாண்டு நினைவஞ்சலி

பிறப்பு 23 . 05 . 1939



இறப்பு 10 . 11 . 2010

திருமதி தங்கரூபம் குணசிங்கம்

அன்பிற்கு இலக்கணமான எம்மினிய அம்மாவே
ஆண்டு ஒன்று ஆனதம்மா நீ எமை பிரிந்து
ஆனாலும் உன் நினைவு எமைவிட்டு நீங்காது
என்றென்றும் அது மட்டும் எம்முடனே இருக்கும்

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

"அருளகம்"
நெல்லியடி வடக்கு

- குடும்பத்தினர்

(சி-4941)

# வீதியை வேகமாக புனரமைக்க மக்கள் கோரிக்கை



(மல்லாவி)

பனிக்கன் குளத்திலிருந்து கொக்காவில் 18ஆம் போர் ஏற்றம் வரை உள்ள வீதியானது கிட்டத்தட்ட 6 மைல் நீளத்திற்கு அகலிப்பு பணி இடம் பெற்று வருகின்றது.

கடந்த 3 மாதங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் இவ்வேலையானது வீதியின் இருமருங்கும் அகலிப்பு பணி இடம் பெறுவதோடு புதியபாலங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் ஏ9 வீதியில் பயணம் செய்கின்ற ஊர்திகள் 3 இடங்களில் நிறுத்தப்பட்டு ஒரு வழிப்பாதையாக பயணத்தை தொடர அனுமதிப்பதனால் எதிரே வருகின்ற ஊர்திகள் சில மணி நேரம் தாமதித்து பயணத்தை தொடரவேண்டிய அவல நிலை உள்ளது.

இந்நிலை தொடர்வதால் பயணிகள் குறித்த நேரத்திற்கு குறித்த இடத்திற்கு செல்ல முடியாது சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் ஊர்திகள் அடிக்கடி விபத்துக்குள்ளாகின்றன. அண்மையில் பருத்தித்துறையில் இருந்து வவுனியா நோக்கி சென்ற இ.போ.ச. பேருந்தானது பாதையை விட்டு விலகி அருகில் இருந்த பள்ளத்தினுள் சென்றதால் சாரதியின் துரித நடவடிக்கையினால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

எனவே, பரந்தன் சந்தியிலிருந்து ஆனையிறவு நோக்கி கட்டம் கட்டமாக நகர்ந்து கொண்டிருக்கும் வீதி அகலிப்பு பணி போன்று, இவ் வீதி அகலிப்பு பணியும் நடைபெறுமாக இருந்தால் பயணிகளின் நேரமும் விரயம் தடுக்கப்படுவதுடன் விபத்துக்களும் இடம்பெறாது தடுக்கலாம் என பயணிகள் தெரிவித்துள்ளனர். பனிக்கன் குளத்திலிருந்து கொக்காவில் 18 ஆம் போர் ஏற்றம் வரையிலான வீதி புனரமைப்பை மக்கள் விரும்புகின்ற போதும் தமது நேரவிரயம் மற்றும் விபத்தினை மக்கள் விரும்பவில்லை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (அ-3-15)

# கொள்ளைச் சம்பவங்களால் பீதியில் உறையும் மக்கள்

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் அதிகரித்து வரும் கொள்ளைச் சம்பவங்களால் இடம் பெயர்ந்து மீள்குடியேறிய மக்கள் பீதியில் உள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, கடந்த சில நாட்களாக பாண்டியன் குளம், நெட்டாங்கண்டல் ஆகிய இடங்களில் கொள்ளைக்கும்பல் ஒன்று இரவு வேளைகளில் கத்தி, பொல்லு மற்றும் பயங்கர கூரிய ஆயுதங்களுடன் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் பாண்டியன்குளம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள நவம் என்பவருடைய வீட்டில் இரவுவேளை புகுந்த கொள்ளையர்கள் கணவன்- மனைவி உட்பட வீட்டில் இருந்தவர்களை தாக்கி அச்சுறுத்தி 6 இலட்சத்திற்கு மேற்பட்ட பணம், நகை என்பவற்றை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

இதேபோன்று கிராம சேவையாளர் பொன்னுத்துரை வீட்டில் புகுந்த கொள்ளையர்கள் பணம், நகை என்பவற்றை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

நெட்டாங்கண்டல் கிராம முன்னேற்ற சங்கத்திற்கு முன் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையம், ஒட்டுத் தொழிலகம் என்பவற்றை இரவு வேளை உடைத்து பெறுமதிமிகு மின்பிறப்பாக்கி உட்பட இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இக்கொள்ளை மற்றும் சம்பவங்கள் தொடர்பாகவும் மக்கள் இராணுவத்திடம் முறைப்பாடு செய்தனர். இதனால் இராணுவத்தினர் இக் கொள்ளைகளை தடுக்கும் நோக்கில் நெட்டாங்கண்டல் சந்தியில் இருந்த இராணுவகாவலரணை நகர்த்தி பாண்டியன்குளம் எஸ்.ஆர்.கடைச் சந்திக்கு அருகில் புதிதாக அமைத்துள்ளனர். (அ-3-15)

# மன்னாரில் வெளியூர் மீனவர்களின் மீன்பிடியை தடுப்பதற்கு இணக்கம்

மன்னார் மாவட்டத்தில் வெளியூர் மீனவர்கள் வந்து மீன்பிடிப்பதை தடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் ஏற்றுக் கொண்டுள்ளதாக மன்னார் மீனவர் சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் பிற்பகுதியில் கடற்றொழில் அமைச்சின் அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையில் மாவட்ட மீனவ அமைப்பு சம்மேளன பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதில் மன்னார் மாவட்ட மீனவ பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களை முன்வைத்த போது மன்னார் மாவட்டத்தில் மீன்பிடி காலமாகிய இக் காலகட்டத்தில் வெளிமாவட்ட மீனவர்கள் மீன்பிடிக்காக மன்னார் பகுதிக்கு படையெடுத்து வருவதனால் எமது மாவட்ட உள்ளூர் மீனவர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

ஆகவே, இவ்வாறாக வரும் மீனவர்களை தடைசெய்யும்படியும் அதேவேளையில் காலா காலமாக மீன்பிடிக்க வந்த வெளியூர் மீனவர்கள் வந்து மீன்பிடியில் ஈடுபடுவதில் ஆட்சேபனை இல்லையெனவும் தெரிவித்தபோது அவற்றை அமைச்சர் ஏற்றுக் கொண்டு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார். (அ-2)

# உயர் தேசிய தொழில்நுட்பவியல் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தினால் (SLIATE) நடத்தப்படும் உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் க.பொ.த.உயர்தர பரீட்சையின் புதிய அல்லது பழைய பாடத்திட்டத்தில் சித்தியடைந்தவர் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாகபொறியியல் உயர் தேசிய டிப்ளோமா(சிவில்) மின்சார /இயந்திரவியல், கட்டடசேவைகள், பொறியியல் உயர் தேசிய டிப்ளேமா, பரிமாண நில அளவை உயர் தேசிய டிப்ளோமா, கணக்கியல் உயர்தேசிய டிப்ளோமா, முகாமைத்துவ உயர்தேசிய டிப்ளோமா, வியாபார நிர்வாகம் உயர் தேசிய டிப்ளோமா, தகவல் தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா, ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா, வியாபார நிதி உயர் தேசிய டிப்ளோமா, உணவு தொழில்நுட்பவியல் உயர்தேசிய டிப்ளோமா ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன. அத்துடன் தெரிவு செய்யப்பட்ட டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு அமைவாக யாழ்ப்பாணம், மட்டக்குளி, தெஹிவளை, லபுதூவ, நைவல, அம்பாறை, திருகோணமலை, கேகாலை, அநுராதபுரம், இரத்தினபுரி, சம்மாந்துறை, மட்டக்களப்பு மற்றும் தங்காலை ஆகிய உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் தொடரலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை கடந்த 4 ஆம் திகதி வெளியாகிய வர்த்தமானியிலோ அல்லது வலம்புரி காரியாலயத்திலோ பார்வையிடலாம். (பா)

# பறிமுதல் சட்டமூலத்துக்கு எதிரான மனுமீதான விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

செயற்பாடுகள் குறைவாகவுள்ள தொழில் முயற்சிகளுக்கும் மற்றும் குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் எனும் உத்தேச பறிமுதல் சட்ட மூலத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரனை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணையை முன்னெடுக்க நியமிக்கப்பட்ட மூவரடங்கிய நீதிபதிகள் குழாமில் ஒருவரான பி. ஏ.ரத்னாயக்க தான் இந்த வழக்கை ஆராய விரும்பவில்லை என்று தெரிவித்தமையினாலேயே மனு மீதான விசாரனை 15 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

உத்தேச பறிமுதல் சட்ட மூலம் அரசியலமைப்புக்கு ஏற்புடையதா என்பது தொடர்பில் ஆராய்ந்த நீதிபதிகள் குழாமில் தான் இடம் பெற்றிருந்ததாகவும் எனவே இந்த வழக்கு விசாரணையில் முன்னெடுக்கும் நீதிபதிகள் குழாமில் இடம் பெற விரும்பவில்லை எனவும் நீதிபதிகள் குழாம் உறுப்பினர் பி.ஏ.ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

தீனியாவல பாலித்த தேரர் மற்றும் செவனகல சீனித்தொழிற்சாலை ஊழியர்கள் உட்பட சிலர் இந்த அடிப்படை உரிமை மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். (அ-2)

# விண்ணப்பம் கோரல்


நீதிமன்றங்களில் எழுது வினைஞர் பதவிகளுக்கு விண்ணப்பங்களை நீதிச்சேவை ஆணைக்குழு கோரியுள்ளது. இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் க.பொ.த. (உயர்/த) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) இரண்டு திறமைச் சித்தியுடன் 3 பாடங்களில் சித்தியும் பழைய பாடத்திட்டம் எனில் 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 4 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம்/ மொழியுட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இவற்றுள் ஆங்கில மொழியிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். வயது வரம்பு 18-25 என வரையறை செய்யப்பட்டுள்ளது. மேலும் 16.10. 2009 ஆம் திகதிய பத்திரிகை அறிவித்தலின் படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்து பரீட்சை எழுதிய விண்ணப்பதாரிகள் மீண்டும் இதற்கு விண்ணப்பிக்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 500 ஐ செயலாளர் ,நிதிச் சேவை ஆணைக்குழுவின் செயலகத்துக்கு மக்கள் வங்கி, டாம் வீதி கிளையின் இல. 297100199025039 இற்கு வரவு வைக்கப்பட்ட பற்றுச்சீட்டுடன் ரூபா 30 முத்திரை ஒட்டப்பட்ட சொந்த முகவரி எழுதப்பட்ட கடித உறையினை மேற்படி செயலக காரியாலயத்திற்கு அனுப்பியோ அல்லது நேரிலோ வருகை தந்து விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பெறமுடியுமும் என்பதுடன் பூரணப்படுத்தப்பட்ட படிவங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் அத்துடன் செயலாளர் நீதிச்சேவை ஆணைக்குழு த.பெ . 573, புதுக்கடை, கொழும்பு 12 எனும் விலாசத்திற்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும் என கூறப்பட்டுள்ளது. (அ-2)





யாழ். பிரதேச செயலக பேரவையினால் நடத்தப்பட்ட கலாசார விழா அண்மையில் திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரான்ஸிஸ் அன்ரனின் சேவை நலன்பாராட்டி சான்றிதழ் வழங்குவதையும் அவரது மாணவன் கலாபூசணம் எல்.கெங்காதரன் ஆச்சாரியாருக்கருகில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# சமய தீட்சை

ஏழாலை இந்து இளைஞர் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சமய தீட்சை நிகழ்வானது இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஏழாலை சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணேஸ்வரர் ஆலய மண்டபத்தில் நடைபெறுகின்றது.

தீட்சை பெற விரும்பியோர் அதில் கலந்து கொள்ளுமாறு இந்து இளைஞர் மன்ற செயலாளர் அறிவித்துள்ளார். (அ)

# மகிந்த சிந்தனையினால் நாடு பாரிய அபிவிருத்தி கண்டுள்ளது

## பிரதியமைச்சர் முரளிதரன் புகழாரம்

(கொழும்பு)

ஒரு தேசியக் கட்சியில் நாங்கள் பயணிப்பதுதான் சிறந்த விடயம். இனங்களையோ மதங்களையோ பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சியிலே நாங்கள் இருந்தோமானால் மீண்டும் குரோதங்களும் பிரச்சினைகளும் உருவாக்கப்பட்டு எங்களுக்குள் பிளவுகள் ஏற்படத்தான் வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

திவிநெகும ஒருங்கிணைப்பு கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ், சமூர்த்தி அதிகாரிகளை உள்ளீர்க்கும் திட்டத்தின் விழிப்புணர்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எமது நாட்டில் மூன்று கட்டங்களாக பிரித்து இந்த அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மகிந்த சிந்தனைத் திட்டத்தினூடாக கட்டுமானங்கள் மேற்கொள்ளுதல், வாழ்வாதாரங்களை சமனாக கொண்டு செல்லல் அடுத்ததாக மக்களின் பாதுகாப்பு. பாதுகாப்பையும் மக்களின் ஒழுக்கப்பாட்டையும் அதேவேளையில், அதே சமனாக கொண்டு செல்லல். இந்தத்திட்டத்தின் அடிப்படையில்தான் அபிவிருத்தி பிரித்து எங்களுடைய இலங்கை திருநாடு பாரிய அபிவிருத்தியை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது.

இலங்கை வரலாற்றில் ஒரு அரசாங்கமும் செய்யாதது. வீதிகள், பாலங்கள் அமைக்கும் பணியை இலங்கையில் எந்தவொரு ஜனாதிபதியும் மேற்கொள்ளவில்லை. இன்று மட்டக்களப்பும் திருகோணமலையும் இணைக்கப்பட்டிருக்கிறது. 5 பெரிய பாலங்கள் நினைத்துக்கூட பார்க்க முடியாது.

அதேபோன்று தான் அடுத்த கட்டமான பாடசாலைக்கட்டடங்கள். பாடசாலை அபிவிருத்திகள் ஆயிரம் பாடசாலைத்திட்டம் அதிலே 14 பாடசாலைகள் உள்வாங்கப்பட்டு 6 கோடி ரூபா ஒரு பாடசாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒரு தேசியக்கட்சியில் போகும் பொழுது எமது உரிமைகளும் பாதுகாக்கப்படும். வளமும் வந்து கொண்டிருக்கும். மக்களிடையே ஒற்றுமையும் புரிந்துணர்வும் ஏற்படும். நாம் போராடியிருக்கிறோம். இதற்குக்காரணம் அரசியல்வாதிகள்தான். அன்றிருந்த அரசியல்வாதிகள் இரண்டு பக்கமும் துவேசங்கள் பேசினார்கள்.

தமிழ் அரசியல்வாதிகளும் பேசினார்கள். சிங்கள அரசியல்வாதிகளும் பேசினார்கள். அதனால் பாரிய விரிசலும் குரோதமும் வந்தது. பேசிய அரசியல்வாதிகளெல்லாம் வெளிநாட்டுக்கு ஓடிவிட்டார்கள். நாங்கள் ஆளுக்காள் அடிபட்டு கிட்டத்தட்ட 90 ஆயிரம் பேர் இறந்திருக்கிறோம். ஓடிய அரசியல்வாதிகளெல்லாம் இப்போது வந்து விட்டார்கள். ஏனென்றால் இப்போது அமைதி வந்துவிட்டது. நாட்டில் எந்தவொரு பிரச்சினையுமில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

எங்களுக்கென்று ஒரு தனித்துவத்தை, அரசியலை கொண்டுவர வேண்டும். இன்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வெளி உலகத்தில் போய் தமிழருக்காக குரல் கொடுக்கிறார்கள் என்றார். (அ-2)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் யாழ்.மாவட்டத்தின் ஐந்து வலயங்களையும் சேர்ந்த பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 11 வரை சமய பாடத்தையும் தரம் 12, 13 இற்கும் இந்து நாகரிகம், இந்து சமயம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மான விழிப்புணர்வு செயலமர்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை யாழ்வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் (பிரதான மண்டபம்) நடைபெறவுள்ளது.

இச் செயலமர்விற்கு சம்பந்தப்பட்ட அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாணக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுக்கொள்கின்றார். (அ)

# தொழிற்பயிற்சி விழிப்புணர்வு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழில் உள்ள முன்னணி தொழிற் கல்வி நிறுவனங்களான ATI, NAITA, NIFNE, NIBM, DVTC, CTC, ITSCC ஆகியவற்றின் அனுசரணையுடன் மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு (CHA) யாழ்.இளைஞர்களின் திறன் அபிவிருத்திக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்றை எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளது.

அத்துடன் மேற்படி நிகழ்வில் மாணவர்கள் மற்றும் பாடசாலை கல்வியை நிறைவு செய்தவர்கள் பங்கு பற்றுவதன் மூலம் தமது தொழில் சந்தர்ப்பங்களை தெரிவு செய்வதற்கு பயனுள்ளதாக அமையும் என்பதுடன்,

நெறிக்கு கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பதிவினை நாளை சனிக்கிழமைக்கு முன்னதாக பங்குபற்றுதலை உறுதி செய்து கொள்ளுமாறும் அல்லது 021 222 8030, 077 4727569, 011 4626100, 077 3017475 ஆகிய தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்துவதன் மூலம் விபரங்களை பெற்றுக் கொள்ள முடியுமென மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு மாவட்ட அலுவலர் அறிவித்துள்ளார். (அ-2)

# இராணுவத்தினரின் வசமுள்ள வீடுகள் விரைவில் உரியவர்களிடம் வழங்கப்படும்



## யாழ்.கட்டளை தளபதி தெரிவிப்பு

படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொது மக்களின் வீடுகளை அதன் உரிமையாளர்களிடம் மிகவிரைவில் ஒப்படைப்பதாக யாழ். கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த 8 ஆம் திகதி அரச அதிபர் தலைமையில் பாதுகாப்பு படையினருக்கும் பிரதேச செயலர்களுக்குமான விசேட கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் போது பிரதேச செயலர்களினால் பொதுமக்களின் வீடுகளை இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருப்பதனால் அதன் உரிமையாளர்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

சொந்த வீடுகளை இழந்து வாடகைக்கு எடுக்கப்பட்ட வீடுகளில் குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

யுத்தத்தில் இடம்பெயர்ந்து மீள்குடியேறி வருபவர்களுக்கு அரசாங்கத்தினால் வீடுகளும் ஏனைய உதவிகளும் வழங்கப்படுகின்றன.

ஆனால், இன்று இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட வீட்டின் உரிமையாளர்களுக்கு வீட்டுத்திட்ட உதவிகளிலும் ஏனைய திட்டங்களிலும் உள்வாங்கப்படுவதில்லை.

யுத்தம் முடிவடைந்து ஒரு வருடங்கள் நிறைவடைந்த நிலையிலும் இத்தகைய துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இது தவிர சொந்த வீடுகள் இல்லாதிருக்க வெளிமாவட்டங்களில் உறவினர் வீடுகளிலும் வாடகைக்கு வீடுகள் எடுத்தும் குடியேறி வருகின்றனர். எனவே, இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட வீடுகளை அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச செயலர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதைத் தொடர்ந்தே கட்டளைத்தளபதி மேற்கண்டவாறு உறுதியளித்தார். அத்தோடு யாழ். மாவட்டத்திலுள்ள இராணுவத்தினர் அனைவரையும் ஒரு இடமாக ஒன்றிணைத்து விட்டு பொது மக்களின் வீடுகளை அதன் உரிமையாளர்களிடம் மிக விரைவில் கையளிக்கவுள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்தார். (அ-2)

# பொதுச் சொத்துக்களை அரசு கொள்ளையிடாது

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியல் யாப்புக்கு முரணாக செயற்படமாட்டாது என பிரதமர் டி.எம்.ஜயரத்ன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

செயற்பாடு குறைந்த தொழில் முயற்சிகள் மற்றும் குறைந்த பயன்பாட்டையுடைய சொத்துக்களுக்கு புத்துயிர் அளித்தல் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த கருத்தினை கூறினார்.

இந்தச்சட்டமூலம் குறித்து எதிர்க்கட்சி தேவையின்றி அச்சமடைந்துள்ளதாகவும் பொதுச் சொத்துக்களை அரசாங்கம் கொள்ளையிடமாட்டாது என்றும் பிரதமர் சபையில் தெரிவித்தார்.

விவாதத்தில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர இதுவொரு தூரநோக்கற்ற சட்டமூலம் எனக் கூறினார்.

இலாபமீட்டுகின்ற நிறுவனங்களை பொறுப்பேற்கக் கூடாது என்றும் அவர் அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டார். (அ-2)

# வவுனியா வளாகத்தின் நான்காவது ஆராய்ச்சி மாநாடு

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் நடத்தி வரும் பிரமாண்டமான ஆராய்ச்சி மாநாடு இந்த முறையும் நான்காவது தடவையாக வவுனியாவில் நடைபெறவுள்ளது.

வவுனியா றோயல் காடின் மண்டபத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை இந்த ஆராய்ச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

பிராந்தியங்களின் அபிவிருத்திக்கு மேற் கிளம்பும் வாய்ப்புக்கள் என்ற தொனிப் பொருளில் வவுனியா வளாகத்தின் முதல்வர் ஆர். நந்தகுமார் தலைமையில் இந்த ஆண்டுக்கான ஆராய்ச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் இந்த மாநாட்டிற்கு வருகை தரவுள்ள ஆய்வாளர்களின் 42 கட்டுரைகள் ஆய்வுக்கு எடுக்கப்பட்டுள்ளன. அவை 8 அமர்வுகளாக ஆற்றப்படவுள்ளன.

இந்த ஆராய்ச்சி மாநாட்டில் சிறப்பு நிகழ்வுகளாக களனிப் பல்கலைக்கழகத்தின் பட்ட மேற்படிப்பு பீடாதிபதி பேராசிரியர் மனிக் குணசேகரா சிறப்புரையாற்றவுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் பௌதீகத் துறை தலைவர் பேராசிரியர் பி.ரவிராஜன் விசேட உரையாற்றவுள்ளார். யாழ்.பல்கலைக் கழகத்தின் விவசாய உயிரியல்துறை தலைவர் பேராசிரியர் ஜீ.மிகுந்தன் நன்றியுரை யாற்றவுள்ளார்.

இதன்போது கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளதுடன் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்படவுள்ளன.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா வளாகத்தின் முன்னாள் முதல்வரும் பேராசிரியர் எஸ். இராஜதுரையும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2)

# ஜப்பானின் உதவியுடன் யாழ்.மாவட்ட டிஜிட்டல் வரைபடம் தயாரிக்க முடிவு

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்தின் டிஜிட்டல் வரைபடம் ஒன்றை தயாரிப்பதற்கு ஜப்பான் நிதி உதவி வழங்கியுள்ளது.

1-10 ஆயிரம் என்ற அளவுத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தை உள்ளடக்கக்கூடிய வகையில் டிஜிட்டல் வரைபடமொன்று தயாரிக்கப்படவுள்ளது.

இலங்கை நில அளவையியல் திணைக்களம் இந்த வரைபடம் தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. போரின் பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் வரைபடம் ஒன்றை தயாரிப்பதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# பிரபஞ்சத்தின் அற்புதங்கள்

அடுத்து சந்திரனைப் பற்றி பார்ப்போம். சந்திரன் பூமியின் உப கிரகமாகும். சூரியனைப் போல் சந்திரன் ஜீவராசிகளுக்கு அவ்வளவு முக்கியமானதல்ல. ஆனால் சந்திரன் இல்லையென்றால் குளிர்ந்த நிலா வெளிச்சத்தை நாம் கண்டுகளிக்க முடியாது. பூமி சூரியனைச் சுற்றி வருவது போலச் சந்திரனும் புவியைச் சுற்றி வருகின்றது. பூமியில் ஒருவன் ஒரு கல்லை அறுபது மீற்றர் உயரத்திற்கு எறிவானெனின் சந்திரனில் அதை முண்ணூற்று அறுபது மீற்றர் தூரத்திற்கு எறிவான். அதாவது சந்திரனின் ஈர்ப்பு சக்தியானது பூமியில் உள்ளதைவிட ஆறிலொரு பங்காகும்.

பூமியில் சூரிய வெப்பத்தை வாயுக்கள் ஓரளவு தடுத்து குறைக்கின்றன. சந்திரனில் காற்று இல்லாத படியினால் சூரியக் கதிர்கள் விழுகின்ற பகுதியில் வெப்பநிலை அதிகரித்து காணப்படும். தொலை நோக்கி வாயிலாக சந்திரனை உற்று நோக்கினால் அதன் மேற்பரப்பில் உள்ள மலைகளயும் பள்ளத்தாக்குகளையும் அவதானிக்கலாம். இதுவே எங்களுக்கு பாட்டி வடை சுடுவது போன்று காட்சியளிக்கின்றது.

சந்திரன் பூமியைச் சுற்றிவரும் அதே அளவு நேரத்தில் அது தன்னைத் தானே சுற்றுகின்றது. இதனால் பூமியில் உள்ளோர் நிலாவின் ஒரு பகுதியைத் தான் எப்பொழுதும் காணக்கூடியதாகவுள்ளது.

இனி புதன் பற்றி அறிவோம்.

இதனை ஆங்கிலத்தில் மேக்குறி என்று அழைக்கின்றனர். சூரியனுக்கு மிகவும் அண்மையில் நிலைகொண்டுள்ள கிரகம் புதனாகும். அனைத்துக் கிரகங்களுக்கும் புதனே மிகச் சிறிய கிரகமாகும். இக்கிரகத்தின் விட்டம் நான்காயிரத்து எண்ணூறு கிலோ மீற்றராகும். இது சந்திரனைவிட சிறிய பருமனுடையது.

புதன் சூரியனை ஒரு முறை சுற்றிவர எண்பத்தெட்டு நாட்கள் செல்கின்றன. நாம் வாழுகின்ற பூமியானது இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்கு ஒரு முறை தன்னைத் தானே சுற்றுவதனால் புவியின் எல்லாப்பகுதிகளுக்கும் இரவு பகல் மாறி மாறிக்கிடைக்கின்றது. ஆனால் புதனில் நீண்ட நாட்களுக்கு இரவும் பகலும் மாறிமாறி வருகின்றன.


புதன் சூரியனுக்கு அருகில் இருக்கும் போது கதிரவனின் ஒளிபடுகின்ற பகுதியின் வெப்பநிலை சுமார் நானூறு பாகை செல்சியல் ஆகவும் தூரத்தில் இருக்கும் வேளையில் ஏறத்தாழ இருநூற்று எண்பது பாகை செல்சியசாகவும் தென்படுகின்றது என வானிலை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பூமிக்கும் சூரியனுக்கும் இடையே புதன் ஒரே நேர் கோட்டில் வலம் வரும் போது அது சூரிய விம்பத்திற்குக் குறுக்காக ஒரு சிறு கரும் புள்ளியாக ஊர்ந்து செல்லும். இதனைக் கிரகணம் என்று கூறுவதற்கு பதிலாக புதசந்திரணம் என்று அழைக்கின்றனர்.

விண்வெளி ஆராய்ச்சி மையத்திலுள்ள தொலைநோக்கி வாயிலாக புதனை உற்று நோக்கினால் வளர்ப்பிறை, தேய்பிறை, பூரணை, அமாவாசை நிகழுவதைக் காணலாம். இப்பிரபஞ்சத்தில் நிகழுகின்ற அற்புதங்களை கண்டுகளிக்க உறுதுணை புரிகின்ற தொழில் நுட்ப கருவிகள் நவீன முறையில் கண்டு பிடிக்கப்பட்டே வருகின்றன.

வீனஸ் பற்றி ஆராய்வோமாகில்,

இக்கிரகம் பருமனிலும் திணிவிலும் பூமியை ஓரளவிற்கு ஒத்திருப்பதாகத் கூறப்படுகின்றது. இதனுடைய விட்டம் பன்னிரெண்டாயிரத்து முன்னூற்று இருபது கிலோ மீற்றராகும். இது சூரியனை ஒரு முறை சுற்றிவர இருநூற்று இருபத்து நான்கு நாட்கள் ஆகின்றது. சூரியனுக்கும் பூமிக்கும் இடையே ஒரு நேர்கோட்டில் வரும் போது இதுவும் கரும் புள்ளியாகத் தான் தோற்றமளிக்கும். இந்நிகழ்வை சுக்கிர சந்திரணம் என அழைப்பார்கள். இது வெகு அபூர்வமாக நிகழுகின்றது.




இறுதியாக இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு ஆனி மாதம் எட்டாம் திகதி நடைபெற்றது. அடுத்ததாக எதிர்வரும் இரண்டாயிரத்து பன்னிரண்டாம் ஆண்டு ஆனி மாதம் 6 ஆம் திகதி நிகழும் என்று வானியலாளர்கள் கூறுகின்றனர்.எட்டு ஆண்டுகள் இடைக்காலத்தைக் கொண்ட இச்சுக்கிரசந்திரணம் இரண்டாயிரத்து பன்னிரண்டுக்குப் பின்னர் நூற்றாண்டு காலப் பகுதியைச் கடந்ததும் நிகழுமாம். இக்கிரகத்தைச் சுற்றி வெண்நிற மேகப் படலம் பரிணமித்துள்ளது. இதனால் சுக்கிரனின் மேற்பரப்பை துல்லியமாக ஆராய்வதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

செவ்வாய் (மாஸ்) பற்றி சிறிது தெரிந்து கொள்வோம்.செவ்வாய் சூரியனை ஒரு முறை சுற்றி வருவதற்கு அறுநூற்று எண்பத்தேழு நாட்கள் எடுக்கின்றது. தன்னைத்தானே சுற்ற இருபத்து நான்கு மணி நேரமும் முப்பத்தேழு நிமிடங்களும் ஆகின்றது. ஆகவே புவியைப் போலவே அங்கும் இரவு பகல் மாறி மாறி உண்டாகும். பூமியின் அச்சு இருபத்து மூன்று அரை பாகை சரிந்துள்ளது.

செவ்வாய் தன்னைத்தானே சுற்றும் அச்சு இருபத்து நான்கு பாகையில் சரிந்துள்ளமையால் பருவகாலம் புவியை ஒத்ததாகவே காணப்படுகின்றது. செவ்வாய் சூரியனைச் சுற்ற எடுக்கும் காலம் ஏறக்குறைய பூமி கதிரவனைச் சுற்ற எடுக்கும் காலப்பகுதியை காட்டிலும் இருமடங்காக உள்ளதனால் கால நிலையும் இருமடங்காகின்றது. தொலை நோக்கி வாயிலாக செவ்வாயை உற்று நோக்கும் வேளையில் அது செம்மஞ்சள் நிறமாகத் தோன்றும்.

இனி நாம் ஆராய வேண்டிய கிரகம் வியாழன் (யூப்பிட்டர் ) ஆகும். இதன் பருமன் ஏனைய கிரகங்களை விட பெரிதாக உள்ளதனால் இது இராட்சத கிரகம் என அழைக்கப்படுகின்றது.இது தன்னைத்தானே ஒரு முறை சுற்ற ஒன்பது மணித்தியாலங்களும் ஐம்பத்தைந்து நிமிடங்களும் ஆகின்றது. ஆகவே இந்த இராட்சத கிரகம் பூமியை விட எவ்வளவு வேகமாகச் சுழலுகின்றது என்பதனை கற்பனை பண்ணிப் பார்க்கலாம். அதேவேளை வியாழன் சூரியனை ஒரு முறை சுற்றி வர பதினொரு வருடங்களும் முந்நூற்று பதினைந்து நாட்களும் எடுக்கின்றது.

வியாழனிலிருந்து கிடைக்கப் பெற்ற நிறமாலையை விஞ்ஞானிகள் ஆராய்ந்து பார்த்த போது அங்கு அமோனியா, மெதேன் போன்ற வாயுக்கள் இருப்பதை கண்டறிந்தனர். நாம் வாழுகின்ற பூமிக்கு ஒரே ஒரு உப கிரகம் உள்ளது. ஆனால் வியாழனுக்கு பதினாறு உபகிரகங்கள் சுற்றி வருவதாக அண்மையில் கண்டுபிடித்துள்ளனர்.

எமது ஆராய வேண்டிய பட்டியலில் அடுத்து வருவது யுரேனஸ் ஆகும்.ஆயிரத்து எழுநூற்று எண்பத்தோராம் ஆண்டுவரை சூரிய குடும்பத்தில் ஆறு கிரகங்களே உள்ளன என்று நம்பியிருந்தனர். வில்லியம் ஹார்வே என்னும் விஞ்ஞானியினால் யுரேனஸ் என்ற கிரகம் தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்டது. இதன் விட்டம் நாற்பத்தெட்டாயிரம் கிலோ மீற்றராகும். தன்னைத்தானே சுற்ற பத்து மணித்தியாலமும் நாற்பத்து எட்டு நிமிடங்களும் எடுக்கின்றது.சூரியனை ஒரு முறை சுற்ற எண்பத்து நான்கு வருடங்கள் செல்கின்றது. யுரேனஸ்சிற்கு ஐந்து உப கிரகங்கள் உள்ளன.

அடுத்ததாக நெப்ரியூனைப் பற்றி பார்ப்போம்.இக்கிரகம் ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்தாறாம் ஆண்டு பெர்லின் விண்வெளி ஆராய்ச்சி மையத்திலிருந்த விஞ்ஞானிகளினால் கண்டு பிடிக்கப்பட்டது. நூற்று அறுபத்து ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இது சூரியனைச் சுற்றி வருகின்றது. தன்னைத் தானே சுற்ற பதினைந்து மணித்தியாலம் நாற்பது நிமிடங்களும் செல்லும். இக்கிரகம் சூரியனிலிருந்து மிகவும் தொலைவில் நிலை கொண்டுள்ளதால் எப்பொழுதும் குளிராகவே காணப்படுகின்றது. இதற்கு இரண்டு உப கிரகங்கள் உள்ளன.

இவ் உப கிரகங்களில் ஒன்று ஆறு நாட்களுக்கு ஒருமுறை தாய்க்கிரகத்தை எதிர்த் திசையில் வலம் வருகின்றது. நெப்ரியூனை வெறுங்கண்ணால் பார்க்க முடியாது.

இனி இக்கால விஞ்ஞானிகளால் கிரகங்கள் பட்டியிலிலிருந்து துரதிர்ஷ்டவசமாக நீக்கப்பட்ட புளூட்டோவைப் பற்றி சிறிது ஆராய்வோம். இக்கிரகம் ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பதாம் ஆண்டு விண்வெளி ஆராய்ச்சி மையத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டது.இது சூரியனிலிருந்து ஐநூற்று எழுபத்தாறு கோடி கிலோமீற்றர் தொலை தூரத்தில் உள்ளது.

இனி தற்கால விஞ்ஞானிகள் புளூட்டோ கிரகத்தை கோள்கள் பட்டியலிலிருந்து நீக்கியமைக்கான பிரதான காரணியைப் பார்ப்போம். அதாவது புளூட்டோவிற்கு கிரகங்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படை இயல்புகள் மிகக் குறைவாகவே உள்ளதைக் குறிப்பிடலாம்.

இனி விண்துகள்கள் பற்றிப் பார்ப்போம்.

அதாவது செவ்வாயின் பாதைக்கும் வியாழனின் பாதைக்கும் இடையில் வித்தியாசமான பருமனுடைய பல்லாயிரக்கணக்கான சிறு விண்துகள்கள் ஏனைய கோள்களைப் போலவே சூரியனை ஒழுங்காக சுற்றி வருகின்றன.

இறுதியாக விண்கற்கள் பற்றி சிறிது தெரிந்து கொள்வோம். வானத்தில் க[illegible] முகில்கள் இல்லாது கோடான கோடி விண் மீன்கள் எம்மைப் பார்த்து கண் சிமிட்டுகின்ற வேளையில் நட்சத்திரம் போன்ற தோற்றமுடைய பொருளொன்று திடீரென்று புவியை நோக்கி மின்னல் வேகத்தில் வீழ்வதைக் காண்கின்றோம். இது தான் விண்கற்களாகும். சிறிய கற்களினால் பூமியில் வாழ்[illegible]வாருக்கு பங்கம் ஏற்படப்போவதில்லை. ஆ[illegible]ல் ஆயிரத்து தொள்ளாயிரத்து எட்டாம் ஆண்டு சைபீரியக்காட்டில் வீழ்ந்த பாரிய விண்கல்லினால் பெரும் சேதம் உண்டாகிவிட்டதை அறிகின்றோம்.


இதனால் ஏற்பட்ட குழி சுமார் நாற்பத்[illegible] ஐந்து கிலோ மீற்றர் விட்டம் உடையதாக[illegible] காணப்பட்டது. வனப் பிரதேசத்தில் வீழ்ந்த காரணத்தினால் மனித உயிர்களுக்கு அவ்வளவாக சேதம் ஏற்பட்டிருக்காது. ஆனால் நகர்ப்புறங்களிலோ அல்லது சமுத்திரங்களிலோ இராட்சத விண்கற்கள் விழு[illegible] பட்சத்தில் இலட்சக்கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்டு விடும். கடலில் விழுகின்ற பாரிய பருமனுடைய விண்கல்லால் சுனாமி ஏற்படலாம். சுனாமியின் கொடூரத்தை நாம் இரண்டாயித்து நான்கு டிசெம்பர் மாதம் நன்கு உணர்ந்து கொண்டோம்.

பிரபஞ்சத்தில் உள்ள அற்புதங்களை விஞ்ஞானிகள் கண்டுகளிக்க அதிசக்தி வாய்ந்த தொலைநோக்கி, ரேடார், ரொக்கெட்டில் ஏவப்படுகின்ற ஸ்கை லாப் சாதனங்கள் தொடர்ந்து உறுதுணை புரிந்து கொண்டே வருகின்றது. இதன்மூலம் எதிர்காலத்தில் மேலும் மேலும் பல பிரபஞ்சத்தின் அற்புதங்களை அறிந்து கொள்ளலாம். (முற்றும்)

**எஸ்.கேதீஸ்வரன்**
(ஆசிரியர்-யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A)
நூலகம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 53

**இரண்டு கோளங்களும் சம திணிவு உடையன. இரண்டு உருளு தளங்களும் ஒரே மாதிரியானவை. எக்கோளம் உருளும் போது அதிக வேகத்தை பெறும்? (பெரிய கோளமா?, சிறிய கோளமா?)**



**விடைகளை 21.11.2011 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

(ஆசிரியர்-யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A)
நூலகம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**
இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செல்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 52 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**
விக்கினஜெயம் சுபாகர்
தேவாலய ஒழுங்கை, அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

**புதிர் 52 இற்கான கேள்வியும் விடையும்:**
U ஆனது ஒரு ஆடலோட்டம் முதல் S1 மூடப்பட்டால் எம்மின்குமிழ் ஒளிரும்? (L1,L2)?
விடை:-L2

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 53**

சரியான விடை :
முழுப்பெயர் :
முகவரி :
:
:
தொ.பே. இல :
கையொப்பம் :

# குருவின் பார்வையில்





ஆன்மீகம் 30

## தேசப்பற்று

ஒவ்வொரு நாட்டிலும் அந்த நாட்டின் நன்மைக்காக, பாதுகாப்பிற்காக வளர்ச்சிக்காக நாட்டுப் பற்று என்ற உணர்வு தீவிரமாய் மேலோங்கியிருக்கும். உலக நாடுகளுக்கெல்லாம் சுயலாபத்திற்காகவோ அல்லது பிழைப்பிற்காகவோ எல்லைகள் உருவாக்கப்பட்டிருக்கலாம். ஒரு கட்டிடத்தை உருவாக்க வேண்டுமானால் ஒவ்வொரு செங்கல்லாக அடுக்கித்தான் உருவாக்க முடியும். அதேவிதமாக, உலகை நல்லவிதமாக உருவாக்க வேண்டுமானால், சிறிது சிறிதாக பலநாடுகளை நல்ல விதமாக உருவாக்கி, உலகை நல்ல விதமாய் உருவாக்கிக் கொள்ள முடியும்.

எனவேநாடு என்ற எல்லை தேவை தான். உலகம் முழுவதையும் ஒன்றாக ஏற்றுக் கொண்டு செயல்படுகிற தன்மை மனிதரிடம் இல்லை. அதே நேரத்தில் நாட்டுப் பற்று என்பதை மிகவும் தீவிரமாக் கினால் தேவையின்றி பிரச்சினைகளும், பிரிவினைகளும் நிகழ வாய்ப்புள்ளது. இதன் மூலம் புரிந்து கொள் ளும் தன்மையே மிக மோசமாய் சிதைவுபடும்.

தற்போது, புரிந்து கொள்ளும் தன்மை எப்படியிருக்கிறதென்றால் நாம் எதனோடு அடையாளம் எடுத்திருக்கிறோமோ, அதற்கேற்பவே நமது புரிந்து கொள்ளும் தன்மையும் இருக்கிறது. நாம் இந்த நாட்டில் பிறந்து வளர்ந்திருந்ததால் இந்த நாட்டின் மீது ஒரு ஆழமான பற்று நமக்கு வந்து விடுகிறது. அப்படியானால், நமது புரிந்து கொள்ளும் தன்மையும், இந்தப்பற்றின் அடிப்படையில்த்தான் இருக்கிறது. பகத்சிங்கைப் பற்றி கேள்விப் பட்டிருப்பீர்கள், இந்திய நாட்டிற்காக உயிரையே அர்ப்பணித்த ஒருவர். நாம் இந்த நாட்டில் பிறந்தவர்கள் என்பதால் பகத்சிங்கின் மீது நமக்கு பற்றுதல் இருக்கிறது. ஆனால், பகத்சிங் அவரது காலத்தில் அதிகாரத்திலிருந்த ஆங்கிலேயர் ஒருவரை கொலைசெய்து விட்டார். அவர்கள் பகத்சிங்கை துரோகியாக பார்த்தார்கள், அவரைத் தூக்கிலிட்டார்கள். அதனால் நாம் அவரைத் தியாகி என்கிறோம். ஏனென்றால் நாம் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்.

எனவே யார் தியாகி,யார் துரோகி என்பது நாம் எதன் மீது அடையாளம் கொண்டிருக்கிறோமோ அதைச்சார்ந்துதான் உள்ளது. நமது அடையாளம் மொழியின் மீதிருந்தாலும், மாநிலத்தின் மீதிருந்தாலும் மதத்தின் மீது இருந்தாலும், ஒரு தேசத்தின் மீது இருந்தாலும் அதைச் சார்ந்துதான் நமது புரிந்து கொள்ளும் தன்மையும் இருக்கும். வாழ்க்கையை, உயிர்தன்மை எப்படி இருக்கிறதோ அப்படிப்பார்க்காமல், நமது அடையாளங்களின் அடிப்படையில் பார்க்கிறோம். இப்படி இருந்தால் உண்மை எதுவென புரிந்து கொள்ளும் வாய்ப்பில்லை.

தொழில் ரீதியாக, தேசங்களுக்கிடையே உள்ள எல்லைகள் உடைந்துள்ளன. ஒரு வியாபாரிக்கு இந்த தேசம், அந்தத் தேசம் என்ற எல்லைகள் இல்லை. அவர் எங்கு வேண்டுமானாலும் வியாபாரம் செய்யலாம். ஆனால், அரசியல் நிலையிலும் இராணுவ நிலை யிலும் இந்த மாற்றம் நிகழவில்லை. ஆனால், அது நிகழ வேண்டும் என்ற நோக்கத்தில் தான் உலகம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. நாடுகளுக்கிடையே உள்ள இந்த எல்லைகளைத்தாண்டி மனிதன் மனிதனாக வாழ வேண்டும். நாட்டுப்பற்று மிகத் தீவிரமாகி விட்டால், இன்னொரு மனிதன் மீது அன்பில்லாமல் வாழும் சூழல் ஏற்படும். இன்னொரு மனிதர்மீது தீவிரமான வெறுப்பும், எதிர்ப்பும் ஏற்பட வாய்ப்பிருக்கிறது...

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# ஒடுக்கப்பட்ட மக்களின் சின்னஞ்சிறு கடவுளர் வழிபாடு

03

நாட்டாரியல்

## பெருந்தோட்ட மக்களின் மத வழிபாடு தொடர்பான சமூகவியல் ஆய்வு

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"

ரா.நித்தியானந்தன் B.A.(Hons),M.Phil

இந்த அடிப்படையில் நகர்ப்புற மக்களின் வழிபாட்டு கடவுளாகிய சிவன், உமை, விஷ்ணு, பிள்ளையார், முருகன் என்ற தெய்வங்களை வழிபடுகின்றனர். தோட்டப்புற மக்கள் மாரியம்மன், வைரவர், காளி, இடும்பன், கந்தன் என்ற சிறு தெய்வங்களுடன் மதுரைவீரன், முனியாண்டி,கவாத்து சுவாமி, மலைசாமி, சுடலை மாடன் , சங்கிலிக் கருப்பன் என்பவற்றையும், இவற்றுக்குப் புறம்பாக வனத்துச் சின்னப்பர் என்ற தெய்வத்தையும் வழிபடுகின்றனர்.

எனவே, ஏற்கனவே கூறியது போல பெருந்தெய்வங்களுக்கு எதிர்க்கணியமான சிறு தெய்வங்களே இலங்கைப் பெருந்தோட்டப் புறங்களில் வணங்கப்படுகின்றன. இதில் இந்து சமயத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமானுக்கு எதிரான கருத்து நிலை எண்ணக்கருவும் அல்லது சிவனை மாறுபட நோக்கும் மனப்பாங்கும் சுவாரசியமானது. மறை நிலையில் இவ்வழிபாடுகள், விழாக்கள் என்பவற்றில் இவைகள் வெளிப்படுகின்றன. அம்மன், காளி, வீரமாகாளியாத்தாள் என்ற சிறு தெய்வங்கள் உமையின் பெருந் தெய்வ வடிவத்தில் இருந்து தோன்றிய சிறு தெய்வங்களாகும். ஆனால், மக்கள் உமையை உமையாக வணங்காமல் சக்தியின் பிரதிகளாகிய கடுந்தெய்வங்களாக எண்ணி வணங்குகின்றனர் சிவபெருமான் தனது மாமனாகிய தக்கனுக்கு எதிரான போது சக்தியின் கொடுந் தன்மைகள் வெளிப்படுகின்றன. சக்தி அசுரர்களுக்கு சார்பாகவும் நீதியின் சார்பாகவும் சிவனுக்கு எதிராகவும் போராடும்போது அவ்விடத்தில் சிவனின் அமைதியைக் கலைக்கின்ற சக்தியின் மேற் கூறிய வடிவங்களை இம்மக்கள் சிறு தெய்வங்களாக எண்ணியும் கொண்டாடியும் வருகின்றனர். சிவனிடம் சக்தி கொண்ட எதிர்ப்புணர்வும், வீரமும், பெருந் தோட்ட மக்கள் அவளை தன் நாயகியாக, தெய்வமாக வணங்கத்தூண்டின. இலங்கையின் மேல்நிலை மக்கள், நகர மக்கள் சிவனை முழுமுதற் கடவுளாக வணங்குகின்றபோது இம்மக்கள் அதற்கு எதிரிடையான போக்கு ஒன்றை எடுக்கின்றனர்.

இம்முரணுறு நிலைக்கான அடிப்டைக்காரணம் எதுவென ஆராயும் போது இன்னுமொரு குறியீட்டுக் காரணியையும் இங்கு கூறலாம். பெருந்தோட்ட மக்களுக்கும் இலங்கையின் மலையகத்தின் நகர் சார்ந்த தமிழ் மக்களுக்கும் இடையிலான சாதிய முரண்பாடே இதற்குக் காரணம் எனலாம். ஏனெனில் நகர்ப்புறங்களிலுள்ள இந்துக் கோவில்களில் பெரும்பாலும் சிவன், மகாவிஷ்ணு விநாயகர், சிவனின் அர்த்த நாரீசுவரர் தோற்றம் என்பன பெருந் தெய்வங்களாக வழிபடப்படும்போது மேற் குறிப்பிட்ட பெருந்தோட்ட மக்கள் வழிபடும் சிறு தெய்வங்களுக்கு இடமளிக்கப்படாமை ஒரு காரணமாக இருப்பதோடு, சாதி அடிப்பமைடயில் பெருந்தோட்டத் தமிழ் தொழிலாளர்கள் சுதந்திரமாக வழிபடுவதற்கு தடையும் ஒரு காலகட்டத்தில் இருந்தது. வழிபாட்டுச் சடங்குகளில் இம்மக்களுக்கு சமமான அந்தஸ்து வழங்கப்படவில்லை. அத்தோடு பிராமணர்களும், உயர்சாதி இந்துக்களும் வழிபடக்கூடிய ஒரு தெய்வமாக சிவன் காணப்பட்டமை சிவவழிபாட்டடோடு இந்த மக்கள் முரணுறுவதற்கு ஒரு காரணமாகும். மறுபுறம் சிவன் பற்றிய கோட்பாடுகளும், தத்துவங்களும் புராணக் கதைகளின் பின்னணியும் இவர்களால் விளங்கிக் கொள்ள முடியாதவைகளாகக் காணப்பட்டன.

### பெருந் தோட்டங்களில் கந்தன் வழிபாடு

இத்தன்மையுடன் தொடர்புடைய இன்னுமொரு தெய்வம்தான் கதிரேசன் அல்லது முருகன் என்ற பெருந்தெய்வம். இங்கு கந்தன், பழனி ஆண்டவன் என்ற சிறு தெய்வங்களாக முருகன் வணங்கப் படுகின்றான். சக்தி வழிபாட்டிற்கும் கந்தனின் வழிபாட்டிற்கும் இடையில் இவர்களின் அணுகுமுறை ஒன்றாகவே காணப்படுகிறது.

முருகன், சிவனை எதிர்த்த போது அவன் கந்தனானான். அங்கு அவன் தொழிலாளர்களால் கவரப்படுகின்றான். கதிர்காம தெய்வம் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் பிரபல்யமடைகின்றது...

(தொடரும்)

# புதிதாக நிறுவனங்களை பொறுப்பேற்று அரசாங்கம் என்ன செய்யப்போகின்றது

## ஐ.தே.க.எம்.பி. மங்கள சமரவீர கேள்வி

(கொழும்பு)

செயற்பாடு குறைந்த தொழில்முயற்சிகள் மற்றும் குறைந்த பயன்பாட்டையுடைய சொத்துக்களுக்கு புத்துயிர் அளித்தல் சட்டம் அமுலாவதன் மூலம் நாட்டில் திருட்டுத்துவ ஆட்சி உத்தியோகபூர்வமாக செயற்படுத்தப் படும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்கின்றது.

நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர இந்தக் கருத்தினை கூறினார்.

நாட்டில் திருட்டுத்துவ ஆட்சி உருவாகி வருவதாக கூறிய மங்கள சமரவீர அரச அதிகாரத்தை பயன்படுத்தி நாட்டிலுள்ள வளங்களையும் மக்களின் சொத்துக்களையும் ஆட்சியாளர்கள் தமது குடும்ப உறுப்பினர்களுக்கு அல்லது கைப்பொம்மைகள் மதியில் பகிர்ந்தளிப்பது அல்லாவிட்டால் கூறையாடுவதே இதன் பொருளாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தனியார் நிறுவனங்களை பறிமுதல் செய்வதற்கான சட்டம் பாராளுமன்றத்தினுள் நிறைவேற்றப்பட்டால் இலங்கையிலுள்ள திருட்டுத்துவ ஆட்சி உத்தியோகபூர்வமாக அமுலுக்கு வரும் என்று அவர் தெரிவித்தார்.

செயற்பாடுகள் குறைவாக உள்ள தொழில் முயற்சிகள் மற்றும் குறைவான பயன்பாட்டையுடைய சொத்துக்களுக்கு புத்துயிர் அளித்தல் சட்டம் என உண்மையிலேயே இவ்வளவு நீளமாக அதற்கு பெயரிடாமல் ஆட்சியாளரின் தேவைகளுக்காக காணிகளை சூறையாடும் சட்டம் என்று கூறினால் அனைவரினாலும் இலகுவாக கூற முடியும் என மங்கள சமரவீர கூறினார்.

தமக்கு கீழுள்ள நிறுவனங்களை மேம்படுத்த முடியாத அரசாங்கத்தினால் புதிதாக நிறுவனங்களை பொறுப்பேற்று அதனையும் மேம்படுத்த முடியாது என்பது பாடசாலை செல்கின்ற பிள்ளைகளுக்கு கூடப் புரியும் எனவும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒரு வகையான மாஃபியா குழுக்கள் சிலவற்றின் ஊடாகவே செயற்படுத்தப்படுகின்றது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார்.

திருட்டுத்துவ ஆட்சி நிலவிய அனைத்து நாடுகளிலும் குறிப்பாக சுதந்திர ஊடகங்கள் முற்றாக ஒடுக்கப்பட்டதாகவும் பயங்கரவாதத்தை ஒடுக்கும் பேரவையில் வடக்கில் பத்திரிகைகளுக்கு சீல் வைக்கப்பட்டதாகவும் வடக்கின் வெகுசன ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்.

அந்த ஒடுக்குமுறையை தெற்கிற்கு



கொண்டு வந்து சிரச நிறுவனம் மீது குண்டுத் தாக்குதல் நடத்தியதாகவும் லசந்த விக்கிரம துங்கவை ஜனவரி மாதம் 8 ஆம் திகதி கொலை செய்ததன் மூலம் ஊடகவியலாளர்களுக்கு எதிரான பெருஞ்சமர் ஆரம்பிக்கப்பட்டதாகவும் மங்கள சமரவீர கருத்துத் தெரிவித்தார். (அ-2)

# புதிய ரயில் மார்க்கங்கள் நிர்மாணம்-அரசாங்கம்

(கொழும்பு)

புதிதாக புகையிரத மார்க்கங்கள் சில வற்றை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன் பிரகாரம் குருநாகலில் இருந்து ஹபரண ஊடாக தம்புளை வரையில் புதிய புகையிரத மார்க்கம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புகையிரத திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வெல்லவாயவில் இருந்து பிபிலை ஊடாக பதுளை வரையிலும் திருகோணமலையில் இருந்து மகவ ஊடாக புத்தளம் வரையிலும் மதவாச்சியிலிருந்து திருகோணமலை வரையிலும் புதிதாக புகையிரத மார்க்கங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

களனிவெலி ரயில் மார்க்கத்தை கொழும்பில் இருந்து அம்பாந்தோட்டை வரை நீடிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக விஜய சமரசிங்க கூறினார்.

சாத்தியக்கூறு ஆய்வுகளின் பின்னர் புதிய புகையிரத மார்க்கங்களை எதிர்காலத் திட்டம் ஒன்றின் ஊடாக தீர்மானிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை புகையிரத திணைக்களம் மற்றும் போக்குவரத்து அமைச்சு ஆகியன இணைந்து முன்னெடுக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# மாலைதீவில் வீதி நிர்மாணிப்பதற்கு இலங்கை 10 மில்லியன் வழங்கியது



(கொழும்பு)

நேற்று ஆரம்பமாகியுள்ள 17 ஆவது சார்க் மாநாட்டில் பங்கேற்பதற்காக மாலைதீவு சென்றடைந்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையின் நிதியுதவியுடன் மாலைதீவில் நிர்மாணிக்கப்படவுள்ள வீதிக்கான அடிக்கல்லை நேற்று முன்தினம் மாலை நாட்டி வைத்துள்ளார்.

4.5 கிலோ மீற்றர் நீளமான இந்த வீதி நிர்மாணத்திற்கு 10 மில்லியன் டொலர்களை இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

மாலைதீவில் உள்ள மரோதா தீவுப்பகுதியில் அமைக்கப்படவுள்ள இவ்வீதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் அப்பகுதியிலுள்ள மக்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது ஜனாதிபதியுடன் சென்ற இலங்கை அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், சம்பிக்க ரணவக்க ஆகியோருடன் வெளிநாட்டு பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (அ-2)

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கு தேசிய அடையாளஅட்டை கட்டாயம்

## பரீட்சைகள் ஆணையாளர் திணைக்களம்

(கொழும்பு)

இம்முறை நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண பரீட்சையின் போது ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு பின்னர் பிறந்த பிள்ளைகளுக்கு மாத்திரமே தபால்மூல அடையாளஅட்டை செல்லுபடியாகும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.இந்த திகதிக்கு முன்னர் பிறந்த அனைத்து பிள்ளைகளுக்கும் தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தபால்மூல அடையாள அட்டையுடன் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களும் அதிலுள்ள இரண்டாம் மற்றும் மூன்றாம் பக்கங்களில் உறுதி செய்யப்பட்ட பிரதிகளை நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க கூறினார்.

பரீட்சை ஆரம்பமாகும் தினத்தன்று இந்த பிரதிகளை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரிடம் ஒப்படைக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் கட்டாயமாக தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (அ-2)

# இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 6.9 டொலர்

## அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவிப்பு

(கொழும்பு)

2011 ஜனவரி முதல் ஒகஸ்ட் மாதம் வரைக்கும் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 6.9 பில்லியன் டொலர் என கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

தமது அமைச்சின் கீழ் செயற்படும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் புள்ளி விபரத்தின் படி இது 28.6 சதவீதமான வளர்ச்சியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் வளர்ச்சி வீதத்தில் பிரதான இடத்தை விவசாய உற்பத்தி பொருட்கள் 13.6 சதவீதமாகவும் கைத்தொழில் உற்பத்தி பொருட்கள் 35.6 வீதமாகவும் காணப்படுவதாக அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

விவசாய உற்பத்தி பொருட்களில் தேங்காய் கொப்பரா 87.3 சதவீதமும் இயற்கை இறப்பர் 46.9 சதவீதமும் தும்பு சார்ந்த உற்பத்தி பொருட்கள் 27.9 சதவீதமும் அத்தியாவசிய எண்ணெய் 46.1 சதவீதமும் வாசனை திரவியங்கள் 34.5 சதவீதமும் காய்கறி 16.2 சதவீதமும் பழங்கள் 14.0 சதவீதமும் இயற்கை பூ மற்றும் இலை 17.6 சதவீதமும் மற்றும் தேயிலை 3.1 சதவீதமுமாக காணப்படுகின்றது.

கைத்தொழில் துறையில் ஆடைக் கைத்தொழில் 39.5 சதவீதமும் 27.4 சதவீத அதிகரிப்பாகும்.

ஏனைய கைத்தொழில் உற்பத்தி பொருட்களாக இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் 24.9 சதவீதமும் உணவு மற்றும் புகையிலை 46.1 சதவீதமாகவும் உலோக கனிப்பொருள் உற்பத்தி 38.8 சதவீதமாகவும் தோல் உற்பத்தி 36.3 சதவீதமாகவும் மர உற்பத்தி 31.8 சதவீதமாகவும் இரசாயன உற்பத்தி 22.8 சதவீதமாகவும் பிளாஸ்டிக் பொருட்கள் 14.7 சதவீதமாகவும் அடிப்படை உலோக உற்பத்தி 12.4 சதவீதமாகவும்,

இலத்திரனியல் மற்றும் இயந்திர உற்பத்திப் பொருட்கள் 27.04 சதவீதமாகவும் கடதாசி மற்றும் கடதாசி உற்பத்திப் பொருட்கள் 11.5 சதவீத மாகவும் கப்பல் மற்றும் படகு 11.7 சதவீதமாகவும் பெற்றோலிய உற்பத்திக் பொருட்கள் 16.63 சதவீதமாகவும் உள்ளன என்றார். (அ-2)

# யுத்தத்தில் வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளை கட்டிக்கொடுக்க நடவடிக்கை

## யாழ்.இராணுவத்தளபதி தெரிவிப்பு

யுத்தத்தில் வீடுகளை இழந்த வட பகுதி மக்களுக்கு தற்காலிக வீட்டுப் பிரச்சினையை தீர்க்க இராணுவத்தினர் நிரந்தரமான வீடுகளை கட்டிக் கொடுக்க போவதாக யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துரு சிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு பகுதியில் ஆயிரத்து 776 வீடுகள் இராணுவத்தினர் நிர்மாணித்து முடித்துள்ளனர் என்று யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.மேலும் தமது படையினர் இரண்டாயிரம் வீடுகளை மக்களுக்கு கட்டி கொடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பருத்தித்துறை, பொற்றிலைக்கேணி மற்றும் வடமராட்சி பகுதிகளில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக இராணுவத்தினரின் முயற்சியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனம் வீடுகளை கட்டி கொடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

மொத்தமாக 53 கோடியே 28 இலட்சம் செலவழிக்கப்படுவதாகவும் தளபதி ஹத்துரு சிங்க தெரிவித்தார்.

மீள்குடியேற்றப்பட்ட வடக்கு மக்களின் தற்காலிக வீட்டுப் பிரச்சினையை தீர்க்கவே இவ்வாறு வீட்டுத்திட்ட நடவடிக்கைகளில் தமது இராணுவத்தினர் இறங்கியிருப்பதாக குறிப்பிட்ட அவர் அடுத்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் 2 ஆயிரம் வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என்றார். (அ-2)

# சவேந்திரசில்வா மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தவேண்டியது அவசியம்

## அமைதியையும் நீதியையும் ஐ.நா. பாதுகாக்க வேண்டும்

(நியூயோர்க்)

**சவேந்திரசில்வா மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டியது அமைதியையும் நீதியையும் நிலைநாட்டும் ஐ.நாவின் கடமை என அனைத்துலக பத்து மனிதஉரிமைகள் குழுக்கள் ஒன்றிணைந்து ஐ.நா.பொதுச் செயலாளருக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளனர்.**

தனக்கு எதிரான போர்க்குற்ற வழக்கைத் தள்ளுபடி செய்யக்கோரி மேஜர் ஜெனரல் சவேந்திரசில்வா நியூயோர்க் தெற்கு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவுக்கு பதிலளிக்கும் வகையில்

அனைத்துலக பத்து மனித உரிமைகள் குழுக்கள் ஒன்றிணைந்து ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூனுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதித் தூதுவர் பதவிக்காக மேஜர் ஜெனரல் சவேந்திர சமர்ப்பித்த அறிமுக ஆவணத்தை நிராகரிக்குமாறு கோரியுள்ளன.

சித்திரவதைகள், நீதிக்குப்புறம்பான படுகொலைகள், பொதுமக்கள் மீதான கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதல்கள் போன்ற போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக இவர் மீது சமஸ்டி நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளதாக அந்தக் கடிதத்தில் [illegible]றப்பட்டுள்ளது.

போர்க்குற்றவாளி ஒருவரை ஐ.நா. பதவித் தரத்தில் வைத்துள்ளது. இது ஒரு உளவியல் மற்றும் சட்ட நடவடிக்கை என்று அமெரிக்க பல்கலைக்கழக வோஷிங்டன் சட்டக் கல்லூரியின் மனித உரிமைகள் பிரிவின் பணிப்பாளர் அலி பேடன் தெரிவித்துள்ளார். மிகப் பெரிய அனைத்துலக கட்டமைப்பான ஐ.நா. அமைதி மற்றும் நீதியைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பிலுள்ளது. மேஜர் ஜெனரல் சவேந்திரசில்வா மீதான போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து முழு அளவில் விசாரணை நடத்த அனுமதிக்க வேண்டியது ஐ.நா.வின் கடமை.


தனது குற்றங்களில் இருந்து தப்பிக் கொள்வதற்கு அவர் இராஜதந்திர விலக்குரிமையைப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது.

போர்க்குற்றங்களிலும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களிலும் ஈடுபட்ட மேஜர் ஜெனரல் சவேந்திரசில்வாவின் இராஜதந்திர விலக்குரிமையை இரத்துச் செய்து அவரது அறிமுக ஆவணத்தை நிராகரித்து அவரை விசாரணை செய்வதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று பத்து மனித உரிமை அமைப்புகள் ஐ.நா. பொதுச் செயலரிடம் கோரியுள்ளன.

மனித உரிமைகள் மற்றும் அரசியலமைப்புக்கான ஐரோப்பிய நிலையம், மனித உரிமைகள்-அமெரிக்கா சித்திரவதைகளுக்கு எதிரான உலக அமைப்பு, அரசியலமைப்பு உரிமைகளுக்கான நிலையம், ட்ரயல், யால் சட்டப் பாடசாலை, அலாட், லொவென்ஸ்டன், அனைத்துலக மனித உரிமைகள் கிளினிக், குற்றமயப்படும் சமூகங்களுக்கு எதிரான பரப்புரை மற்றும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்ட மக்கள் சமூகம் ஆகியன இணைந்தே இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளன.

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் அறிமுக ஆவணத்தை நிராகரித்து சட்டத்தை மீறும் அரசாங்கங்களின் அநீதிகளுக்கு ஐ.நா. பாதுகாப்பு அளிக்காது என்றதும் போர்க்குற்றவாளிகளுக்கும் பாரிய கொடூரங்களைப் புரிந்தவர்களுக்கம் தங்குமிடமாக அமையாது என்றதுமான ஒரு செய்தியை வெளிப்படுத்த வேண்டும் என்றும் இந்த அமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

இலங்கை இராணுவத்தில் போர்க்குற்றங்களைப் புரிந்து அதிகாரிகளை இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளில் இராஜதந்திரப் பதவிகளில் அமர்த்தியுள்ளது.



உலகெங்கும் 22 முன்னாள் இராணுவ அதிகாரிகள் இலங்கை அரசாங்கத்தினால் இராஜதந்திரப் பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இது பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் அனைத்துலக முயற்சிகளுக்கு இடையூறாக உள்ளது என்றும் இந்த அமைப்புக்கள் கூறியுள்ளன. (அ-2)

## காரைநகர்-கொழும்பு பேருந்து சேவை மாற்றம்

(யாழ்ப்பாணம்)

இரவு 9 மணிக்கு புறப்படும் காரைநகர்-கொழும்பு புத்தளம் ஊடான பேருந்து சேவை நேற்று வியாழக்கிழமையில் இருந்து பிற்பகல் 5.30 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தில் இருந்துதனது சேவையை ஆரம்பித்துள்ளது என இ.போ.ச. கோண்டாவில் பிரதான பிராந்திய முகாமையாளர் அறிவித்துள் ளார். (அ)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ)

# வெள்ள அனர்த்தம் தொடர்பில் பொருத்தமான நடைமுறை அவசியம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்படாதிருக்க பொதுமக்கள் முறையான நடவடிக்கைகளை இனம்கண்டு அவற்றை சிரமதானம் மூலம் மேற்கொண்டு அனர்த்தங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி இணைப்பாளர் ப.சுதர்ஷநாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பருவமழை ஆரம்பித்துள்ளது. ஆகவே, வெள்ள அனர்த்தங்களிலிருந்து எம்மை பாதுகாத்து கொள்ள வேண்டியது அவசியம். எனவே, நாம் முன்னரே செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். மழைகாலங்களில் நீர்தேங்கிநிற்கும் பகுதிகளை இனம்கண்டு நீரை வழிந்தோடச் செய்வதற்கான நடவடிக்கைகளை சிரமதானம் மூலம் மேற்கொள்ள வேண்டும்.

எனவே, வெள்ள அனர்த்தத்தில்இருந்து பாதுகாப்பு பெறும் அதேவேளை நுளம்புப் பெருக்கத்தையும் கட்டுப்படுத்தலாம்.

இது விடயத்தில் அரச ,அரசசார்பற்ற நிறுவனங்களும் அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும்.

மேற்படி திட்டங்களை ஒழுங்காக செயற்படுத்துவதன் மூலம் அனர்த்தங்களில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3)

# யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்.குடாநாட்டில் உள்ள 23 பொலிஸ் நிலையங்களுக்கும் அடுத்த ஆண்டில் போக்குவரத்து வசதிக்காக மோட்டார் சைக்கிள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் குற்றத்தடுப்பு செயல்கள் தொடர்பாக பொலிஸார் உடன் விரைந்து செயற்படுவதில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர், குற்றச் சம்பவங்கள் நடைபெறும் இடங்களுக்கு விரைந்து செல்லக் கூடிய போக்குவரத்து வசதிகள், தங்குமிடவசதிகள் தம்மிடம் இல்லையெனப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களுக்கும் ஒவ்வொரு மோட்டார் சைக்கிள் தரும்படி கேட்டுள்ளனர். இந்த வருடம் அதனை நிறைவேற்றக்கூடியதாக வசதிகள் இருக்கவில்லை. அடுத்த ஆண்டில் அது நிறைவேற்றிவைக்கப்படும் எனவும் கூறப்பட்டது.

கூட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீன், யாழ். நகரசபை முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா, யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன், பொலிஸ் உத்தியோகத்தர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர். (அ-2)

# துணுக்காய் கல்வி வலயத்திற்கு நூற்று துவிச்சக்கரவண்டிகள்

(மல்லாவி)

ஐக்கிய நாடுகள் சிறுவர்பாதுகாப்பு நிதியத்தினால் (யுனிசெப்)துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட நீண்ட தூரங்களில் இருந்து பாடசாலைக்கு வருகின்ற மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக 100 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

மேற்குறித்த கல்வி வலய ஆண், பெண் மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதனிடம் கையளிக்கப்பட்டது.

இத்துவிச்சக்கரவண்டிகள் மேற்குறித்த வலயபாடசாலை அதிபர்கள் ஊடாக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு துரித கதியில் துவிச் சக்கர வண்டிகள் வழங்கப் படவுள்ளன. (அ-3-15)

# செயற்பாடு குறைந்த நிறுவனங்கள் குறித்து நீதிமன்றம் எவ்வாறு ஆராய்ந்தது

## கேள்வியெழுப்புகிறார் சுமந்திரன் எம்.பி

(கொழும்பு)

நிறுவனங்களின் கணக்கு வழக்கு மற்றும் ஏனைய விடயங்களை ஆராயாமல் செயற்பாடு குறைந்த நிறுவனங்களை நீதிமன்றத்தினால் எவ்வாறு தீர்மானிக்க முடியும் என்று கேள்வி எழுப்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.யான சுமந்திரன் அதிகாரங்களை இழந்திருக்கின்ற பாராளுமன்றமும் செயற்பாடு குறைந்த நிறுவனமாகும் என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செயற்பாட்டு குறைவாகவுள்ள தொழில் முயற்சிகளுக்கும் மற்றும் குறைவாகப் பயன்படுத்துகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை கலந்துரையாடவோ விபரங்களை அறிந்து கொள்வதற்கோ முன்னதாக தகவல்கள் கிடைக்கவில்லை. நிறுவனங்களின் ஐந்தொகையைப் பார்த்துத்தான் இங்கு பேச வேண்டியுள்ளது. சட்டமூலங்கள் தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த சட்ட மூலத்தில் குறிப்பிடப்படாத நிறுவனங்களும் இதற்குள் கொண்டுவரப்படக்கூடும்.

இந்த சட்டமூலத்தை அவசரமான சட்ட மூலம் என்கின்றனர். அவ்வாறு யாரும் நியாயப்படுத்த முடியாது. அமைச்சரவையின் தீர்மானம் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

கணக்குகள் மற்றும் வேறு விபரங்களை ஆராயாமல் செயற்பாடுகள் குறைவான நிறுவனங்கள் என்று நீதிமன்றத்தினால் எவ்வாறு தீர்மானிக்க முடியும்? சட்டமூலம் தொடர்பில் நீதிமன்றத்திற்கு எம்மால் உதவமுடியாதுள்ளது.

ஏனெனில், இந்த சட்டமூலம் நீதிமன் றத்திற்கு மிகவும் இரகசியமாகவே கொண்டுவரப்பட்டது. பாராளுமன்றம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொண்ட செயற்பாடு குறைவான நிறுவனமாகும். வெறும் முத்திரை குத்தும் நிறுவனமாகவே இருக்கின்றது என்றார். (அ-2)

# கயிறே என் கதை கேள்!

# முருகன் சொல்லும் கண்ணீர்

**13**

எங்களின் உயிர் மீது விதிக்கு அப்படி என்னதான் விருப்பமோ... மீண்டும் மரண மேகம் கவிழ்ந்து விட்டது. கருணை மனுவைக் கணக்கில் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என மத்திய, மாநில அரசுகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் சொல்கின்றனர். எங்களின் உயிர் இந்த அளவுக்கு உதாசீனப்படுத்தப் படும் என நாங்கள் கொஞ்சம் கூட நினைக்கவில்லை. இனி வழக்கம் போல் தேதி குறிக்கப்படும்; தினசரி நரகங்கள் தீர்மானிக்கப்படும். காப்பாற்றப்படுவோமா... கைவிடப்படுவோமா... என உயிரும் உடலும் பட்டிமன்றம் நடத்தி பதறத்தை கிளப்பும், ஆனாலும், அடுத்தகட்ட விசாரணையில் எங்களின் ஆயுள் காப்பாற்றபடும் என இந்தக் கணத்திலும் நம்பி நிற்கிறோம்.

கடந்த முறை போலவே எங்களின் உயிர் காக்க மொத்த தமிழகமும் கைகோர்க்கும் என்கிற நம்பிக்கை இருக்கிறது. எங்களுக்காக தீக்குளித்து மடிந்த எங்கள் தங்கை செங்கொடியை இந்தக் கனத்தில் நினைத்துப் பார்க்கிறேன். "அவர்கள் தவறு செய்ய வில்லை." என்று உறுதியாக நம்பிய அந்த தங்கை தன்னை மாய்த்துக் கொண்ட நிலையில், நாங்கள் மட்டும் உயிர் வாழ்ந்து என்ன சாதித்துவிடப் போகின்றோம்? தங்கையை பின் தொடர்ந்து சாவதில் எங்களுக்கு சந்தோஷம்தான்.

ஆனால் கயிறு எங்களின் கழுத்தை இறுக்கும் முன் என்னுடைய முழுக் குமுறலையும் இறக்கி வைக்க வேண்டும். காங்கிரஸ்காரர்கள் சொல்வதைப்போல் நடந்த படுகொலை மறக்க முடியாதது தான்; மன்னிக்க முடியாதது தான். ஆனால், அந்தச் சம்பவம் ஏன் நடந்தது என்பதைப்பற்றி மனசாட்சியோடு விவாதிக்க ஏன் யாருமே முன்வருவதில்லை? உண்மையாகவே ராஜீவ்காந்தி மீது ஆத்மார்த்தமான அன்பு எந்தக் காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்காவது இருந்திருந்தால், அவர் மரணத்தைத் தன்வீட்டு இழவாக எண்ணித் துடித்திருந்தால் நிச்சயம் எங்களை வேலூர் சிறையில் வந்து சந்தித்திருக்கலாம். "ஏனடா எங்களின் தலைவனைக் கொன் றீர்கள்?" என நெஞ்சு குலுங்க எங்களின் சட்டையைப் பிடித்து உலுக்கி இருக்கலாம். ஆனால், ஒரு காங்கிரஸ் காரருக்குக்

## தனுவுக்கு, தைரியம் வந்தது எப்படி?

கூட எங்களைச் சந்திக்கும் தைரி யம் ஏனைய்யா இல்லாமல் போயிற்று?

இந்தியாவின் இளைய சக்தியாக வளர்ந்து வந்த ராஜீவ்காந்திக்கு யார் எதிரிகள்? எதிர்பை உருவாக்கிக் கொள்ளும் அளவுக்கு அவருக்கு என்ன பகை? செஞ்சிவப்பு முகமும், சிறுபிள்ளைச் சிரிப்புமாக வலம் வந்த அவரைச் சுக்குச்சுக்காகச் சிதறடிக்க சதிகாரர்களுக்கு எப்படி மனம் வந்தது?

"இலங்கையில் நடந்த கொடுமைகளுக்கு ராஜீவ் காந்திதான் காரணம் என்பதால், பெண்கள் குழுவின் மத்தியில் அவரைப் பழிவாங்க வேண்டும் என்ற உணர்வு பலமாக இருந்தது. இதை மூன்றாவது குற்றவாளி முருகன் அவரது ஒப்புதல் வாக்கு மூலத்தில் சொல்லியிருக்கிறார்..." இவை ராஜீவ் காந்தி வழக்கில் நீதிபதி அவர்கள் எழுதியிருக்கும் வார்த்தைகள்.

என்னுடைய ஒப்புதல் வாக்குமூலம் எப்படி எல்லாம் சித்திரிக்கப்பட்டது என்பதை மறுபடியும் சொல்லி, பரிதாபத்தை நீட்டிக்க எனக்கு விருப்பம் இல்லை. ஆனால், எனது வாக்கு மூலமாகப் பதிவு செய்யப்பட்டு இருக்கும் மேற்கண்ட வரிகளை, மறுபடியும் படித்துப்பாருங்கள். ராஜீவ் காந்தி இலங்கைக்கு அனுப்பிய அமைதிப்படை அங்கே போய் அமைதியைத்தானே நிலை நாட்டி இருக்க வேண்டும்?

அசிங்



கங்களையும் அக்கிரமங்களையும் நிறைவேற்றுவதற்குப் பெயர்தான் அமைதிப் படையா? எங்கள் மண்ணில் அவர்கள் நிகழ்த்திய கோரங்கள் கொஞ்ச நஞ்சமா? சிங்களப் படைகளின் குரூரங்களுக்கு நாங்கள் கொஞ்சமும் குறைந்தவர்கள் அல்ல என்பதை அன்றைக்குத் தானே அந்தப்படைகள் நிரூபித்துக் காட்டின. திரும்பிய பக்கம் எல்லாம் ஓலம்.... ஆண்களைக் கண்டால் அடித்துத் துவைப்பதும், பெண்களைக் கண்டால் துரத்திச் சுவைப்பதும் தான் அவர்களின் ஒரே வேலையாக இருந்தது என்பதற்கு எமது மண்ணில் அநேக ஆதாரங்கள் உண்டு!

மரணம் என்கிற கத்தி எங்களின் தலைக்கு மேலாகத் தொங்கியபடி இருக்கிறது. இந்தக் கணத்திலும் அங்கே அமைதிப்படை நிகழ்த்திய கொடூர மரணங்களை எண்ணிப் பார்க்கிறேன். இனம், மொழி பாராமல் குழந்தைகளைக் கூட குருவிகளைப் போல் சுட்டு வீழ்த்திய அமைதிப்படையினர் குரூரத்தை எத்தனை காலம் கடந்தாலும் சகிக்கவோ, மன்னிக்கவோ முடியுமா? உங்கள் குழந்தையின் தலையில் விஷம் வைத்து ஒருவன் நசுக்கிறான்; திமிற முடியாத கட்டுக்குள் நீங்கள் சிதைக்கப்படுகிறீர்கள். உங்களின் வலியை சட்டை செய்ய முடியாத அளவுக்கு குழந்தையை நசுக்கி எறிகிறது ராணுவப்படை. ஒரு சிகரெட்டை காலில் போட்டு அணைப்பது போல் ஈழத்து சிசுக்களின உயிர்கள் அணைக்கப்பட்டன. சிதைக்கப்பட்ட சிசுக்களை அலறலோடு கண்ணுற்ற பெற்ற வயிறுகளில் எத்தனை வைராக்கியம்கூடு கட்டிஇருக்கும்? வாசல் மண்ணை வாரி இறைத்த அவர்கள் இட்ட சாபம் அமைதிப் படையை அனுப்பியவர்களுக்கு கேட்டிருக்ககுமா?

மிகப் பெரிய கொடூரங்களை நிகழ்த்துபவர்களின் பின்னனியில் இருக்கும் ஒரே காரணம் என்ன தெரியுமா? இயலாமை தான்!

எதையும் செய்யத்துணிகிற துணிச்சல், கையறு நிலையில் தான் மனதுக்கு கருவாகிறது. இந்தியாவின் பலம் பொருந்திய தலைவராக உருவெடுத்த ராஜீவ் காந்தியை சுக்கு நூறாகச் சிதைக்க முடியும் என அன்றைய காலகட்டத்தில் யாரும் கற்பனை செய்து பார்த்திருக்கவே முடியுமா? அடுக்கடுக்கான பாதுகாப்புகளை கடந்து அவரைநெருங்கி இருக்க முடி யுமா? எங்கே வருவார்... எங்கே போவார்... என்பதை எல்லாம் உளவுத்துறையே கணிக்க முடியாத நிலையில் மிக கவனமாகத் திட்ட மிட்டு அவரை எப்படித் தீர்த்துக்கட்டினார்கள்?

அரசு ஆவணம் 81ல், "இலங்கையில் இயக்கத்தினர் மீது இந்திய அமைதிப் படையினர் செய்த கொடுமைகளுக்கு ராஜீவ்காந்திதான் காரணம் என்பதினால், அவரைப் பழிவாங்கும் எண்ணம் இயக்கத்தினருக்கு இருந்தது..." என்று நான் சொல்லியதாக எழுதப்பட்டுள்ளது. அதில், இயக்கப் பெண்கள் குழுவைப் பற்றி நான் பேசியதாக இல்லை. மேற்கண்டவாறு எழுதியதன் மூலம் 1991மார்ச் மாதத்திலேயே ராஜீவ் காந்தி கொலை குறித்து எனக்கு தெரிந்த விட்டது என்று மறைமுகப் பொருள்படுகிறது. ஏனென்றால், 1991 மார்ச் மாதம், சிவராசன் என்னிடம் மாலை அணிவிக்க ஒரு பெண் வேண்டும் என்று கேட்டசமயத்தில் தான் எனக்கு மேற்படி தோன்றியதாக எழுதப்பட்டுள்ளது. ஆனால், இந்த இடத்தில் 7.5.91 தேதிக்கு முன் சிவராசன், சுபா, தனு ஆகியோர் தவிர யாருக்கும் சதி குறித்து தெரிந்திருக்கவில்லை என்று நீதிபதிகளே சொல்லியிருக்கிறார்கள். இயக்கத்தினர் மீது பழியை ஏற்படுத்த வேண்டும் என்கிற கட்டாயத்தில் என்னு டையவாக்குமூலம்? என ஏதேதோ கற்பனைக் கதைகளைப் பயன்படுத்திக் கொண்டவர்கள். மிக முக்கிய இடங்களில், வசதியாக அந்த வாக்குமூலத்தை மறந்து விட்டு கதை பரப்புகிறார்கள்.



பக்கம் 140-ல் 1991 மே மாதத்தின் முதல் வாரத்தில் 'இரண்டு பெண்களைக் கூட்டிவந்து இருக்கிறேன். அவர்களைப் பயன்படுத்தி வேலையை முடிக்க ஓர் இந்தியப் பெண் தேவை' என ஏ-3 முருகனிடம் சிவராசன் சொன்னார்..." என எழுத்தப்பட்டள்ளது.

இப்படி ஒரு கருத்துப்பகிர்வில்,1991 மே மாதத்தில் அதுவும் குறிப்பாக... சுபா,தனு 2.5.91 அன்று இங்கு வந்த பின்னர் நடந்ததாக எவ்வித சாட்சியமும் சான்றும் எங்குமே கிடையாது.அரசு ஆவணம் 81ல் "1991மார்ச் மாதத்தில் எதிர்காலத்தில் நல்லுறவினை வளர்க்க ராஜீவ் காந்திக்கு மாலை அணிவிக்க ஒர் இந்தியப்பெண் தேவை என சிவராசன் கேட்டார்..." என்றும், "1991ல் ஏப்பிரல் முதல் வாரத்தில் சுபா, தனு,என்கிற பெண்களை கூட்டிவரப்போவதாகவும்,அவர்களுடன் கூடச் சென்று வேலையை முடிக்க (இலங்கைப் பெண்கள் எனத் தெரியாதிருக்க) ஒரு பெண் தேவைப் பட்டது. அதற்கு நளினியைப் பயன்படுத்துவது எனத்தீர்மானிக்கப்பட்டது..." என்று மட்டுமே எழுதப்பட்டு இருக்கிறது. இந்த இரண்டு பகுதிகளையும் சேர்த்தப் பார்த்தால், அந்த வேலை 'மாலை அணிவிப்பது' என்று வெளிப்படையாக உள்ளது. அதே நேரம், அதில் உள்ள முக்கிய முரண்பாட்டினையும் கவனிக்காமல் இருக்க முடியாது. முதல் பகுதியில், இந்தியப் பெண்ணே நேரடியாக மாலை அணிவிப்பதாக உள்ளது. இரண்டாவது பகுதியில், இரு இலங்கைப் பெண்கள் மாலை அணிவிக்க, அவர்களது அடையாளம் தெரிந்து விடாமல் இருக்க, மறைப்புக் கொடுத்து உதவுவது. முதல் பகுதிக்கு நான் முயற்சி செய்கிறேன் என்று சொன்னதாக உள்ளது. இரண்டாவது பகுதிக்கு நான் உடன்பட்டதாக எங்கும் குறிப்பு இல்லை. "தீர்மானிக்கப்பட்டது" என்று மட்டுமே எழுதி இருக்கிறார்களே தவிர, யாரால் தீர்மானிக்கப்பட்டது என்பதற்கு விளக்கம் இல்லை. மேலும் அரசுத்தரப்பு வாதத்தில் சுபா,தனு,என்ற இரு பெயர்களும் 2.5.91 அன்று தான் முதன் முதலில் சூட்டப்பட்டது என்று இருக்கிறது. ஆனால், 1991 ஏப்ரல் முதல் வாரத்திலேயே சிவராசன் அந்த இரு பெயரால் குறிப்பிட்டு அவர்களைப் பற்றி சொன்னார் என இருக்கிறது இந்த குழறுபடிகளை எல்லாம் நீதிபதிகள் எப்படி ஏற்றுக் கொண்டார்கள்?

இடைச் செருகலாக வழக்கு விபரங்களை சொன்னதன் பின்னணிக்கு ஓர் அர்த்தம் இருக்கிறது. ராஜீவ் காந்தி கொலையின் பின்னணியில் இருப்பது புலியா இல்லை புலிகள் மீதான பழியா? என்பதை எல்லாம் சுட்டிக் காட்டும் நிலையில் நான் இல்லை. ஆனால், உற்ற உறவுகள் ரத்தத்தில் மிதந்ததை கண்ணுற்ற எவர் வேண்டுமானாலும் வெறியோடு அலைந்திருக்க முடியும். எத்தனை விதமான இழப்புகள்... எவ்வளவு துயரங்கள் சிங்களப் படைகளின் குரூரமே தேவலாம் என்கிற அளவுக்கு பலாத்காரங்கள்... கொலைகள்... அதில் பாதிக்கப்பட்ட ஈ எறும்புக்குக் கூட பழிவாங்கும் எண்ணம் உருவாகி இருக்கும். அப்படி இருக்க ரத்தமும் சதையுமாய் மண்ணையும் மரத்தையும் நேசித்த எங்களின் உறவுகள் அமைதிப் படைக்கு எதிராக எப்படித் துடித்து இருப்பார்கள்? அதை ஏவிய ராஜீவ்காந்தி மீது எவ்வளவு ஆத்திரத்தில் இருந்திருப்பார்கள். பழி வாங்கும் வெறியை மடியில் கட்டியபடி அமைதிப் படையை விரட்டத் தங்களின் உயிரையே தீய்த்திருப்பார்கள்?

மடியில் வெடிகுண்டை கட்டிக் கொண்டு வந்த தனுவுக்கு உயிர் வாழும் ஆசை இருந்திருக்காதா? இந்த மண்ணை விட்டு மறையப் போகிறோமே என்கிற தவிப்பு கடைசி கணத்திலும் அவருக்கு ஏற்படாமல் போனது ஏன்? இந்தக் கணத்திலும் ராஜீவ் கொலையை நான் துளியும் நியாயப்படுத்தவில்லை. "கொலைக்கு கொலையே தீர்வு" என்கிற கோட்பாடு மனிதவர்க்கத்திற்கு கூடாது. ஆனாலும் சிலர் சிந்தும் கண்ணீருக்கு காரணமே அவர்கள் பலருக்கும் விதைத்த கண்ணீர் தான் என்பதை ஈழத்துப் பிறப்பெடுத்தவனாக சொல்ல வேண்டியது என் கடமை!

**ஜூனியர் விகடன்**

# மக்கள் நன்மையை கருத்திற் கொண்டே சொத்துக்கள் தேசிய மயப்படுத்தப்படுகின்றன

## அமைச்சர் பசில் விளக்கம்



(கொழும்பு)

மக்கள்நலனைக்கருத்திற்கொண்டே சொத்துக்கள் தேசிய மயப்படுத்தப்படுவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹில்டன் ஹோட்டலுக்கு சொந்தமான கட்டடம் உள்ளிட்ட 37 நிறுவனங்களை அரசாங்கம் தேசிய மயப்படுத்தப்படவுள்ளது. பொதுமக்களுக்கு சொந்தமான இந்த சொத்துக்கள் வினைத் திறனான முறையில் நிர்வாகம் செய்யப்பட்டிருக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிறுவனங்கள் பட்டியல் தயாரிக்கப்படும் போது மிகவும் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார். ஆளும் கட்சி அமைச்சர் மற்றும் திணைக்களம் ஒன்றின் தலைவரது சொத்தும் இவ்வாறு தேசிய மயப்படுத்தப்படவுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் பாரபட்சமின்றி மக்களின் நலனுக்காக இந்தச் சட்டம் அமுல்படுத்தப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். செவனகல சீனி உற்பத்தி நிறுவனம் இலாபமீட்டுகின்றது என்றால் வருமான வரி செலுத்தியிருக்கப்பட வேண்டுமெ‌ன அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் சீனி உற்பத்திக்காகவே செவனகல சீனி உற்பத்தி நிறுவனம் குறித்த நபருக்கு வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். எனினும் அதன் உரிமையாளர் மதுபானத்தை உற்பத்தி செய்ய முயற்சி செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# ஜனநாயகமற்ற அரசாங்கத்தை உருவாக்கும் நடவடிக்கையில் ஜே.வி.பி.க்கும் பங்கு உள்ளது

## முன்னாள் எம்.பி: லால்காந்த காட்டம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஈழக் கோட்பாட்டை தோற்கடிப்பதற்கு ஜே.வி.பி. முக்கிய பங்கு வழங்கியதாக கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்ற முதலாளித்துவ கோட்பாடுகளை பின்பற்றும் கட்சிகளுடன் கூட்டமைப்பு வைத்துக் கொண்டதில் சில நன்மைகளும் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று 2003 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் வைத்துக் கொண்ட கூட்டணி பல தீமைகளையும் ஏற்படுத்தியுள்ளது. சில வெற்றிகளை அடைந்த போதிலும் சர்வாதிகார ஆட்சியை உருவாக்குவதற்கு ஜே.வி.பி. கூட்டணியும் ஓர் காரணி என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஜனநாயகமற்ற ஓர் அரசாங்கத்தை உருவாக்கும் நடவடிக்கையில் ஜே.வி.பி.க்கும் பங்கு இருக்கின்றது என்பதனை மறுப்பதற்கில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் ஜே.வி.பி. கட்சி இந்த ஆட்சியை தோற்கடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என அவர் தெரி. வித்துள்ளார்.

தற்போதைய ஆட்சியை தோற்கடித்து மக்கள் நட்பான ஓர் அரசாங்கத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜே.வி.பி. தொடர்ந்து சுயதீன இடதுசாரி கட்சியாகவே இயங்கும் என அவர் தெரிவித்துள்ளார். கட்சியின் அடிப்படைக் கொள்கைகளும் கோட்பாடுகளும் மாறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நகரை அண்மித்த சிறைச்சாலைகளை கிராமப்புறங்களில் அமைக்கத்திட்டம்

## சிறைச்சாலைகள் மறுசீரமைச்சு

(கொழும்பு)

வர்த்தக பெறுமதியுடைய நகரை அண்மித்த காணிகளில் அமைந்துள்ள சிறைச்சாலைகளை மீண்டும் கிராமப் பகுதிகளில் நிறுவுவதற்கான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் ஆரம்பகட்ட திட்டமிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன் பிரகாரம் வெலிக்கடை சிறைச்சாலையை இரண்டு பிரிவுகளாக்கி மஹர மற்றும் வட்டரெக்க ஆகிய பகுதிகளுக்கு மாற்றுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

காலி மற்றும் மாத்தறை நகரங்களில் அமைந்துள்ள சிறைச்சாலைகளையும் வேறு கிராமப்புறங்களில் நிறுவுவதற்கு அமைச்சு திட்டமிட்டுள்ளது.

சிறைக் கைதிகளுக்கு புனர்வாழ்வளித்து மீள சமூக மயப்படுத்தும் செயற்பாடுகளுக்கு நகர சிறைச்சாலைகளில் போதிய வசதிகள் காணப்படவில்லை என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதுதவிர சிறைச்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணிகள் அதிக வர்த்தக பெறுமதியைக் கொண்டிருத்தல் மற்றும் கைதிகளுக்கு போதிய இடவசதிகள் இல்லாமை போன்ற விடயங்களே இந்த திட்டத்தை முன்னெடுப்பதற்கான பிரதான காரணிகளாகும். (அ-2)

# 2011.11 11 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1500-பிரான்சின் பன்னிரண்டாம் லூயி மன்னனுக்கும் அராகனின் இரண்டாம் பேர்டினண்ட் மன்னனுக்கும் இடையில் நேபில்ஸ் பேரரசைத் தமக்கிடையே பிரிக்க உடன்பாடு எட்டப்பட்டது.

★ 1673-உக்ரேனின் கோட்டின் என்ற இடத்தில் போலந்து- லித்துவேனியப் படைகள் ஒட்டோமான் இராணுவத்தைத் தோற்கடித்தன.

★ 1675-குரு கோவிந்த் சிங் சீக்கியர்களின் 10 ஆவது குருவானார்.

★ 1675-லெய்ப்னிட்ஸ் (Gottfried Leibniz) என்பவர் (y=f(x) என்ற செயலி ஒன்றின் வரைபின் பரப்பைக் காணுவதற்கு முதன் முறையாக தொகையீட்டு நுண்கணிதத்தைப் பாவித்தார்.

★ 1778-மத்திய நியூயோர்க்கில் செனெக்கா இந்தியர்கள் 40 பேரைக் கொன்றனர்.

★ 1831-அடிமைப் புரட்சியில் ஈடுபட்டமைக்காக கைது செய்யப்பட்ட நாட்டர்னர் வேர்ஜீனியாவில் தூக்கிலிடப்பட்டான்.

★ 1865-டீஸ்ட்டா ஆற்றின் கிழக்குப் பகுதிகளை பூட்டான் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்குக் கொடுத்தது.

★ 1880-அவுஸ்திரேலியாவின் புஸ் ராஸ்கர் நெட் கெல்லி மெல்பேர்னில் தூக்கிலிடப்பட்டான்.

★ 1887-ஐக்கிய அமெரிக்காவின் சிக்காகோ நகரில் தொழிலாளர் தலைவர்கள் ஆகஸ்ட் ஸ்பைஸ், ஆல்பேர்ட் பார்சன்ஸ், அடொல் ஃபிஷர், ஜோர்ஜ் ஏங்கல் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.

★ 1889-வோஷிங்டன் ஐக்கிய அமெரிக்காவின் 42 ஆவது மாநிலமாக இணைக்கப்பட்டது.

★ 1909-ஹவாயில் பேர்ள் துறைமுகத்தில் அமெரிக்கக் கடற்படைத் தளம் அமைக்கப்பட்டது.

★ 1918-பிரான்சில் கொம்பியேன் காடு என்ற இடத்தில் தொடருந்துப் பெட்டி ஒன்றில் ஜேர்மனிக்கும் கூட்டுப் படைகளுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. முதலாம் உலகப் போர் 11 மணிக்கு முடிவுக்கு வந்தது.

★ 1918-ஜோசப் பித்சூத்ஸ்கி வார்சாவுக்குத் திரும்பி போலந்தின் உயர் இராணுவப் பதவியைப் பெற்றான். போலந்து விடுதலை பெற்றது.

★ 1919-இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டது.

★ 1930-அல்பேர்ட் ஐன்ஸ்டைன், லியோ சிலார்ட் குளிர்சாதனப் பெட்டிக்கான காப்புரிமத்தைப் பெற்றனர்.

★ 1933-யாழ். பொதுநூல் நிலையம் அமைக்கப்பட்டது.

★ 1940-ஐக்கிய அமெரிக்காவின் மிட்வெஸ்ட் நகரில் எதிர்பாராத சூறாவளியினால் 144 பேர் உயிரிழந்தனர்.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனி, பிரான்ஸ் மீதான தனது முற்றுகையை முடித்தது.

★ 1960-தெற்கு வியட்நாம் ஜனாதிபதி நியோடின் டியெம் மீதான இராணுவப் புரட்சி தோல்வியில் முடிந்தது.

★ 1965-ரொடீசியாவில் இயன் ஸ்மித் தலைமையிலான வெள்ளை இன சிறுபான்மை அரசு விடுதலையை அறிவித்தது.

★ 1966-நாசா ஜெமினி 12 கப்பலை விண்ணுக்கு அனுப்பியது.

★ 1968-மாலைதீவுகளில் இரண்டாவது குடியரசு அறிவிக்கப்பட்டது.

★ 1975-அவுஸ்திரேலியப் பிரதமர் கஃப் விட்லம் தலைமையிலான அரசை அதன் ஆளுநர் கலைத்தார்.

★ 1992-இங்கிலாந்து திருச்சபை பெண்களையும் சமய குருக்களாக சேர்ப்பதற்கு முடிவெடுத்தது.

★ 2004-யாசர் அரபாத் உயிரிழந்துவிட்டதாக பாலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவித்தது. மஹ்மூத் அப்பாஸ் தலைவரானார்.

### பிறப்புக்கள்

★ 1898-கி.ஆ.பெ. விசுவநாதம், தமிழறிஞர் (இ.1994)

★ 1821-பியோதர் தஸ்தயெவ்ஸ்கி, ரஷ்ய எழுத்தாளர் (இ.1881)

★ 1937-ப.ஆப்டீன் ஈழத்து எழுத்தாளர்

★ 1945-டானியல் ஒர்ட்டேகா நிக்கராகுவாவின் குடியரசுத் தலைவர்

★ 1974-லியோனார்டோ டிகாப்ரியோ அமெரிக்கத் திரைப்பட நடிகர்

### இறப்பு

★ 2005-பீட்டர் டிரக்கர், ஆஸ்திரிய மேலாண்மை அறிவியலாளர் (பி.1909)



★ 2004-பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரும் நோபல் பரிசு பெற்றவருமான யசிர் அரபாத் நினைவு தினம்(பி.1929)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்-2012

**கீழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ். பல்கலைக்கழகத்துடன் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள்/ ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 2011 நவம்பர் 30 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.**

### வழங்கல்கள்

1. எழுது பொருட்கள்.
2. புத்தகங்கள், பருவ வெளியீடுகள் ஏனைய வெளியீடுகள்.
3. அலுவலக தளபாடம்-மரம் ,ஸ்ரீல்
4. உருக்கு அலுவலக இயந்திரங்கள் (துட்டச்சு இயந்திரங்கள். கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள், தொலைநகல் கருவிகள் முதலியன)
5. சகல வகையான கட்டட நிர்மாணப் பொருட்கள்.
6. பெயின்டுகள், வாணிஸ்
7. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்.
8. மின்சார சாதனமும் உதிரிப்பாகங்களும்
9. வெட்டும் கருவிகள் மட்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்.
10. ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள்.
11. ஆய்வு கூடச் சாதனங்கள்.
12. ஆய்வுகூட இரசாயனப் பொருட்களும் கண்ணாடிச் சாதனங்களும்.
13. மரங்கள்-தீராந்தி, பனைமரம், சலாகைகள்.
14. கட்டடப் பொருட்கள் (மணல், செங்கல், உலோகம், சுண்ணாம்பு முதலியன).
15. தும்புத்தடி , விளக்குமாறு, கால்துடைப்பங்கள், ஹாப்பிக், விம் முதலியன.
16. டயர், ரியூப்கள், பற்றரிகள்.
17. மோட்டார் உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள்.
18. ஆயுர்வேத மருந்துகள், மருந்துகளும் மருத்துவ வழங்கல்களும்.
19. விளையாட்டு மற்றும் நலன்புரி பொருட்கள்
20. தீயணைப்பு சாதனங்களும், பாதுகாப்பு சாதனங்களும்.
21. மழைகோட்டுக்கள், சேற்றுச் சப்பாத்துக்கள் , குடைகள், சப்பாத்துக்கள் முதலியன.
22. பைப்புகள், பைப் இணைப்புக்கள்
23. பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் உற்பத்திகள்.
24. அலுமினியம் பொருத்துக்கள், மட்பாண்டப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், கண்ணாடிகள்.
25. தோட்ட வேல்லைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள் கருவிகள்.
26. கணனி உட்பட எலக்ரோனிக் பொருட்கள்.
27. கணனி மேசை, கதிரைகள்.

### சேவைகள்

1. அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்.
2. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள்(துட்டச்சு இயந்திரங்கள், புகைப்பட பிரதி பண்ணும் இயந்திரங்கள், பக்ஸ், கொம்பியூட்டர், மின் தட்டச்சு இயந்திரங்கள்) திருத்த வேலைகள்
3. குளிர்சாதனப் பெட்டிகள், எயார் கொண்டிசனர்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புகளும்.
4. ஸ்ரீல் மரத் தளபாட திருத்த வேலைகள்
5. கதிரைகள் பின்னுதல்
6. உடைகள், கதவு ,ஜன்னல் , திரைச்சீலைகள் தைத்தல்
7. பெயர்ப்பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள் செய்தலும்.
8. உடைகளைச் சலவை செய்தல்.
9. புத்தகங்களையம் பருவ வெளியீடுகளையும் பைண்டிங் செய்தல்.
10. மோட்டார் வாகனம் திருத்துதல்
11. கணனி திருத்த வேலை.

### எந்திரவியல் சேவைகள்

1. மின்மோட்டார், நீரிறைக்கும் இயந்திங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள், களிரூட்டி என்பன திருத்துதல் மீள முறுக்குதல் உட்பட.
2. குடிசார் எந்திரவியல்,வேலைகள் கட்டடங்கள் நிர்மாணித்தலும் திருத்த வேலைகளும்.
3. மின்சார வயறிங் வேலைகள்
4. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் மற்றும் திருத்த வேலைகள்.
5. இரும்பு, அலுமினியம் என்பவற்றாலான கட்டடம் சார்ந்த பொருத்துக்கள் செய்தலும் பொருத்தலும்.
6. கட்டடங்கள்/ கட்டட சேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய (இயந்திர சாதனங்களுக்கான) உசாத்துணை சேவைகள்.
7. நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்கல்/ பொருத்தல்/ தச்சு வேலை.
8. எந்திரவியல் சார் வரைதலும் நீலப் பிரதி செய்தலும்.
9. கறையான் / பீடைகள் ஒழிப்பு வேலைகள்
10. தொழிலாளர் வழங்கல் (திறன் சார் திறன் சாரா மற்றும் காவலாளிகள்).

### பதிவு தொடர்பான நிபந்தனைகள்.

1. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கல்கள் சேவைகள் 2012 எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

✷ **பதிவுகளுக்கான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என முகவரியிடல் வேண்டும்.**

2. ஒவ்வொரு வழங்கல்/ சேவைகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணீப்பப்படிவத்துடன் பதிவுக்கட்டணமாக ரூபா 500/ பெறுமதியான காசுக்கட்டளை நிதியாளர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் எனும் பெயரிற்கு பெறப்பட்டு யாழ். தபாற்கந்தோரில் மாற்றக்கூடியதாக இணைத்து அனுப்புதல் வேண்டும்.

3. விலைமனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழக்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்து விலைமனுக்களை கோர பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு.

4. கோரப்படும் போது விலைமனுக்களை சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்கள்/ சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள்/ சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

5. ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   1. விண்ணப்பிக்கும் வழங்கும் / சேவை
   2. முயற்சியாண்மை நிறுவனத்தின் பெயரும் விலாசமும்
   3. தொலைபேசி, தொலைநகல் இலக்கம், மின்னஞ்சல் முகவரி

# சுவீகரிப்பு சட்ட மூலத்திற்கு எதிரான வழக்கு விசாரணையில் கலந்துகொள்ள நீதிபதி மறுப்பு

(கொழும்பு)

செயற்பாடு குறைவாகவுள்ள தொழில் முயற்சிகளுக்கும் குறைவாக பயன்படுத்தப் படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் சட்டமூலத்திற்கு எதிரான மனு தொடர்பாக பிரதம நீதியரசரின் ஆதரவை உயர் நீதி மன்றம் நேற்று முன்தினம் நாடியுள்ளது.

இம்மனு மீதான வழக்கு நேற்று முன்தினம் நீதிபதிகள் பி.ஏ.ரத்னாயக்க,ஆர்.கே. எஸ். சுரேஸ் சந்திரா, பிரியசத் தீப்த் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி பி.ஏ. ரத்னாயக்க நேற்று முன்தினம் விசாரணையில் பங்குபற்ற மறுத்தார். இச்சட்டமூலத்தின் சட்டபூர்வத்தன்மை தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் ஆராய்ந்த குழுவில் தானும் அங்கம் வகித்தால் இவ் விசாரணையில் பங்குபற்ற அவர் மறுத்தார்.

மனுதாரர்கள் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் றொமேஷ்டி சில்வா இச்சட்டம் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகவும் அரசியலமைப்பில் மக்களுக்கு உறுதிப்படுத்தப் பட்டுள்ள இறையாண்மை தொடர்பாக கேள்வியை எழச் செய்வதாகவும் குறிப்பிட்டார்.

நுகேகொட நாலந்தாராமயவின் பிரதம விகாராதிபதியும் சென்னையிலுள்ள இலங்கை மகாபோதி சமூகத்தின் பிரதம விகாராதிபதியுமான வண தினியவெல பாலித தேரோ் இம் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

நிதியமைச்சின் செயலாளரும் திறைசேரியின் செயலாளருமான பி.பீ. ஜயசுந்தர, அமைச்சரவை அமைச்சர்கள், சட்டமா அதிபர் ஆகியோர் இவ்வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

(அ-2)

# சுவீகரிப்பு சட்டமூலத்தினால் ஆபத்துக்கள் எவையும் ஏற்படாது

## அமைச்சர் பசில் தெரிவிப்பு



அரசாங்கம் நினைத்திருந்தால் ஒரே ஒரு சுற்றிக்கையின் மூலம் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை சுவீகரிக்க முடியும். எனினும் அவ்வாறு இங்கு இடம்பெறவில்லை. மிகவும் நேர்மையான முறையில் பாராளுமன்றத்தினூடாகவே இது இடம்பெறுகின்றது. எனினும் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை சுவீகரிப்பதற்கான சட்டமூலம் தனியார் நிறுவங்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தாது என்று அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற உத்தேச பறிமுதல் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் இங்கு மேலும் கூறுகையில், பாராளுமன்றத்துக்கு அவசர சட்டமூலங்கள் கொண்டுவரப்படுவது இதுவே முதற் தடவை அல்ல. முன்னாள் பிரதமர் அமரர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்திலிருந்து பல்வேறு அவசர சட்டமூலங்கள் இந்த சபைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. அவை அமைச்சரவை தீர்மானத்துடன் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இதனடிப்படையில் காணிகள், கட்டடங்கள் சுவீகரிக்கப்பட்டன.

எனினும் தற்போது கொண்டுவரப்பட்டுள்ள சட்டமூலத்தினால் தனியார் சொத்துக்களுக்கு எந்தவிதமான ஆபத்துக்களும் நேரப் போவதில்லை. மாறாக நட்டத்தில் இய்ங்குகின்றது.

அரசுக்கு சொந்தமானதும் அதேநேரம் பொதுமக்களுக்கு உரிமையாக வுள்ளதுமான சொத்துக்களே இச்சட்ட மூலத் தின் மூலம் சுவீகரிப்பு செய்யப்படும்.

நட்டத்தில் இயங்குகின்ற தனியார் நிறுவனங்களை அல்லது பாவனைக்குட்படுத்தப்படாத சொத்துக்களை சுவீகரிப்பதற்கு அரசாங்கத்தின் சார்பில் ஓர் அறிவிப்போ இல்லாவிட்டால் சுற்றுநிரூபமோ போதுமானது. எனினும் அரசாங்கம் அவ்வாறு செயற்படவில்லை. இவ்விவகாரம் தொடர்பில் அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதனை உயர்நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்து பின்னர் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து விவாதம் நடத்தியே இச்சட்டமூலத்தை நிறை வேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

மக்களின் நன்மை கருதியே இவ்வாறான நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கின்றது.

(அ-2)

4. வியாபாரப் பதிவின் இலக்கமும் திகதியும் (வியாபாரப் பதிவுப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
5. வியாபாரத்தின் தன்மை.
6. வங்கியாளர்களின் பெயர்.
7. கிடைக்கக்கூடிய கடன் வசதிகள்.
8. ICTAD பதிவு இலக்கம்/ புத்தக இலக்கம். (எந்திரவியல் சேவை 2 இற்கு மட்டும்) ICTAD பதிவு இல்லாது விடின் ரூபா 200,000/- க்கு உட்பட்ட வேலைகளுக்கு கூறுவிலை சமர்ப்பிக்க மட்டுமே தகுதியுடையவராவர்.

குறிப்பு:-

**வியாபார பதிவுப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படாதவிடத்து பதிவு விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.**

6. விண்ணப்பதாரர் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் வேலைகளை செய்ய ஆர்வமாய் இருந்தால் அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். அத்துடன் அம்மாவட்டத்திலுள்ள தமது கிளை/ பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்திற்குரிய வியாபாரப் பதிவு அத்தாட் சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

7. விண்ணப்பதாரரின் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக்கலைஞர் ஆகியோரின் பெயர், அனுபவங்களை (எந்திரவியல் சேவைகள், இலக்கம் 6 இற்கு மட்டும் )தருக.

8. சேவைகளை / வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு :- சிரேஷ்ட உதவி நிதியாளர்(வழங்கல்) உடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே. இல 0213205875

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(ச-4935)

# இந்திய -பாகிஸ்தான் பிரதமர்கள் சந்திப்பு

## இரு நாடுகளும் பரஸ்பர பேச்சுவார்த்தை



(மாலி)

தெற்காசிய நாடுகள் சார்க் கூட்டமைப்பின் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக மாலைதீவு சென்றுள்ள பிரதமர் மன்மோகன்சிங் நேற்று பாகிஸ்தான் பிரதமரை சந்தித்து பேசினார்.

இதில் இருநாட்டு உறவுகள் மற்றும் குற்ற வழக்கு தொடர்பான விடயத்தில் பரிமாற்றம் என பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப் பட்டன.

பேச்சுவார்த்தைக்கு பின் செய்தியாளர் களை சந்தித்த பிரதமர் மன்மோகன் சிங் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ராசா கிலானியுடன் நடத்திய பேச்சுவார்தகை ஆக்கபூர்வ மாக இருந்ததாக தெரிவித் துள்ளார்.

மேலும், கிலானியை சமா தானத் தூதராகவே தான் கருதுவதாக கூறிய மன் மோகன் இருநாட்டுக்கும் இடையே விரைவில் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி நிருபர்களிடம் கருத்து தெரி விக்கையில்,

இந்த சந்திப்பு மிக பயனுள்ளதாக இருந் தது. இத்துடன் நல்ல முன்னேற்றத்திற்கான அறிகுறி தென்பட்டுள்ளது. ஐ.நா பாதுகாப்பு குழுவில் பாகிஸ்தான் இடம்பெற இந்தியா உதவியமைக்கு நன்றி தெரிவித்து கொண் டேன் என்றார்.

(அ-2)

# திகார் சிறையில் தியானத்தில் ஈடுபட்டு வரும் கனிமொழி



2ஜி ஊழல் விவகாரத்தில் சிறப்பு நீதி மன்றத்தால் பிணை மறுக்கப்பட்டு திகார் சிறையில் இருக்கும் தி.மு.க. எம்.பி கனிமொழி சிறையில் தியானம் குறித்த பாடங்களை நுணுக்கமாகக் கற்று வருகிறாராம்.

கடந்த 3 ஆம் திகதி கனிமொழிக்கு சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றம் பிணைவழங்க மறுத்தது. அப்போது பல்வேறு எதிர்ப்புக்களோடு நீதி மன்ற வளாகத்தில் காத்திருந்தார். கனிமொழி யின் தாயார் ராஜாத்தி அம்மாள். அவரிடம் கனிமொழி கண்ணீர் மல்க அழுதார். கனி மொழியின் நிலையை எண்ணி ராசாத்தி அம்மாளும் தேம்பித் தேம்பி அழுதார்.

இந்நிலையில், கனிமொழி தற்போது தனது தியானப் பாடங்களின் ஒரு பகுதியாக ஆத்ம சாதகம், ஆன்மீக சிந்தனை, தியானம் போன்றவற்றில் ஈடுபட்டு வருவதாக சிறை அதிகாரிகள் கூறினர்.

சிறை வளாகத்துக்குள் அனுமதிக்கப்பட் டிருக்கும் மிகப் பெரும் அரசுசாரா தொண்டு நிறுவனமான திவ்யஜோதி ஜாக்ருதி சன்ஸ் தான் அமைப்பின் தியானப் பாடங்களை மிகவும் ஆர்வுமாகக் கற்று வருகிறார்.

வழக்கமாக சிறையில் உள்ள குற்றவாளி களுக்காக புத்தாக்கப் பயிற்சிகள் வாழ்வின் மீட்சிக்காக வழங்கப்படும். ஒழுக்க நெறிப் பாடங்கள் ஆகியவற்றை இந்த அமைப்பு கற்றுத் தருகிறது. கனிமொழி இதில் மிகவும் ஆர்வமாகக் கலந்துகொண்டு தியானத்தில் ஈடுபடுகிறார் என்று சிறைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(அ-2)

# பாரதச் செய்திகள்

# 2020 ஆம் ஆண்டிற்குள் அதிவேக ஏவுகணையை இந்தியா தயாரிக்கும்

## அப்துல்கலாம் நம்பிக்கை

(பெங்களூர்)

2016 தொடக்கம் 2020 ஆம் ஆண்டுக ளுக்குள் எதிர்கால போர்களில் பயன்படுத்து வதற்கு ஏற்ற அதிவேக மறுபயன் ஏவுகணை களை இந்தியா தயாரிக்கும் என்று அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

இந்திய அறிவியல் கழகம் மற்றும் பிரேம் மொஸ் ஏரொஸ்பேஸ் இணைந்து சென்டர் ஒப் எக்சலென்ஸ் இன் ஹைஸ்பீட் ஏரோ டைனமிக்ஸ் ஆய்வு மையத்தை பெங்க ளூரில் அமைத்துள்ளது.

இம்மையத்தை முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் திறந்து வைத்தார். பின்பு கூட்டத்தில் அவர் கூறியதாவது, பிரம்மோஸ் மேக்-2 ஏவுகணையைத் தயாரிக்க இப்போது ரூபா 200 கோடி செலவாகிறது. இது போன்ற ஏவுகணைகளைத் தயாரிக்க கோடிக்கணக் கில் நாம் தொடர்ந்து செலவழிக்கக் கூடாது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆய்வு மையம் மேக்-8 அல்லது மேக்-10 மறுபயன் ஏவுகணைகளைத் தயாரிக்க இலக்கு நிர் ணயிக்க வேண்டும்.

2016 -2020 ஆம் ஆண்டுகளுக்குள் எதிர்கால போர்களில் பயன்படுத்துவதற்கு ஏற்ற ஏவுகணைகளை இந்தியா தயாரிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது என்று கலாம் கூறினார்.

(அ-2)

# சீன நிறுவனங்கள் எனது மாநிலத்தில் அதிகளவில் முதலீடு செய்ய வேண்டும்

## நரேந்திரமோடி கோரிக்கை

(பீஜிங்)

சீனாவில் நல்லெண்ணப் பயணம் மேற் கொண்டுள்ள குஜராத் முதல்வர் நரேந்திர மோடி தனது மா்நிலத்தில் அதிகளவில் சீன நிறுவனங்கள் முதலீடு செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

அதோடு சீன மொழி கற்பிக்கும் பாட சாலை ஒன்றையும் குஜராத்தில் ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

குஜராத் முதல்வர் நரேந்திமோடி சீனா வுக்கு நல்லெண்ண சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ளார். தலைநகர் பீஜிங்கில் குஜ ராத் மாநிலத்தில் முதலீட்டு வாய்ப்புகள் என்ற தலைப்பிலான கருத்தரங்கும் ஒன்று இந்தியத் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் 80 சீன நிறுவனங்கள் கலந்து கொண்டன. இதில் மோடி பேசியதாவது, சீன மக்களின் கடின உழைப்பு உற்சாகமான, நேர்த்தியான அவர்களின் இயல்புகள் எல்லா வற்றிற்கும் மேலாக அவர்களின் வரலாற் றுணர்வு ஆகியவற்றைக் கண்டு நான் ஆச் சரியம் அடைந்தேன்.

இருதரப்பிலான பண்பாட்டு உறவு மிக உறுதியானது, ஆழமானது. குஜராத்தில் செய லாற்ற சீன நிறுவனங்களிடையே விருப்பம் அதிகரித்துள்ளது. நாங்கள் அவர்களை இதயபூர்வமாக வரவேற்கிறோம். எனது இந்தப் பயணம் அதை மேலும் உறுதிப்ப டுத்தவே அமைந்துள்ளது. பொருளாதார உறவைப் பலப்படுத்த பண்பாட்டு பரிமாற்றம் அவசியம். அவ்வகையில் குஜராத்தில் மாண்ட ரின் மொழி கற்பிக்கும் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்க நான் விரும்புகிறேன். குஜராத் தில் புத்த மதத்தோடு தொடர்புடைய பல இடங்கள். உள்ளன. அவற்றின் மூலமும் பண்பாட்டுப் பரிமாற்றத்தை நிகழ்த்த முடியம் என அவர் தெரிவித்தார்.

(அ-2)

# வெற்றுப் பேச்சுக்கள் மூலம் ஊழலை ஒழித்துவிட முடியாது

## ஹசாரே குழு மீது சோனியா பாய்ச்சல்



(புதுடில்லி)

வெற்றுப் பேச்சுக்கள் அல்லது பிறரைச் சுட்டிக்காட்டுவது போன்ற நடவடிக்கைகள் மூலம் ஊழலை ஒழித்துவிட முடியாது என்று காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி குறிப் பிட்டுள்ளார்.

வலுவான லோக்பால் கோரி வரும் அன்னா ஹசாரே குழு தங்களிடம் உள்ள குறைகளை முதலில் களையட்டும் என்று அவர் கடுமையாக விமர்சித்துள்ளார். பேரவை தேர்தல் நடைபெறவுள்ள உத்தரகாண்டில் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக்கூட்டத்தில் காங்கி ரஸ் தலைவர் சோனியாகாந்தி கலந்து கொண்டு பேசுவதாக இருந்தது.


அதில் எல்லோரும் முதலில் தங்களைத் தாங்களே சரியாக பார்த்துக்கொள்ள வேண் டும். தங்களைப் புனிதமானவர்கள் என்று கூறிக்கொண்டு ஊழலை ஒழிக்கிறேன் என்று முழங்குவதால் ஊழலை ஒழித்திட முடியாது. இதுதான் இப்போது நடந்துகொண்டிருக் கிறது என்று அன்னாஹசாரே குழுவை சோனியா தாக்கினார்.

அன்னாஹசாரே குழுவைச் சேர்ந்த சிலர் அண்மைக்காலமாக அடுத்தடுத்து நிதி முறை கேடு விவகாரத்தில் சிக்கியதை அவர் இப்படி கூறினார்.

நமது பிரதமரும் நமது கட்சியினரும் மீண்டும் மீண்டும் சொல்வது போல நாம் வலுவான லோக்பால் மசோதாவை நிறை வேற்ற உறுதி பூண்டுள்ளோம் என்பது அனை வருக்கும் தெரியும். அந்த மசோதா நாடா ளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிறை வேற்றப்படும் .பின் இந்த அழுகையும் கூப் பாடும் எதற்காக என்று அவர் கேள்வி எழுப் பினார்.

மேலும் இப்போதெல்லாம் ஊழலை பற்றி நிறைய பேச்சு நிலவுகிறது. நம் சமூகத்துக்கு ஊழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதில் ஐயமில்லை. அந்தச் சூழலை மாற்ற வேண் டும். வெறுமனே பேசிக்கொண்டிருப்பதாலோ அல்லது பிறரை விரல் நீட்டிக் சுட்டிக்காட் டுவதாலோ ஊழலை ஒழித்துவிட முடியாது ஒவ்வொருவரும் தன்னைத் தானே சரிபார்க்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டி ருந்தது.

(அ-2)



17 ஆவது சார்க் அமைப்பின் உச்சிமாநாடு மாலைதீவு நாட்டின் அட்டு நகரில் ஆரம்பமாகியுள்ளது. இதில் கலந்துகொள்ளச் சென்ற இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கை அந்நாட்டு ஜனாதிபதி முகமது நசீத் வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# விண்டோஸ்-7 புதிய வசதிகள்

நீங்கள் விண்டோஸ் எக்ஸ்பியிலிருந்து விண்டோஸ் 7 சிஸ்டத்திற்கு மாறியுள்ளீர்களா! இந்தப் புதிய சிஸ்டத்தில் கிடைக்கும் சில ட்ரிக்ஸ்களை அறியாமல் இருப்பீர்கள். தெரிந்தாலும் அவற்றை எப்படி இயக்குவது எனத் தெரியாமல் இருப்பீர்கள். இங்கு சிலவற்றைப் பார்க்கலாம்.

### ஐகன் மறைத்து பைல்களைப் பார்க்க

டெஸ்க்டொப்பில் ஐகன்களை நீங்கள் அறிவீர்கள். விண்டோஸ் இயக்கத்தின் எந்தப் பதிப்பினை விண்டோஸ் 7 உட்பட இன்ஸ்டோல் செய்தாலும் உடனே டெஸ்க்டொப்பில் ஐகன்கள் காட்சி அளிக்கும். விண்டோஸ் 7 இயக்கத்தில் இந்த ஐகன்களை மறைக்கவும் விருப்பப்படும் போது காட்டவும் ஏற்பாடு செய்திடலாம்.

இந்த ஐகன்களை மறைத்து வைப்பதன் மூலம் விண்டோஸ் வேகமாக அதன் இயக்கத்திற்கு வருகின்றது. மேலும் மற்றவர்களும் நம் கணனி இயக்கத்தைப் பயன்படுத்தும் சூழ்நிலையில் அல்லது பார்க்கும் சூழ்நிலையில் இவற்றை மறைப்பது நமக்கு ஒரு பிரச்சினையைக் கொடுக்கும். எனவே, இவற்றை எப்படி மறைப்பது எனப் பார்க்கலாமா!

### டெஸ்க்டொப் ஐகன்களை மறைக்க

டெஸ்க்டொப்பில் காலியாக உள்ள இடத்தில் ரைட் கிளிக் செய்திடவும். கிடைக்கும் context மெனுவில் View என்பதன் மீது கிளிக் செய்திடவும். அடுத்து மெனுவில் இப்போது ஐகன்கள் காட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதற்கான Show desktop Icon முன்னால் உள்ள செக் மார்க்கினைத் தேர்ந்தெடுத்து நீக்கவும். இதில் OK என்பதில் கிளிக் செய்து புதிய மாற்றங்களை அமுல்படுத்தவும். இதனை மேற்கொண்டவுடன் டெஸ்க்டொப் திரையிலிருந்து டெஸ்க்டொப் ஐகன்கள் மறைந்து விடும்.

### இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 8 இயங்குவதைத் தடுக்க

வெகுகாலமாய் நாம் பயன்படுத்தி வரும் பிரவுசர் அப்ளிகேஷன் இன்டர்நெட் எக்ஸ்புளோரர், மைக்ரோசொப்ட் விண்டோஸ் இயக்கத்துடன் இணைந்தே இது தரப்படுகின்றது. அதனாலேயே அதற்கு முன் இந்த பிரிவில் முதல் இடத்தில் இருந்த நெட்ஸ்கேப் கொம்யூனிகேட்டர் என்னும் பிரவுசரைக் காலி செய்தது. ஆனால் இப்போது நாம் விரும்பும் வகையில் பயர்பொக்ஸ், கூகுள் குரோம், சபாரி எனப் பல பிரவுசர்கள் நமக்குக் கிடைக்கின்றன.

ஆனால், நாம் விண்டோஸ் சிஸ்டம் பதிகையில் நாம் கேட்காமலேயே இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பிரவுசரும் நமக்கு இன்ஸ்டோல் செய்யப்படுகின்றது. வேறு பிரவுசரை நாம் பயன்படுத்தினாலும் இதுவும் இயக்கத்தில் இருக்கின்றது. இதனை இயங்காமல் நிறுத்தி வைக்கும் வழியினை இங்கு பார்க்கலாம்.

விண்டோஸ் 7 சிஸ்டத்தில் இதனை எப்படி மேற்கொள்ளலாம் என்று பார்க்கலாம். கீழ்க் காணும் செட்டிங்ஸ் வழிகளைப் பின்பற்றி இதனை மேற்கொள்ளலாம்.



Start மெனு திறந்து All Programs என்ற பிரிவில் இருந்து Control Panel தேர்ந்தெடுக்கவும். இங்கு தரப்பட்டுள்ள View By என்ற கீழ்விரி மெனுவில் கிளிக் செய்திடவும். இதில் category என்பதற்குப் பதிலாக சிறிய அல்லது பெரிய ஐகன் (small or large icons) என்பதில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

இப்போது கொண்ட்ரோல் பனலில் இருந்து Programs and Features என்ற ஒப்ஷனைத் தேர்ந்தெடுக்கவும். இந்த விண்டோவில் இடது பக்கம் உள்ளவற்றில் Turn Windows Features on or off என்பதனைத் தேர்ந்தெடுக்கவும்.

இனி Windows Features திரை காட்டப்படும். இதில் நாம் இயக்கத்தில் வைக்கவும், மூடவும் என்ற ஒப்ஷனோடு பல வசதிகள் (features) காட்டப்படும். விண்டோஸ் 7 சிஸ்டத்தில் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 8ஐ இயங்கவிடாமல் செய்திட Internet Expolorer 8 என்பதன் முன்னால் உள்ள பொக்ஸில் டிக் அடையாளத்தை எடுத்துவிடவும். இதன் பின்னர் OK கிளிக் செய்திடவும்.

நீங்கள் மேற்கொள்ளும் இந்த ஏற்பாடு ஏனைய சில இயக்கத்தையும் பாதிக்கும் என்ற எச்சரிக்கை செய்தியுடன் விண்டோ ஒன்று காட்டப்படும். தொடர்வதற்கு OK என்பதில் கிளிக் செய்திடவும்.

உடன் இந்த செயற்பாடு மேற்கொள்ளப்படும். அதற்கான செயல்கட்டம் (Progress bar) ஒன்று நீளமாகக் காட்டப்படும். இந்த செயற்பாடு முடிந்தவுடன் Restart Now என்னும் பட்டனில் கிளிக் செய்தால் உடன் விண்டோஸ் ரீஸ்டார்ட் செய்யப்படும். ரீஸ்டார்ட் செய்யப்பட்டுக்காட்டப்படும் விண்டோஸ் சிஸ்டத்தில் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 8 இனி கிடைக்காது. பிரவுசர் ஒன்றுடன் நீங்கள் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ள எந்தவொரு வசதியும் இனி இதன் இடத்தில் நீங்கள் பயன்படுத்தும் பிரவுசருடன் கிடைக்கும். இதிலும் நீங்கள் மாற்றங்களை மேற்கொள்ளலாம்.

### ஸ்டார்ட் மெனுவில் மை டொகுமெண்டஸ்

விண்டோஸ் சிஸ்டம் இயக்கத்தில் நாம் எந்த பைலை உருவாக்கினாலும் அது மை டொகுமெண்ட்ஸ் போல்டரில் சேவ் செய்யப்படும். எந்த புரோகிராமினை டவுண்லோட் செய்தாலும் அது மை டொகுமெண்ட்ஸ் போல்டரின் துணை போல்டரான டவுண்லோட்ஸ் என்ற போல்டரில் சேவ் செய்யப்படும்.

எனவே, எந்தவொரு பைலை இயக்கத்தில் கொண்டுவர வேண்டும் என முயற்சி செய் தாலும் நாம் மை டொகுமெண்ட்ஸ் போல்டரை அடிக்கடி திறந்து பயன்படுத்த வேண்டும். எனவே, இதற்கான ஷோர்ட் கட் ஒன்றை ஸ்டார்ட் மெனுவில் வைத்து விட்டால் இதனைத் திறப்பது எளிதாக இருக்குமே. அல்லது இதே மெனுவில் இதற்கென ஒரு பட்டனை அமைக்கலாம். அல்லது அந்த போல்டரையே ஒரு மெனுவாக அமைக்கலாம். விண்டோஸ் 7 சிஸ்டத்தில் இதனை எப்படி அமைப்பது என்று பார்க்கலாம்.

Start மெனுவில் ரைட் கிளிக் செய்து கிடைக்கும் கொண்டெக்ஸ்ட் மெனுவில் Properties என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். ஸ்டார்ட் மெனு புரோப்பர்ட்டீஸ் விண்டோ காட்டப்படும். இதில் Customize பட்டனைத் தேர்ந்தெடுக்கவும். இனி advanced setting என்ற விண்டோ திறக்கப்படும். இங்கு ஸ்டார்ட் மெனுவில் உள்ள போல்டர்களின் பட்டியல் ஒன்று காட்டப்படும். Document என்பதன் கீழாக உள்ள Display as a menu என்பதனைத் தேர்ந்தெடுத்தால் ஸ்டார்ட் மெனுவில் டொகுமெண்ட் போல்டர் காட்டப்படும். இதன் துணை மெனுக்களையும் நாம் கிளிக் செய்து பைல்களைப் பார்க்கும் வகையில் இது அமைக்கப்படும்.

மாறாக முதல் ஒப்ஷனையும் தேர்ந்தெடுக்கலாம். அப்போது ஸ்டார்ட் மெனுவில் Document பட்டன் மட்டும் காட்டப்படும். இந்த பட்டனில் கிளிக் செய்கையில் டொகுமெண்ட் போல்டர் விண்டோஸ் எக்ஸ்புளோரரில் திறக்கப்படும். உங்கள் விருப்பப்படி ஒப்ஷனைத் தேர்ந்தெடுத்து மேற்கொண்ட பின்னர் OK பட்டன் மீது கிளிக் செய்திடவும். நீங்கள் மேற்கொண்ட மாற்றங்கள் விண்டோஸ் 7 ஸ்டார்ட் மெனுவில் மேற்கொள்ளப்படும்.

இனி ஸ்டார்ட் மெனுவினைத் தி[illegible]து Document என்பதில் கிளிக் செய்தால் [illegible]ந்த போல்டரின் உள்ளே அனைத்து பைல்கள், போல்டர்கள் மற்றும் டொகுமெண்டஸ் என அனைத்தையும் நீங்கள் காணலாம்.

# மவுஸ் பயன்பாட்டுக்கு சில ஆலோசனைகள்...

கணனியுடன் சேர்ந்து நம் அன்றாட வாழ்வில் நம்முடன் கலந்ததாக மவுஸ் மாறிவிட்டது. நாம் அறியாமலேயே நம்கைகளில் ஏற்படும் பலவிதமான பிரச்சினைகளுக்குக் காரணமாகவும் மவுஸ் அமைந்து விட்டதாகப் பல டாக்டர்கள் கூறுகின்றனர். கைகளில் குறிப்பாக மணிக் கட்டினைச் சுற்றி ஏற்படும் வலி மற்றும் எலும்பு தேய்மானத்திற்கு மவுஸ் காரணமாய் அமைகிறது என்கிறார்கள்.

இதனை ஆங்கிலத்தில் muscu loskeletal injury என்று அழைக்கின்றனர். இதற்குக் காரணம் அதனைப் பிடித்துப் பயன்படுத்தும் விதத்தில் நாம் சரியாக அக்கறை க்காட்டாததுதான்.



இங்கு மவுஸைப் பிடித்துப் பயன்படுத்தும் வழிகளில் பின்பற்ற வேண்டிய சில மருத்துவ அறிவுரைகளை காணலாம்.

- முதலாவதாக மவுஸ் பிடித்திருக்கும் முறையில் அவ்வப்போது மாற்றத்தை ஏற்படுத்திக் கொளளுங் கள். மாற்றத்தை ஏற்படுத்தினாலும் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் தான் மவுஸ் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- மவுஸ் பிடித்திருக்கையில் அதனை இறுக்கிப் பிடிக்க வேண்டாம். மிக மெதுவாகப் பட்டும் படாமல் நம் கரத்தினை அதன் மீது வைத்து இயக்கலாம்.
- மவுஸ் இயக்கப்படுகையில் உங்களுடைய மணிக்கட்டு தசை அதிகம் இயங்கக் கூடாது. முழங்கை தசைதான் அதனை இயக்கும் செயற்பாட்டின் மையமாக இருக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் மணிக்கட்டினை நேராகவும் நடுவாகவும் வைக்கவும்.
- உங்களுடைய நாற்காலியில் நன்கு சாய்ந்து அமர்ந்து கொள்ளுங்கள். கரங்களைத் தளர்வாக வைத்துக் கொள்ளுங்கள். அதன்பின் மவுஸ் பிடிக்கும் உங்கள் கரத்தை பெரும்பாலும் வலது கரம் சற்றுத் தூக்குங்கள். உங்கள் கை முழங்கைக்குச் சற்று மேலாக இருக்கும் வகையில் தூக்குங்கள். மவுஸை கீ போர்ட் இருக்கும் இடத்திற்கும் அருகே அதே தளத்தில் வைத்துப் பயன்படுத்த வேண்டாம். கீ போர்ட்டுக்கு 1 அல்லது 2 அங்குலம் மேலாக இருக்கும்படி மவுஸ் இடம்பெற வேண்டும். இந்த மவுஸ் அமரும் இடம் சற்றுக் கீழாக, சரிவாக இருக்கும்படியாகவும் அமைக்கலாம்.
- நீங்கள் மணிக்கட்டின் அமைப்பைச் சற்று சிரத்தையுடன் கவனித்தால் ஒன்று புரியும். இது இயற்கையாகவே சற்று வளைந்த நிலையில் உள்ளது. தட்டையான ஒரு தளத்தில் மணிக்கட்டை வைத்துப் பாருங்கள். வளைவான மணிக்கட்டின் கீழாக ஒரு சிறிய பேனாவினை நுழைத்து எடுக்கும் அளவிற்கு அது வளைவாக இருக்கும். இதனுடன் எந்த தள அழுத்தமும் இருக்கக் கூடாது என்ற வகையில்தான் முன் கரம் மணி[illegible] அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மவுஸ் பயன்படுத்துவதற்காக மணிக்கட்டினைத் [illegible]ளத்தோடு அழுத்துவது இயற்கைக்கு முரணானது.
- நம்மில் பெரும்பாலானவர்களுக்கு மணிக்கட்டின் தோலுக்குச் சற்று அடியிலேயே இரத்த நாளங்கள் செல்லும். அதனால்தான் நாடித் துடிப்பினை இங்கு பார்க்கின்றோம். எனவே, இந்த இடத்தில் அழுத்தம் கொடுத்தால் அது இரத்த ஓட்டத்தில் சிறிதளவேனும் பாதிப்பினை ஏற்படுத்தும். இதனால் இங்கு காயம் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன.
- ஒரு சிலர் மணிக்கட்டுப் பகுதிக்கென தனியே ஒரு சப்போர்ட் அமைத்து இயக்குவார்கள். கைக்குட்டையைக் கூட மடித்து வைத்துப் பயன்படுத்துவார்கள். இது கூடவே கூடாது. இது பிரச்சினையை மேலும் பெரிதாக மாற்றி கார்பல் டனல் பிரச்சினையை உருவாக்கும்.
- ஒரு சிலர் கரங்களுக்கு மெதுவாக இருப்பதற்கென மென்மையான சப்போர்ட் ஒன்றை நாற்காலியின் கரங்களில் வைத்துப் பயன்படுத்துவார்கள். இவ்வாறு பயன்படுத்துகையில் கரங்களை அதிலிருந்து எடுக்கமாட்டார்கள். ஒரு வகையில் கரங்கள் கட்டிப் போட்டது போல மாறுகின்றது. இதனால் மணிக்கட்டிற்கு அதிக வேலை கிடைக்கிறது. இது மிகவும் பிரச்சினையைத் தரும்.
- ஒரு சமதளத்தில் கையை வைத்து இயக்குகையில் நம் உள்ளங்கையின் அடிப்பாகத்தில் அதனை அமர்த்தி இயக்க வேண்டும். கீபோர்டினை இயக்குகையில் இது மிகவும் உதவியாக இருக்கும். ஆனால், மவுஸ் பயன்பாடு கீ போர்ட் பயன்பாட்டிலிருந்து மாறுபட்டது. கீ போர்டில் கரங்களை உள்ளங்கை சப்போர்ட்டில் வைத்துப் பின் விரல்களை மட்டுமோ கரங்களையோ இயக்கிப் பின் அவ்வப்போது உள்ளங்கை அடிப்பகுதியில் வைத்து ஓய்வளிக்கலாம்.

ஆனால், மவுஸ் இயக்கம் அப்படிப்பட்டதல்ல. இங்கு ஒரு தளத்தில் மீது முழு மவுஸ் சாதனமும் நகர்த்தி இயக்கப்படுகிறது. மவுஸ் நகர்த்தல் முழுமையும் முழங்கையை இயக்கத்தின் நடுப்புள்ளியாக வைத்து இயக்கப்பட வேண்டும். மணிக்கட்டு நடு இயக்கப் புள்ளியாக அமையக் கூடாது. முன்கை, கை மற்றும் மவுஸ் இயங்குவதைத் தடுக்கும் வகையில் செயற்பாடு எது இருந்தாலும் அது பிரச்சினையைக் கொடுக்கும்.

- இப்போது ஸ்டைல் என்ற பெயரில் பல வடிவங்களில் பெரும்பாலும் தேவையற்ற வளைவுகளில் மவுஸ் சாதனங்கள் வடிவமைக்கப்பட்டு கிடைக்கின்றன.


இது போன்ற வளைவான மவுஸ் பயன்பாட்டிற்குச் சரியானதல்ல. இரு புறமும் இணையாகச் சீரான அமைப்புள்ள மவுஸ்தான் சரியான ஒன்று.

சில நிறுவனங்கள் இது குறித்து மருத்துவ ரீதியாக ஆய்வுகளை மேற்கொண்டு சற்றுப் பெரிய அளவில் மவுஸ்களைத் தருகின்றன. இவை மணிக்கட்டிற்கு வேலையைக் குறைத்து கரங்கள் வழி மவுஸ் பயன்பாட்டிற்கு வழி வகுக்கின்றன.

- மவுஸை இடது கரத்திலும் பயன்படுத்தும் வகையிலும் செட் செய்திட விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. எனவே, ஏன் வலது [illegible]க இடது கை என நம் வேலையை மாற்றி சில காலம் மவுஸைப் பயன்படுத்தக் கூடாது . இது ஒரு சிந்தனைதான்.




# சீகிளினர் புதிய பதிப்பில்




சிகிளீனர் புரோகிராமின் புதிய பதிப்பு அண்மையில் அதன் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இந்ததளத்தின் முகவரி http://www.piriform.com/ccleaner/download/standard. சிஸ்டம் இயங்குவதனை அதன் அதிகபட்ச பயன்பாட்டிற்குக் கொண்டு வர தேவையற்ற பைல்கள், முற்றிலுமாக நீக்க விரும்பும் இன்ஸ்டோல் செய்யப்பட்ட புரோகிராம்கள், இணையத்தில் செல்வதனால் ஏற்படும் தற்காலிக பைல்கள், தேங்கிய முகவரிகள், ரெஜிஸ்ட்ரியில் தங்கும் தேவையற்ற வரிகள் ஆகிய அனைத்தையும் நீக்கி ஹார்ட்டிஸ்க்கில் இடம் ஏற்படுத்துவதுடன் விண்டோஸ் இயக்கத்தினையும் வேகமாகச் செயற்பட வைக்க நாம் பயன்படுத்துவது சிகிளீனர் புரோகிராம்.

இதன் இன்னொரு சிறப்பு இதன் இயக்க வேகம்தான். மிக வேகமாக இயங்குவதுடன் இதில் எந்தவிதமான ஸ்பைவெயர் மற்றும் ஹாட்வெயர் இருப்பதில்லை. இன்டர்நெட் எக்ஸ்புளோரர், பயர்பொக்ஸ், கூகுள் குரோம், ஒப்ரா, சபாரி, விண்டோஸ் ரீசைக்கிள் பின், ரீ சண்ட் டொகுமெண்ட்ஸ் லிஸ்ட், தற்காலிக பைல்கள், லொக் பைல்கள் மற்றும் ரெஜிஸ்ட்ரி ஆகியவற்றை இது சுத்தப்படுத்துகிறது. அண்மையில் வெளியிட்டுள்ள பதிப்பில் காணும் புதிய வசதிகளில் கீழ்க்குறித்தவை முக்கியமானவைகளாகும்.

- பயர்பொக்ஸ் சோதனைப் பதிப்பு 8 மற்றும் பதிப்பு 7
- நெட்வேர்க் பாஸ்வேர்ட் கிளீனிங்
- சபாரி மற்றும் கூகுள் குரோம் பிரவுசர் சுத்தப்படுத்துவது மேம்படுத்தப்பட்டுள்ளது.
- புதிய அவாஸ்ட் மற்றும் ஏ.வி.ஜி.அண்ட்டி வைரஸ் பதிப்பிற்கான கிளீனிங் வசதிகள்.

இன்னும் பல வசதிகள் தரப்பட்டுள்ளன. இவற்றைக் காண டவுண்லோட் செய்வதற்கென மேலே காட்டப்பட்டுள்ள தளத்தையே அணுகவும்.

அரசாங்கத்தின் சக்தி கணக்கில் வரும் பூச்சியத்தைப் போன்றது. மக்களின் சக்தி ஒன்று என்ற எண்ணைப் போன்றது. ~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# எல்லை மீறிச் செல்லும் ஊடக விமர்சனங்கள்

ஜனநாயகத்த[illegible]ன் நான்கு தூண்களில் ஒன்று ஊடகம் என்று சொல்லப்படுகின்றது.

ஆக, ஜனநாயகம் நிலைக்க வேண்டுமாயின் ஊடகத்துறை பலமானதாக இருக்க வேண்டும். உலக நாடுகளின் வரலாறுகளை எடுத்து நோக்கினால் எத்தனையோ தலைவர்கள் பதவியை இழப்பதற்கும் பதவியை ஏற்பதற்கும் ஊடகங்களே காரணமாக இருந்துள்ளன.

அரசியல் பிரமுகர்களின் ஊழல்கள், ஊதாரித்தனங்களை அம்பலப்படுத்துவது முதல் அடக்குமுறைகளை உடைத்தெறிவது வரையான பல் பரிமாணங்களில் ஊடகங்களின் வகிபங்கு காத்திரமான இடத்தைப் பெற்றுள்ளன.

இலங்கையில் கூட, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி அதிகாரத்தை வீழ்த்தி சந்திரிகா குமாரதுங்க அம்மையாரை அரியணை ஏற்றிய பெருமை சிங்கள ஊடகங்களுக்கு உண்டு.

இது தவிர வன்னிப் போரில் இடம்பெற்ற மிக மோசமான சம்பவங்களை உலகிற்கு அம்பலப்படுத்திய சனல் 4, விக்கிலீக்ஸ் ஆகிய ஊடகங்களால் ஐ.நா சபையின் செயலாளரும் திணறும் அளவிற்கு நிலைமை உருவாகியுள்ளது.

அந்தளவில் ஊடகங்களின் தகுதிப்பாடு இருக்கும் நிலையில், இலங்கையில் அல்லது அதன் பிராந்தியங்களில் இருக்கக்கூடிய ஊடகங்கள் தொடர்பில் இப்போது வெளிப்படுத்தப்படும் விமர்சனங்கள் ஒரு வித்தியாசமான போக்கை உருவாக்கியுள்ளதெனலாம்.

ஊடகங்கள் பொறுப்பற்ற முறையில் செயற்படுகின்றன–அவை வெளியிடுகின்ற செய்திகளால் இனமத மொழிகளிடையேயான பிரிவினை தொடர்ந்தும் நீடிக்கிறது. அதேசமயம் கலாசார பிறழ்வுகள், சீரழிவுகள் என யாழ்ப்பாணப் பிராந்திய ஊடகங்கள் அதீதமாக செய்தி பரப்புகின்றன என்ற விமர்சனங்களும் தாராளமாக எழுந்துள்ளன.

சிலவேளைகளில் ஊடகங்கள் ஊடகங்களை விமர்சிக்கின்ற ஒரு புதிய கலாசாரத்தையும் காண முடிகின்றது.

இது பற்றியெல்லாம் அதிகம் விமர்சிப்பது நல்லதல்ல என்ற அடிப்படையில் அதனை அப்படியே விட்டுவிடலாம்.

ஆனால், பொது மக்கள் தரப்பில் எழும் விமர்சனங்கள் தொடர்பில் ஊடகங்கள் விழிப்பாக இருக்கத் தவறும் பட்சத்தில் செய்திகளின் நம்பகத்தன்மைகள் பழுதடையும் வாய்ப்பு நிறையவே உண்டு.

இது தவிர விமர்சனப் போக்கில் ஊடகங்கள் எல்லை மீறிச் செயற்பட்டு வருவதால் ஊடகப் போர் தோன்றவும் வாய்ப்பு ஏற்படும்.

தமிழ் ஊடகங்களிடையே இந்நிலைமை ஏற்படுமாக இருந்தால், அது தமிழ் மக்களுக்கு மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் ஊடக விமர்சனங்கள் குறித்து அனைவரும் நிதானமான போக்கைக் கடைப்பிடிப்பது நல்லது.

# தமிழக மீனவர் மீதான தாக்குதல் அறிவிக்கப்படாத யுத்தம்

## தா.பாண்டியன் தெரிவிப்பு

தமிழக மீனவர் மீது தாக்குதல் நடத்துவதன் மூலம் இந்தியாவுக்கு எதிராக இலங்கை அரசு அறிவிக்கப்படாத யுத்தம் மேற்கொள்கிறது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் கூறினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு கூட்டம் நேற்று முன்னதினம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு பின் தா.பாண்டியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது, மக்கள் நலப் பணியாளர்கள் அனைவரும் வேறு வேலை தேடும் வயதைக் கடந்தவர்கள். அதனால் அவர்களை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும். களப் பணியாளர்கள் வேலையே தேவையில்லை என்று அரசு கருதுமானால் வேறு துறைகளில் அவர்களுக்கு வேலை வழங்க வேண்டும். தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தால தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்ற னர். மீன் பிடிக்கிறார்கள் என்பதற்காகவே சுடக்கூடிய ஒரே நாடு இலங்கை.

இதன்மூலம் இந்தியாவுக்கு எதிராக இலங்கை அரசு அறிவிக்கப்படாத யுத்தம் தொடுக்கின்றது என்றே கொள்ளலாம். கூடங்குளம் அணுமின் நிலையத்தால் ஆபத்து இல்லை என்பது அப்துல் கலாம் கருத்து. ஆனால், அங்குள்ள மக்கள் அச்சம் கொள்கின்றனர்.

அவர்களுடைய அச்சத்தை மத்திய, மாநில அரசுகள் போக்க வேண்டும். அணுமின் நிலையத்தை மூடவேண்டும் என்று எந்த கட்சியுமே கோரிக்கை வைக்கவில்லை. அணுமின் நிலையத்தை மூடக்கூடாது என்பதுதான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய முடிவு. (அ–2)

# கேம்பிரிட்ஜ் பல்கலையின் பொருளாதார ஆராய்ச்சி பட்டம் பெற்றுள்ள இந்தியர்

மிகவும் புகழ்பெற்ற பல்கலைக்கழகமான கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பொருளாதார பிரிவில் எம்.பில் ஆராய்ச்சி பட்டத்தை கொல்கத்தாவை சேர்ந்த பெண் பெற்றுள்ளார்.

இதையடுத்து பொருளாதாரத்தில் நோபல் பரிசு பெற்றவரான அமர்தியா சென் வரிசையில் 23 வயது கொல்கத்தா மாணவி மஹிசா கண்ணா இணைந்துள்ளார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் அமர்தியா சென், தாஸ்குப்தா ஆகிய இந்தியர்கள் இருவர் இதற்கு முன் பொருளாதாரத்தில் எம்.பில் ஆராய்ச்சி பட்டம் பெற்றுள்ளனர். தற்போது மூன்றாவதாக மஹிமா கண்ணா இந்த ஆராய்ச்சிப் பட்டம் பெற்றுள்ளார்.

இதன் மூலம் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் எம்.பில் ஆராய்ச்சி பட்டம் பெறும் மூன்றாவது இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். (அ.2)

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

திருவிளக்கில் தீபம் ஏற்றுவதால் பல்வேறு பலன்கள் ஏற்படுகின்றன என்று நம்பப்படுகிறது.

ஒரு நெய் தீபம் விளக்குளள ஏற்றினால் கடன் தீரும். சௌக்கியம் உண்டாகும். ஐந்து விளக்கு வாங்கி நெய் தீபம் ஏற்றினால் குடும்பத்தில் ஒற்றுமையும் திருமணம் போன்ற மங்களகரமான காரியங்களும் நடைபெறும். நஷ்டமான பொருட்களும் கிடைக்கும். செடி விளக்கு வாங்கி அதில் நெய் தீபம் ஏற்றினால் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு நோய்கள் வராது. வந்த நோய்களும் குணமாகும்.. மேலும் பிள்ளைகளுக்கு நலன்கள் உண்டாகும்.

சர விளக்கு வாங்கி நெய் தீபம் ஏற்றினால் ஜென்மத்திற்கும் உள்ள பாவங்கள் நிவர்த்தியாகி புண்ணிய பலன்களை அனுபவிப்பார்கள்.

நெய்யால் விளக்கேற்றினால் நினைத்தது நடைபெறும். நல்லெண்ணெயால் தீபம் ஏற்றினால் ஆரோக்கியம் உண்டாகும். தேங்காய் எண்ணெயால் தீபம் ஏற்றினால் வசீகரமளிக்கும். கடலெண்ணெயால் தீபம் ஏற்றினால் மிருத்யுநாசம், ஆரோக்கியம் உண்டாகும். இலுப்பெண்ணெயால் தீபம் ஏற்றினால் எல்லாக் காரியங்களிலும் வெற்றி பெறும். மறுஜென் மத்திற்கும் நன்மை தரும்.

# கற்றல் உபகரணம் வழங்கல்

நலிவுற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட யாழ்.எயிட் அமைப்பானது. யாழ்.கோப்பாய் மகா வித்தியாலய மாணவர்க்ளின் கல்வி மேம்பாட்டிற்காக கற்றலுக்கான உதவிப்பொருட்களை இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பாடசாலையின் அதிபர் எஸ்.புஜ்பராஜா தலைமையில் வழங்கவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி எஸ்.பிரபாகர், அவரது பாரியாரும் யாழ்.பல்கலைக்கழக இராசயனவியல் விரிவுரையாளருமான திருமதி கலாநிதி யசோதா பிரபாகர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ–2)

# வெள்ளி நற்சிந்தனை

## 45 செவ்வியல் தமிழில் சீர்மியம்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

இறையருள் எம்மை என்றும் காத்து நிற்பதை ஒருபோதும் நாம் நினைப்பதில்லை. எம் மனம் போனபடியே வாழ்வு நடத்துகின்றோம். இறைவழிபாட்டைத் தொடராமல் வீணே நாட்களைப் போக்குகின்றோம். மணிவாசகர் தமது செயற்பாட்டால் எம்மையும் சிந்திக்கத் தூண்டுகிறார். தான் எப்படி வாழ்ந்தேன் என்பதைப் பாடலிலே பதிவு செய்து வைத்துள்ளார்.

வழிபாட்டில் இறைவனைக் காணாத போதும் காத்தருள் செய்க என வேண்டுவதும் மண்ணிலே உடல் தேயப் புரண்டு வழிபடுவதும் இறைவனைப் போற்றிப் பாடுவதும் இன்றும் தொடரும் மரபாகவுள்ளன. இவற்றை மன உறுதியோடு செய்யும் நடைமுறை இல்லை. மணிவாசகரும் தான் அவ்வாறு வாழ்ந்ததைக் கூறியுள்ளார். தன்னுடைய வாழ்வு இறைவன் தாமரை மலர் போன்ற திருவடியால் உதைபட்ட கூற்றுவனுடைய நிலையை ஒத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கூற்றுவன் மார்க்கண்டேயர் உயிரைக் கொல்ல வந்த போது அவர் சிவபூசை செய்து கொண்டிருந்தார். கூற்றுவன் சிவபூசையினை மதியாது பாசக்கயிற்றை மார்க்கண்டேயர் மேல் வீசி இழுத்தான். மார்க்கண்டேயர் சிவலிங்கத்தை இறுகித் தழுவியிருந்தமையால் அப்பாசக்கயிறு சிவலிங்கப் பெருமானையும் சேர்த்துப் பற்றியது. தன்னைச் சரணடைந்த மார்க்கண்டேயரைக் காக்க இறைவன் சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு கூற்றுவனைக் காலால் உதைத்தான். அவன் செயலற்று வீழ்ந்தான். மணிவாசகரோ இறைவன் முன்னிலையில் வந்த போது தாமரை மலர் போன்ற இறைவன் திருவடியைத் தலைமேற் சூட்டப் பெற்றவர். ஆனால் பின்னர் அத்திருக்காட்சி கிடைக்கப் பெறாமையால் போற்றிப் புகழ்ந்து பாடிப் புரண்டு வழிபட்டு நிற்கிறார். எனவே, செயலற்று இறையருளைப் பெற முடியாத நிலையில் கூற்றுவனைப் போலவே தாமும் ஒத்திருப்பதாக எடுத்துரைக்கின்றார்.

உறுதிமிக்க மெய்யன்பு செலுத்தவில்லையே என்ற ஏக்கமே அவரிடம் குடிகொண்டிருந்தது. வழிபாட்டுநிலையில் போற்றுதல், புகழ்தல், புரள்தல் என்னும் செயற்பாடுகள் மட்டும் போதாது. இறைவன் மீது நம்பிக்கை வைக்கவேண்டும். இறைவன் திருப்பாதம் தாமரை போன்றது. அத்தாள்களைச் சென்று சேர்வதே உயிர்களின் இலக்காக இருக்க வேண்டும். வழிபாடு பற்றிய கொள்கையில் தெளிவு வேண்டும். இன்றைய வழிபாட்டில் செயற்பாடு இறைசிந்தனையற்றே அதிகமாகச் செய்யப்படுகின்றது. ஆற்றல் மிக்க இறைவனை நாம் உண்மையான நம்பிக்கையோடு அழைக்க வேண்டும். ஐம்பொறிகளையும் இறையுருவில் பதிய வைத்து ஐம்புலன்களையும் ஒடுக்கி வழிபாடு செய்தல் வேண்டும். மேலும் யமபயத்தைப் போக்குவதற்கு வழிபாடே துணைபுரியும் என்பதை மணிவாசகர் உணர்த்திச் சென்றுள்ளார். உலகியல் வாழ்வு பற்றியே எண்ணியிருப்பவரை ஆற்றுப்படுத்துகிறார். தன்குறையை நன்குணர்ந்தமையால் பிறரையும் நல்வழிப்படுத்த வேண்டும் என எண்ணியே தன் பக்தியனுபவங்களைப் பாடலாகப் பாடிவைத்துள்ளார். அப்பாடலின் பொருள் இன்றைய காலத்திற்கும் ஏற்றதாயிருப்பது குறிப்பிடவேண்டிய ஒன்றாகும்..

போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்துநின்று
ஆற்றல் மிக்கவன் பாலழைக்கின்றிலேன்
ஏற்றுவந்தெதிர் தாமரைத் தாளுறும்
கூற்ற மன்னதொர் கொள்கையென்கொள்கையே.

# அணுகுண்டு தயாரிப்பில் ஈரான் இரகசியமாக ஈடுபடுகின்றது

## ஐ.நா.அறிக்கையில் தகவல்

ஈரான் அணுகுண்டு தயாரிப்பில் இரகசியமாக ஈடுபட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அணுசக்தி அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது. ஈரான் அணுஆயுத தயாரிப்பில் ஈடுபட்டிருப்பதாக இதுவரையில் அதிகாரபூர்வமற்ற முறையில் செய்திகள் வெளியாகி வந்தன. ஆனால், இப்போது முதல் முறையாக ஐக்கிய நாடுகள் சபையின் அணுசக்தி அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

அணு ஆயுத தயாரிப்பில் ஈரான் ஈடுபட்டுள்ளது என்ற விடயம் இப்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இஸ்ரேலை அச்சுறுத்துவதாக இத்தகைய நடவடிக்கையில் இறங்கியிருந்தாலும் ஈரானின் இந்த நடவடிக்கை மேலை நாடுகளிடையே கடும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே சர்வதேச அணுசக்தி முகாமை வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் கூறியிருப்பதாவது, இஸ்லாமியக் குடியரசு நாடுகள் சில அணுஆயுத தயாரிப்பில் இறங்கியுள்ளன.

இதற்காக முறைமுகமாக தேவையான உதிரிபாகங்களைக் கொள்முதல் செய்வது உயர் வெடிபொருள் சோதனை கருவிகள், டெட்டனேட்டர்களை உருவாக்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

மேலும் கணனி உதவியுடன் அணு குண்டுகளை வடிவமைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். இவை அனைத்துமே அணுகுண்டு சோதனைக்கு முந்தைய நடவடிக்கைகளாகும்.

மேலும் ஏவுகணையில் வைத்து செல்லும் வகையில் இவை வடிவமைக்கப்படுகின்றன. ஈரானிடம் உள்ள ஷாகாப் எனும் ஏவுகணையில் இவை வைத்து செலுத்தப்படவுள்ளன. இந்த ஏவுகணை இஸ்ரேலை தாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டதாகும் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையை முழுமையாகப் படிக்கவில்லை என்றும் எனவே இது குறித்து கருத்து தெரிவிக்க இயலாது என்றும் ஈரான் அரசின் செய்தித் தொடர்பாளர் மார்க் ரெகெவ் கூறியுள்ளார்.

இதனிடையே ஈரானின் அணு ஆயுத தாக்குதலை முறியடிப்போம் என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் எகுத் பராக் எச்சரித்துள்ளார். இஸ்ரேல் வானொலி மூலம் நிகழ்த்திய உரையில், ஈரான் மீது எவ்வித புதிய பொருளாதார தடை எதையும் ஐக்கிய நாடுகள் சபை விதிக்காது என தான் கருதுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அணுசக்தியை பயன்படுத்தும் விடயத்தில் தங்களுக்குள்ள உரிமையை ஒரு போதும் ஈரான் விட்டுக் கொடுக்காது என்று அந்நாட்டு தூதர் அலி அக்சர் சோல்டனே தெரிவித்துள்ளார்.

ஆக்கபூர்வ பணிகளில் அணுசக்தியை பயன்படுத்துவது தொடர்பான ஆராய்ச்சியில் ஈரான் தொடர்ந்து ஈடுபடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சர்வதேச அணுசக்தி முகாமையுடனான (ஐஏஇஏ) ஒத்துழைப்பு அளிக்க தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார். (அ-2)

# மைக்கல் ஜாக்சன் பயன்படுத்திய பொருட்கள் ஏல விற்பனைக்கு

(லண்டன்)

பொப் இசை உலகின் மன்னன் மைக்கேல் ஜாக்சனின் இறுதிநாட்களில் பயன்படுத்திய பொருட்கள் அமெரிக்காவில் அடுத்த மாதம் ஏலம் விடப்பட இருப்பதாக பத்திரிகை செய்தி ஒன்று வெளியிட்டுள்ளது.

இது குறித்து அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மைக்கேல் ஜாக்சன் தனது இறுதி நாட்களில் பயன்படுத்திய பொருட்களை அடுத்த மாதம் 12 ஆம் திகதி லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சியில் பார்வைக்கு வைக்கவுள்ளோம்.

17 ஆம் திகதி இதற்கான ஏலம் நடைபெறவுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஜாக்சன் மரணமடைந்த படுக்கை அதிக ஏலத்திற்கு விலைபோகும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அதில் மேற்கோள் காட்டி குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)




# ஒபாமாவும் மன்மோகனும் சந்தித்து பயங்கரவாத எதிர்ப்பு குறித்து விவாதிப்பர்

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பாரத பிரதமர் மன்மோகன் சிங்கை எதிர்வரும் 18 ஆம் திகதி இந்தோனேசியாவில் நடக்கும் கிழக்காசிய மாநாட்டில் சந்தித்துப் பேசவுள்ளதாக வெள்ளை மாளிகை வட்டாரம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரியவந்துள்ளது.

கடந்த ஒரு ஆண்டில் மீண்டும் இந்த சந்திப்பு நடக்க இருக்கின்றது. பாலித்தீவில் நடக்கும் கிழக்காசிய மாநாட்டில் பங்கேற்க வரும் தலைவர்களுடன் பேசும் ஒபாமா பிரதமர் மன்மோகன் சிங்குடன் பிரத்தியேக பேச்சு நடத்துகின்றார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் இந்தியாவிற்கு விஜயம் செய்த பின்னர் ஒபாமாவுடன் இந்த சந்திப்பு நடக்கின்றது. இருநாட்டு வர்த்தக உறவு, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் இரு நாடுகள் பங்கு, ஆப்கான் வளர்ச்சி குறித்து விவாதிக்கப்படும்.

இது குறித்து வெள்ளை மாளிகை அதிகாரி ரோட்டஸ் கூறுகையில்,

இரு தலைவர்களும் சில நேரங்களில் சந்திக்க வாய்ப்பு இல்லாமல் போயிருக்கலாம். ஆனால் எதிர்வரும் 18 ஆம் திகதி நடக்கும் சந்திப்பு ஆக்கபூர்வமானதாக அமையும் என்றார்.

இந்தியாவை பொறுத்தவரை அமெரிக்காவின் நெருங்கிய நட்புறவு நாடாகவும் ஆசிய பிராந்தியத்தில் பயங்கரவாத ஒழிப்பில் முக்கிய பங்காற்றும் நாடாகவும் இந்தியா விளங்குகின்றது என்றார்.

மேலும் கிழக்காசிய நாடுகள் உடனான உறவு மேம்பட இந்த மாநாடு உதவியாக இருக்கும் என அமெரிக்க அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (அ-2)

# ஈரான் மீது புதிய பொருளாதார தடைகள் விதிக்கப்படும்-அமெரிக்கா

ஈரான் மீது புதிய பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரானுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சர்வதேச சமுதாயத்தை கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஈரான் அணு குண்டு தயாரிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் அணுசக்தி அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதையடுத்து இத்தகைய எச்சரிக்கையை அமெரிக்கா விடுத்துள்ளது.

ஈரானுக்கு மேலும் நெருக்கடி தருவது தொடர்பாக பிற வல்லரசு நாடுகளுடன் அமெரிக்கா பேச்சு நடத்துவதாக வெள்ளை மாளிகை உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஈரான், வடகொரியா, சிரியா மீது ஒருங்கிணைந்த தடைச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று அமெரிக்க செனட்டர் கிர்ஸ்டென் கிலிபிராண்ட் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்கா விடுத்துள்ள எச்சரிக்கைக்கு ஈரான் ஜனாதிபதி முகமது நிஜாத் அளித்துள்ள பதிலில்,

ஈரானுக்கு அணுகுண்டு தேவையில்லை. இதை சர்வதேச சமூகம் புரிந்து கொண்டு ஈரான் மீது நிர்ப்பந்தம் தொடுப்பதை கைவிட வேண்டும் என்று கூறியுள்ளார். (அ-2)

# ஒட்டிப்பிறந்த இரட்டை சகோதரிகளை பிரித்து மருத்துவர்கள் சாதனை



ஒட்டிப்பிறந்த இரட்டை சகோதரிகளை பிரித்து மருத்துவர்கள் புதிய சாதனை படைத்துள்ளனர்.

இச் சகோதரிகளின் பெயர் மரியா மற்றும் தெரசா ஆகும். இவர்கள் டொமினிக்கன் குடியரசுப் பகுதியைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு சத்திர சிகிச்சையானது சுமார் 20 மணி நேரம் நடைபெற்றது.

இந்த சிகிச்சையை வெர்ஜீனியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் குழு மேற்கொண்டது. தலைமை மருத்துவர் டேவிட் தலைமையில் 6 மருத்துவர்கள் அடங்கிய குழுவினால் மேற்கொள்ளப்பட்டது.

வெற்றிகரமாக இச்சிகிச்சை முடிந்தவுடன் தலைமை மருத்துவர் இது குறித்து கூறுகையில்,

இக்குழந்தைகள் நன்கு ஆரோக்கியமாக உள்ளனர். 20 வயது வரை நல்ல உடல் நலத்துடனும் எவ்வித பாதிப்பும் இன்றி உயிர் வாழ்வர் என உறுதி அளித்தார். (அ-2)

# தீவிரவாத இயக்கமான ஹக்கானி மீது நடவடிக்கை

## பாகிஸ்தான் உறுதி

அல்கொய்தா இயக்கத்துடன் தொடர்புடைய தீவிரவாத இயக்கமான ஹக்கானி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்காவிடம் பாகிஸ்தான் உறுதி அளித்துள்ளது.

அமெரிக்காவை சேர்ந்த நாடாளுமன்ற குழு ஒன்று கராச்சி நகருக்கு வந்துள்ளது. அந்தக்குழுவைச் சந்தித்த பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி இந்த உறுதியை அளித்துள்ளார்.

எனினும் ஜனாதிபதியின் இந்த வாக்குறுதி எந்த அளவுக்கு நம்பக்கூடியதாக இருக்கும் என்கின்ற சந்தேகம் பாகிஸ்தான் வந்துள்ள அமெரிக்க எம்.பி.க்கள் குழுவின் தலைவர் மைக்கேல் மெக்காலுக்கு இருக்கின்றது.

பாகிஸ்தானில் இராணுவத்தின் கைதான் ஓங்கியுள்ளது. எனவே,ள தான் சொன்னதை ஜனாதிபதி நிறைவேற்றக்கூடிய அதிகாரம் இருக்கின்றதா என்பதை பொறுத்துத் தான் பார்க்க வேண்டும் என்பது மெக்காலின் கருத்து.

சி.ஐ.ஏ. ஏஜென்டு ஒருவர் இரு பாகிஸ்தானியரை சுட்டுக் கொன்றது, கடந்த மே மாதத்தில் அமெரிக்காவே நடவடிக்கை எடுத்து பாகிஸ்தானுக்குள் புகுந்த ஒசாமா பின்லேடனை கொன்றது ஆகியவை இரு நாடுகளுக்கும் இடையேயான உறவை பாதித்துள்ளது.

ஹக்கானி தீவிரவாத இயக்கம் அல்கொய்தாவுடன் நெருக்கம் கொண்டுள்ளதாகும். ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த இந்த இயக்கத்தினர் நடமாட்டம் பாகிஸ்தான் எல்லைப் பகுதியான வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் காணப்படுகின்றது.


இது அமெரிக்காவுக்கு பெருத்த பிரச்சினையாக உள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து தனது படைகளை 2014 ஆம் ஆண்டுக்குள் அமெரிக்கா முழுவதுமாக விலக்கிக் கொள்ள முடிவெடுத்துள்ள நிலையில் மீண்டும் அங்கு தலிபான்களின் ஆதிக்கம் ஓங்க வழி ஏற்பட்டுவிடுமோ என்கிற ஐயம் அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது. (அ-2)

# கேப்டவுனில் விக்கெட் வேட்டை

# ஆஸி 47 ஓட்டங்களுடன் சுருண்டது

## தென்னாபிரிக்கா முதல் இன்னிங்ஸில் 96 ஓட்டங்களுடன் சரிந்தது



(கேப்டவுன்)

அறிமுக வீரர் பிலாண்டரின் துல்லிய மான வேகத்தில் அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 47 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இது அவுஸ்திரேலிய அணி 109 ஆண்டு களின் பின் டெஸ்டில் இன்னிங்ஸ் ஒன்றில் பெற்ற குறைந்த ஓட்ட எண்ணிக்கையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் வோட்சனின் வேகத்தில் தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் 96 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து அதிர்ச்சியடைந்தது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வ்ருகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று முன்தினம் கேப்டவுனில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணியின் டெஸ்ட் தலைவர் சிமித் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

முதல்நாள் ஆட்டம் மழை காரணமாக 55 ஓவர்கள் மட்டும் வீசப்பட்ட நிலையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்களையிழந்து 214 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 284 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித் தலைவர் மைக்கல் கிளாக் 176பந்துகளில் (22 பவுண்டரிகள் உட்பட) 151 ஓட்டங்களையும் மார்ஷ் 44 ஓட்டங்களையும் ஜோன்சன், சிடில் தலா 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரையன் 4 விக்கெட்டுக்களையும் அறிமுக வீரர் பிலாண்டர், மோர்கல் தலா 3 விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி வோட்சனின் வேகத்தில் முதலாவது இன்னிங்ஸில் 96 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் அணித்தலைவர்சிமித்37ஓட்டங்களையும் றுடொல்ப் 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வோட்சன் 5 ஓவர்கள் மட்டும் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 17 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் றியான் ஹரிஸ் 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.


இந்நிலையில் முதலாவது இன்னிங்ஸில் 188 ஓட்டங்களால் முன்னிலை பெற்ற அவுஸ்திரேலிய அணி, இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 18 ஓவர்களில் 47 ஓட்டங்களை மாத்திரம் சேர்த்து சகல விக்கெட்டுக்களையும் பறி கொடுத்தது.

இதில் இறுதி விக்கெட்டுக்காக லியோன் 14 , சிடில் 12 ஓட்டங்களைச் சேர்த்து இணைப்பாட்டமாக 26 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். முன்னனி வீரர்களான ரிக்கி பொன்டிங், மைக்கல் ஹசி, ஹடின் ஆகியோர் பூச்சியத்துடன் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் தனது முதலாவது டெஸ்டில் விளையாடிய பிலாண்டர் 7 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 15 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் மோர்னி மோக்கல்3, ஸ்ரையன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன் மூலம் 236 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடும் தென்னாபிரிக்க அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டையிழந்து 81 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் சிமித் 36, அம்லா 29 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.



இப்போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம்

இன்றாகும். இந்நிலையில் தென்னாபிரிக்க அணிக்கு வெற்றிக்கு 9 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 155 ஓட்டங்களை எடுக்க வேண்டும்.

**109 ஆண்டுகளின் பின்...**

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 47 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையுமிழந்தது. இதன்மூலம் அவுஸ்திரேலிய அணி 109 ஆண்டுகளின் பின் டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் ஒன்றில் பெற்ற குறைந்த ஓட்ட எண்ணிக்கையாகும். இதற்கு முன் 1902-ம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கு எதிராக பேர்மிங்காமில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 36 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இப்போட்டியின் இரண்டாம் நாளான நேற்று மொத்தம் 23 விக்கெட்டுக்கள் சரிந்துள்ளது.

# ஒரு நாள் தொடரில் சாதிக்குமா இலங்கை?

## இன்று முதல் போட்டி




இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதும் முதலாவது சர்வதேச ஒரு நாள் போட்டி இன்று டுபாயில் நடைபெறுகின்றது.

இப்போட்டி இலங்கை நேரப்படி மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதும் 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரே ஒரு இருபது -20 போட்டி கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் அணி 1:0 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் முதலாவது ஒருநாள் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

இப் போட்டியில் வெற்றி பெற்று தொடரை வெற்றியுடன் ஆரம்பிக்க வேண்டுமென்ற முனைப்பில் இலங்கை அணி களமிறங்குகின்றது.

இலங்கை அணியின் அணித்தலைவர் டில்சான், சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தனா, மத்தியூஸ் என பலமான துடுப்பாட்ட வரிசையுடன் களமிறங்குகிறது.

பந்து வீச்சில்; வேகத்தில் மலிங்க, பெரேரா சாதிப்பர். சுழலில் ராண்டீவ், டில்சான் கை கொடுத்தால் இலங்கை அணிக்கு வெற்றி உறுதி.

அத்துடன் பாகிஸ்தான் அணியில் சகல துறை வீரர் சகிட் அப்ரிடி இணைக்கப்பட்டுள்ளமை அந்த அணிக்கு பலம்.

அத்துடன் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் , யூனிஸ்கான், மொகமட் ஹபீஸ் , தௌபிக் உமர், அசார் அலி ஆகியோர் துடுப்பாட்டத்தில் சாதிக்த வல்லவர்கள்.

பந்துவீச்சில் உமர்குல், யூனைட்டட் கான் வேகத்திலும் சயிட் அஜ்மல், றீமன் சுழலிலும் கைகொடுப்பர்.

சமபலம் வாய்ந்த இரு அணிகளும் இன்று களம் இறங்குவதால்இன்றைய போட்டிவிறுவிறுப்பாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

# குத்துச் சண்டை வீராங்கனைகளுக்கு குட்டை பாவாடை; வலுக்கிறது எதிர்ப்பு

அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றும் வீராங்கனைகளுக்கான ஆடை விதிகள் தொடர்பாக சர்ச்சைகள் எழுந்துள்ளன.

2012-ம் ஆண்டு லண்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் மகளிர் குத்துச் சண்டைப் போட்டிகள் அறிமுகம் செய் யப்படவுள்ளன. ஆனால், இப்போட்டிகளில் பங்குபற்றும் பெண் குத்துச்சண்டை வீராங்கனைகளின் ஆடைகள் தொடர்பாக சர்ச்சை நிலவுகின்றது.

வழக்கமாக குத்துச்சண்டை போட்டிகளில் பங்கு பற்றும் வீராங்கனைகள் ஆண்களைப் போன்று கட்டைக் காற்சட்டையே அணிவது வழக்கம். ஆனால், ஒலிம்பிக் குத்துச் சண்டை போட்டியில் காற்சட்டைகளுக்குப் பதிலாக குட்டைப் பாவாடைகளை அணியுமாறு வீராங் கனைகள் கோரப்படுவர் என செய்திகள் வெளியாகியுள்ளன.

எனினும், இது தொடர்பாக இறுதித் தீர்மா னம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என சர்வதேச அமெச்சூர் குத்துச்சண்டை சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக எதிர்வரும் ஜனவரி மாதம் சந்தித்து கலந்துரையாடி சிபாரிசுகளை செய்யவுள்ளதாக அச்சம்மேளனம் அறிவித்துள்ளது.

இவ்வமைப்பானது பெண் குத்துச் சண்டை வீரர்களின் ஆடை விதிகள் குறித்து இதுவரை இறுதி முடிபெடுக்கவில்லையென தெரிவித்துள்ளது.

பெண்கள் குட்டைப்பாவடை அணிவதானது குத்துச்சண்டை வீரர்களிலிருந்து வீராங்கனைகளை வேறுபிரித்து அறிவதற்கு உதவுமென சர்வதேச அமெச்சூர் குத்துச் சண்டை சம்மேளனம் தேசிய குத்துச் சண்டை சம்மேளனங்களுக்கு அறிவித்திருந்தது.

கடந்த மாதம் நெதர்லாந்தில் இடம்பெற்ற ஐரோப்பிய குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டியில் போலந்து மற்றும் ருமேனியாவைச் சேர்ந்த வீராங்கனைகள் மாத்திரமே குட்டைப் பாவா டை அணிந்திருந்தனர். ஆனால் இதற்கு பலர் எதிர்ப்பும் தெரிவிக்கின்றனர்.

3 தடவை சம்பியன் பட்டம் பெற்ற அயர்லாந்து வீராங்கனை கெட்டி டெய்லர் கடந்த வாரம் இது தொடர்பாக பிபிசிக்கு கருத்து வெளியிடுகையில், தான் குட்டைப் பாவாடை அணியப் போவதில்லை எனக் கூறியிருந்தார்.

நான் இரவில் வெளியில் செல்லும்போது கூட குட்டைப்பாவடை அணிவதில்லை. அதனால் நிச்சயமாக குத்துச்சண்டை அரங்கில் குட்டைப் பாவாடையை அணிய மாட்டேன் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆடைகள் தொடர்பான சர்வதேச அமெச்சூர் குத்துச் சண்டை சம்மேளனத்தின் இக் கொள்கை இந்தமாத இறுதியில் நடை பெறவுள்ள ஒலிம்பிக் குத்துச்சண்டை பரீட்சார்த்த போட்டிகளின் போது மீண்டும் ஈர்க்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒலிம்பிக் போட்டிகளில் 3 எடைப் பிரிவுகளில் பெண்கள் போட்டியிட அனுமதிக்கப்பட்டுள் ளனர். பிளை வெயிட், லைட் வெயிட் , மிடில் வெய்ட் ஆகிய ஒவ்வொரு பிரிவுகளிலும் தலா 12 போட்டியாளர்கள் போட்டியிடவுள்ளனர்.

## எங்கு சென்...

பேச்சுக்களில் எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

அவர்கள்எந்தநாட்டுக்குவிஜயம்மேற்கொண்டு வந்தாலும் இறுதியில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கைக்கே வரவேண்டும். இலங்கை அரசுடனேயேபேச்சுநடத்தவேண்டும்என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றார். (எ-5)

## உடை...

பகுதியில் அமைக்கப்பட்ட இந்திய வீடமைப்பு திட்டத்தின் ஒரு வீடு, கிணறு ஒன்றை மூடி விட்டு அதற்கு மேல் அத்திபாரம் இட்டு கட்டப்பட்டுள்ளது. இதனால் மழை வெள்ளம் மண்ணை அரித்து வீட்டின் கீழ்ப்பகுதிக்குள் நுழைந்துள்ளது. அத்துடன் குறித்த வீட்டுக்கு சமையல் அறை அமைக்கப்படவில்லை என்பதும் குறைபாடு.

இந்நிலையில் அதிகாரிகளின் அறிவுரையில் குறித்த வீடு கட்டும் பணி நிறுத்தப்பட்டு அதற்கு அருகாமையில் புதிய வீடு அமைக்கப்பட்து.

அத்துடன்முன்னர் கட்டப்பட்ட வீடு இடிப்பதற்கு முடிபெடுக்கப்பட்டுள்ளது. (ச-5)

**TILKO JAFFNA CITY HOTEL**

TILKO hotel

70/6, K.K.S ROAD, JAFFNA. T.P:0212225969

Web:cityhoteljaffna.com
e-mail:info@hoteljaffna.com

Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non Ac Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers

*Await Opening*
*Special Barbaque at our Garden Cafeteria*
*Inclusive of Chines/Indian Jaffna Authentic*
*Variety Cuisine s From our open hot ranga Kitchen*



உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிரூட்டபட்ட, குளிரூட்டபடாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள், திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள், வியாபார நிறுவன ஒன்றுகூடல்களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு போதி செய்யப்பட் உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...

இந்தியா, சீனா மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...

மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட வுள்ளது.

உங்கள் வியாபார நடவடிக்கைகள்
மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு
யாழ் நகரில்...

T.P.:077 6943479
K.Gunaseelan
Marketing Executive



**NIRU TUITION CENTRE**
KONDAVIL

A/L இந்துநாகரிகம்

2012 : உபநிடதங்கள்
2013 : அறுவகை சமயங்கள்

2012 வினாவிடை வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது.

ஆசிரியர் திரு. சிவமகாலிங்கம் (3896)


## புத்தளத்...

இதன்போது, ரி-56 ரக துப்பாக்கி மற்றும் அதற்கான ரவைகள், ரிபிட்டர் துப்பாக்கி மற்றும் கைக்குண்டொன்று, கூரிய கத்திகள் மற்றும் இராணுவ உடைகள் உட்பட பல பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

19 இடங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்ட நிலையில் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். (ச-பா)


**இடமாற்றம்**

இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி** ஸ்தாபனம்

10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு : 021 222 4134




## கிளி.கல்...

மனித உரிமை ஆணைக் குழுவில் அவரது மனைவி முறையிட்டுள்ளார்.

இதேவேளை கைது செய்யப்பட்ட கோகுலன் வவுனியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழு அவரது குடும்பத்தினருக்கு அறிவித்துள்ளது.

எனினும் அவரைப் பார்ப்பதற்கு உறவினர்கள் அனுமதிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சி கல்வி வலய சங்கீதப்பாட ஆசிரிய ஆலோசகர் கு.கோகுலன் கைது செய்யப்பட்டமை தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் முறையிடப்பட்டுள்ளது. (எ-1)

## மீனவர் தாக்க...

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பாகிஸ்தான் பிரதமர் யூசுப்ரஸாகிலானியும்நேற்றுவியாழக்கிழமை மாலை தீவின் அட்டு நகரில் சந்தித்து கலந்துரையாடினர். வர்த்தகம், பாதுகாப்பு, கலாசாரம், மக்களுக்கிடையிலான தொடர்புகள் ஆகியவற்றில்இரு நாடுகளின் உறவுகளை விஸ்தரிப்பதற்கு இரு தலைவர்களும் இணக்கம் கண்டனர்.

அதேவேளை தெற்காசிய பிராந்தியத்திலுள்ள மக்களின் நன்மைக்காகவும் வர்த்தகம், பொருளாதார செயற்பாடுகள் என்பவற்றை ஊக்குவிப்பதற்காகவும் சார்க் அமைப்பை மேலும் வினைத்திறனானதாக்க வேண்டும் என யூசுப் ரஸா கிலானி கூறினார்.

பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சர் ஹீன ரப்பானிகார், உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் ஆகியோரும் இச்சந்திப்பில் பங்குபற்றினர்.

இதைவிட சார்க் நாடுகளின் தலைவர்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனித்தனியாக சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## தமிழ்...

நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய நாடுகளின் பிரதி அரசியல் துறை அதிகாரி மற்றும் பிரித்தானியாவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை சந்தித்து தமிழ்மக்களின் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக சர்வதேச உதவியின் அவசியத்தை தாம் வலியுறுத்தியதாக சுமந்திரன் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு பயணத்துக்கான கூட்டமைப்பின் குழுவில் இரா.சம்பந்தன் தலைமையில் சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதி ராஜா, சுமந்திரன் ஆகியோர் அடங்கியிருந்தனர். (எ-5)

## தேவை

பத்திரிகை விநியோகஸ்தர்கள் உடன் தேவை. மோட்டார் சைக்கிள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் நேரில் வரவும்.
(வலம்புரி அலுவலகத்திற்கு அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

மனிதவள முகாமையாளர்
வலம்புரி
இல. 3, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

## யாழின் அபிவிருத்திக்கான...

சுட்டநிதியைதருமாறுகோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முதலாம்கட்டநிதியில்முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்கான கணக்குகள் இன்னும் வந்தடையாத நிலையில்மேலதிகமாகவடமாகாணத்தில் 11ஆயிரம் மில்லியன் ரூபாய் வேலைத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவற்றை செய்வதயின் முதலாம் கட்ட நிதிக்கான கணக்குகள் காட்டப்பட வேண்டும்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் 600 மில்லியன் ரூபாய்திட்டம் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டது.

என்றிப் திட்டத்தின் கீழ்மேற்கொள்ளப்படும் 80 வீதமான வேலைத் திட்டங்களுக்கு மாகாணசபையே நிறைவேற்றுமுகவர்களாக உள்ளனர்.

வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களிலும்பிரதித்திட்டப்பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் ஊடாகவே இந்த வேலைத் திட்டங்களை மேற்பார்வை செய்து வருகின்றோம்.

வேலைத்திட்டங்களில் குறைப்பாடுகள் ஏற்பட்டால் அந்த வேலைத் திட்டங்களுக்கு பொறுப்பாகவுள்ள திணைக்களங்களுக்கு அறிவித்து அதை சரிவர மேற்பார்வை செய்து வருகின்றோம். இந்த நிலையில் வேலைத் திட்டங்களை பொறுப்பேற்ற ஒப்பந்த காரர்களுக்கு உரிய முறையில் பணம் சென்றடையாத காரணத்தினால் திட்டங்கள் பாதிப்படைகின்றன.

அத்தோடு 30 வருடமாக யுத்தம் நடைபெற்றதால் உடனடியாக திட்டங்களை விரைவு படுத்த முடியாத நிலையும் உள்ளது.

இதுவரை வாகனப் போக்குவரத்து அதிகரித்திருப்பதனால் வீதிகள் மிகவேகமாக பாதிப்படைந்து வருகின்றது.

இதனால் வீதி அபிவிருத்திப் பணிகளை துரிதமாகசெய்ய வேண்டியுள்ளது. அத்தோடு முதலாம் கட்ட நிதிக்கான கணக்குகள் இன்னும் ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்கப்படும் என அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இதற்கு பின்பு ஏனைய திட்டங்கள் தொடர்பாக தீர்மானிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்தக் குழுவினர் தெல்லிப்பழை, மருதங்கேணி, அரியாலை ஆகிய பகுதிகளுக்கும் விஜயம்மேற்கொண்டுதிட்டங்களைப் பார்வையிட்டனர்.

இந்தக்குழுவில் உலக வங்கியின் சிரேஷ்ட ஆலோசகரும் என்றிப் திட்ட அமுல்படுத்துகைத் தலைவர் ஆர்.மனோகரன், என்றிப் திட்ட உதவித் திட்டப் பணிப்பாளர் நிமால் பெர்ணான்டோ உள்ளிட்ட குழுவினர் வருகை தந்திருந்தனர். (எ-6)


'வரலாற்றில் புதியதோர் வரலாறு படைப்போம்'

வரலாறு A/L

DCM கல்வி நிறுவனம்
வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில், யாழ்.நகர்.

R.R. ஆனந்தன் (6778)

சனி, ஞாயிறு 2013 -11 மணி
2012 - 1 மணி
(வினா விடை வகுப்பு)

குறிப்பு: பிறிதொரு பாடத்திலிருந்து மாறி, வரலாறு கற்ற 16 மாணவர்களை, 6 மாதங்களில் தயார்ப்படுத்தி, அதில் 11 மாணவர்களை 'A' பெறுபேறு எடுக்க வைத்த சாதனை ஆசிரியர்.
பகுதி Iக்கான வினாவிடை வகுப்பானது 40/40 சரி எடுப்போம் என்ற தலைப்பில் இடம்பெறும்.



யாழ்மண்ணில் (வடக்கில்) ஐந்தாண்டு சேவையாற்ற ஆதரவளித்த வாடிக்கையாள பெருந்தகைகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

5 ஆண்டு

* நியாய விலை!
* உயரிய தொழில்நுட்பம்!!
* நவீன முறை!!!

கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்

**யாழில் M கொழும்பு பிறிண்டேர்ஸ்**
666, கே.கே.எஸ் றோட் (யாழ் இந்துக் கல்லூரி அருகாமை)



**யாழ். நகரில் இலவசக் கருத்தரங்கு**

கருத்தரங்கில்

- யாழ். நகரில் தொழில் வாய்ப்பு, உள்நாட்டு வெளிநாட்டு உயர் கல்வி சம்பந்தமான இலவசக் கருத்தரங்கு.
- நீங்களும் ஓர் ஆசிரியராகலாம்.
- நீங்களாகவே மாதாந்த சுயவருமானத்தைத் தேடிக்கொள்ளலாம்.
- நீங்களும் கல்வி நிறுவனம் ஒன்றை சுயமாக ஆரம்பிக்கலாம்.
- London, USA, Canada மற்றும் ஏனைய Europe நாடுகளில் உயர் கல்வி
- கனடா நாட்டின் புதிய வேலை வாய்ப்புக்கள்.

இன்னும் பல சுவாரஸ்யமான விடயங்களை இந்த இலவசக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பயனடையுங்கள். ஆர்வமுடையோர், பெற்றோர், மாணவர்கள் அனைவரும் வரலாம். அனுமதி இலவசம்.

இடம் : GREEN GRASS HOTEL
Asirwatham Lane, No. 33, Hospital Road, Jaffna.
காலம் : 12.11.2011 சனிக்கிழமை (இலவசக் கருத்தரங்கு
13.11.2011 ஞாயிற்றுக்கிழமை (நேரடிச் சந்திப்பு)
நேரம் : காலை 9.30 முதல்

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.

GREENWICH COLLEGE
No. 34, Galle Road, Dehiwala.
தொடர்புகளுக்கு : 0775083460, 0771019093

அனுமதி இலவசம் (6776)



உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்திட

நல்லூர் திருமணப் பட்டுப் புடைவைகளின் சாம்ராஜ்யம்

**சரவணா புடைவையகம்**

NALLUR
**SARAVANA TEX**





770,772, K.K.S Road,
Thaddatheru Junction, Jaffna.
T.P.: 021 222 0421 Fax: 021 222 0421

526, 529, Pointpedro Road,
Nallur, Jaffna.
T.P.: 021 222 1723 Fax: 021 222 1723

Email: nallur.saravana@gmail.com

526, பருத்தித்துறை வீதி,
நல்லூர் வீதி(பின் வீதி), சிவன் கோவில் அருகில், யாழ்ப்பாணம்.

770,772, கே.கே.எஸ் வீதி,
தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.



**பிறந்தநாள் வாழ்த்து**

கௌரவ அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா

10.11.2011 ஆம் நாளில்
54ஆவது அகவை கண்ட
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்
சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி
அமைச்சர் கௌரவ கே.என். டக்ளஸ் தேவானந்தா
அவர்களை நீடூழி காலம் வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.



நன்றியுடன்
தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்
கிளிநொச்சி. (கி-4848)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.